புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | ஜூலை 07, 2011 | புரட்சி 10 | முழக்கம் 25 | விலை: ரூ.2.50

## சாதி தீண்டாமைக் கொடுமைகளை ஒழிப்போம்:

# பொள்ளாச்சி பயிற்சி முகாமில் தோழர்கள் உறுதி



கோவை தெற்கு மாவட்டக் கழக சார்பில் கழகப் பொறுப்பாளர்களுக்கும், களப்பணியாளர்களுக்குமான பயிற்சி முகாம் கடந்த ஜூலை 2, 3 தேதிகளில் சிறப்புடன் நடந்தது. சூலூருக்கு அருகே இயற்கை எழில் சூழ்ந்த பசுமைப் பண்ணையில் கழகத் தோழர்கள் இந்தப் பயிற்சி முகாமை நடத்தினர். 10 பெண்கள் உட்பட 40 தோழர்கள் பயிற்சி வகுப்பில் பங்கேற்றனர். பயிற்சியில் பங்கேற்கும் தோழர்கள் அனைவரும் முதல் நாள் இரவே முகாம் நடைபெறும் இடத்துக்கு வந்து சேர்ந்து விட்டனர்.

இரண்டு நாள்களிலும் விடியற்காலையில் தமிழ்நாடு 'உதைகுத்துச் சண்டைக் கழக' அமைப்பாளர் தோழர் கோ. சிவபெருமாள் உடற்பயிற்சி முறைகளை பயிற்றுவித்தார். ஒரு மணி நேரம் தோழர்கள் உடற்பயிற்சியில் ஈடுபட்டனர். ஜூலை 2 ஆம் தேதி காலை 10 மணியளவில் அரங்கிற்கு வெளியே பசுமையான புல்வெளியில் பயிற்சி முகாம் தொடங்கியது. முகாமுக்கு அமைப்பாளராக இருந்து ஒருங்கிணைத்து வழி நடத்திய மாவட்ட செயலாளர் கா.சு. நாகராசன் முகாமின் நோக்கங்களை விளக்கினார். மாவட்ட தலைவர் கலங்கல் மு. வேலுசாமி தலைமை உரையாற்றினார். பயிற்சியாளர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர். முதல் வகுப்பாக கழகப் பொதுச் செயலாளர் கோவை கு. இராமகிருட்டிணன், இன்றைய சூழலில் 'பெரியாரின் தேவையும் இளைஞர் கடமையும்' என்ற தலைப்பில் வகுப்பு எடுத்தார். பெரியார் காலத்துக்கு முந்தைய சமுதாயம் பார்ப்பனக் கொடுமைகளால் சீரழிந்து கிடந்த வரலாறுகளையும் பார்ப்பனர்கள் இப்போதும் தங்கள் 'வர்ணாஸ்ரமக் கொள்கைகளை' விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருப்பதையும் வரலாற்றுச் சான்றுகளுடன் விளக்கி, பெரியார் வாழ்க்கையில் அவர் வாழ்ந்து காட்டிய எளிமை, சிக்கனம், கொள்கை உறுதிகளை எடுத்துக் காட்டியும் ஒரு மணி நேரத்துக்கும் அதிகமாகப் பேசினார். தொடர்ந்து பயிற்சியாளர்கள் ஒவ்வொருவரும் பெரியார் கொள்கையை நோக்கி, தாங்கள் வருவதற்குக் காரணமாக அமைந்த அனுபவங்களை, விளக்கிப் பேசியது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. ஆர்.எஸ்.எஸ். அமைப்புகளிடம் போய், பிறகு பெரியார் கொள்கையை நோக்கி, மீண்டு வந்த தோழர்கள், தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். சாதி - தீண்டாமை ஒடுக்குமுறைகளை தங்களின் பகுதிகளிலிருந்து முழுமையாக ஒழித்துக் கட்டுவோம் என்று தோழர்கள் உறுதியுடன் தெரிவித்தனர். மதிய உணவுக்குப் பிறகு தோழர் சிற்பிராசன், 'புத்தி வந்தால் பக்தி போகும்' என்ற தலைப்பில் மூட நம்பிக்கைகளுக்கு எதிரான பகுத்தறிவு கருத்துகளையும் அன்றாட வாழ்க்கையில் பின்பற்றப்படும் மூடநம்பிக்கைகளையும் அவை அறிவியலுக்கு எதிரானவை என்பதையும் விளக்கிப் பேசினார்.

தேனீர் வேளைக்குப் பிறகு கழகத் தலைவர் கொளத்தூர் மணி 'பெரியார் காண விரும்பிய தமிழ் தேசம்' எனும் தலைப்பில் வகுப்பு எடுத்தார். தமிழர் சமூக வரலாற்றில் உழைப்புச் சுரண்டல் உருவான காலத்தையும், பார்ப்பனர்கள் தங்களது சாதி, வர்ண பண்பாட்டை தமிழர்கள் மீது திணித்து, தமிழர் சமுதாயத்தை பார்ப்பனர்களுக்கு அடிமைகளாக மாற்றியமைத்து, அதை தமிழர்கள் ஏற்கச் செய்ததையும் விரிவாக விளக்கியதோடு, தமிழர்களின் பண்பாட்டுத் தளத்தில் பார்ப்பனியத்திடமிருந்து மீட்டெடுக்க பெரியார் முன் வைத்த அடையாளமே 'திராவிடர்' என்றும், அரசியலில் விடுதலைக்கு பெரியார் வலியுறுத்திய அடையாளம் 'தமிழன்' என்றும் விளக்கினார். திராவிடர், தமிழர் குறித்து பயிற்சியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு விளக்கமளித்தார். கழகத் தலைவர் உரையைத் தொடர்ந்து பயிற்சியாளர்கள் பங்கேற்ற விளையாட்டுப் போட்டிகள் நடந்தன.

அதனைத் தொடர்ந்து பயிற்சியாளர்களிடையே சிற்பிராசன் கலந்துரையாடி, பயிற்சியாளர்கள் எழுப்பிய அய்ய வினாக்களுக்கு விளக்கமளித்தார். கழகத் தோழர் சூலூர் பன்னீர்செல்வம் புதிய அமைப்புகளை உருவாக்க வேண்டிய அவசியம்; அதற்கான செயல்முறை, அணுகுமுறைகளை விளக்கிக் கூறினார். இரவு உணவுக்குப் பிறகு, கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், சிற்பிராசன் தோழர்களோடு பயிற்சி முகாமில் பகிர்ந்து கொண்ட கருத்துகள் பற்றி கலந்துரையாடினர். இரவு 10 மணியளவில் முதல் நாள் பயிற்சி நிறைவடைந்தது.

இரண்டாம் நாள் ஜூலை 3, ஞாயிறு காலை 9 மணியளவில் பயிற்சி முகாம் தொடங்கியது. முதல் வகுப்பாக 'பெரியார் தொண்டர்களின் பெரும் பணி நேற்றும், இன்றும்' - என்ற தலைப்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், 'சாதி எதிர்ப்பு - இந்து மத எதிர்ப்பு, கடவுள் எதிர்ப்பு, இந்திய தேசிய எதிர்ப்பு' - என்ற எதிர்ப்புகளுக்கிடையே உள்ள தொடர்புகளை விளக்கியும், பெரியார் திராவிடர் கழகத்தினர் செயல்பாடுகள், அதன் வரலாற்றுத் தேவைகளையும் விளக்கிப் பேசினார். தேனீர் இடைவேளைக்குப் பிறகு தோழர் ஓவியா, 'ஒடுக்குமுறைகளின் கடும் எதிரி பெரியார்' - எனும் தலைப்பில் வகுப்பு எடுத்தார். பெரியார் தான் ஏற்றுக் கொண்ட கொள்கையை முதலில் தமது குடும்பத்தில் பின்பற்றச் செய்ய வைத்ததையும், அதற்குப் பெரியார் பின்பற்றிய 'வற்புறுத்தல்' இல்லாத அணுகுமுறையையும் - பெண்களின் விடுதலைக்கு பெரியார் முன் வைத்த கருத்துகளையும் பெண்கள், தங்களின் விடுதலைக்கு, ஆண்களைச் சார்ந்து நின்றால், எந்த முன்னேற்றத்தையும் எட்ட முடியாது என்பதையும் பெண்களின் பங்களிப்பு இல்லாமல், சாதி ஒழிப்பு இயக்கம் வெற்றி பெற முடியாது என்றும் விரிவாக விளக்கினார். பயிற்சியாளர்கள் ஆர்வமுடன் எழுப்பிய கேள்விகளுக்கு விளக்கமளித்தார். மதிய உணவுக்குப் பிறகு சிற்பிராசன் 'மந்திரமா? தந்திரமா' நிகழ்ச்சி நடத்தினார். தொடர்ந்து களப்பணிகளில் கழகத் தோழர்கள் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறைகளை விளக்கி கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றி, பயிற்சி முகாமை நிறைவு செய்தனர். பயிற்சியாளர்களுக்காக தயாரிக்கப்பட்ட குறிப்புகளடங்கிய கையேடுகளை பயிற்சியாளர்களுக்கு கழகத் தலைவர் வழங்கினார். இரண்டு நாள் பயிற்சி தங்களுக்கு பெரியாரியல் பற்றிய புரிதலையும் உற்சாகத்தையும் தந்தது என்றும், களப்பணிக்கும் பரப்புரைக்கும் பெரிதும் பயன்படக் கூடியதாக இருந்தது என்றும் பயிற்சியாளர்கள் தெரிவித்தனர்.

மாவட்ட செயலாளர் கா.சு. நாகராசன் நன்றி கூற, 5 மணியளவில் முகாம் நிறைவடைந்தது. தோழர்கள் அனைவரும் முகாம் நினைவாக புகைப்படம் எடுத்துக் கொண்டு பிரியா விடை பெற்றனர். வளர் இளம் பருவத்தினரும் இளைஞர்களும் பங்கேற்ற இந்த பயிற்சி முகாம் கட்டுப்பாட்டுடனும் பயிற்சியாளர்களின் பங்கேற்பு ஆர்வத்துடனும் தோழமை நெகிழ்வுடன் நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும். இயற்கையான பசுமைச் சூழலில் பகுத்தறிவு, சாதி ஒழிப்புக் கொள்கையையும் அதை வாழ்வியலாக்கும் உணர்வுகளையும் சிந்தனையிலும் உள்ளத்திலும் பதிய வைத்தது, இந்த பயிற்சி முகாம்.

**– நமது செய்தியாளர்**

# மத்திய பல்கலைக்கழகங்களில் பார்ப்பனர்களின் ‘வழிப்பறி’

டெல்லி பல்கலைக் கழகம், ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம் உள்ளிட்ட மத்திய பல்கலைக் கழகங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை பாதியளவுக்குக்கூட நிரப்பாமல், பொதுப் போட்டிக்குக் கொண்டு போகும் ‘பார்ப்பன கொள்ளை’ நடைபெற்று வருகிறது. 2010-11 ஆம் ஆண்டில் மத்திய பல்கலைக் கழகங்களின் கீழ் உள்ள 31 கல்லூரிகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கப்பட்ட 7,420 இடங்களில் 3396 இடங்களில் மட்டுமே பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது 27 சதவீத பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டில் 12 சதவீதம் மட்டுமே. எஞ்சிய 15 சதவீத இடங்களை அப்படியே பொதுப் பட்டியலுக்கு கொண்டுபோய் விட்டனர். மத்திய பல்கலைக்கழகங்களிலே பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இடஒதுக்கீடு செய்யும் சட்டம், 2006 ஆம் ஆண்டு தான் பார்ப்பனர்களின் கடும் எதிர்ப்புக்குப் பிறகு நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது.

இந்தச் சட்டத்தின்படி பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விண்ணப்பிக்க திறந்த போட்டியில் மனு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட மதிப்பெண்ணைவிட 10 சதவீதம் குறைவாக நிர்ணயிக்கப்பட்டது. 2006 ஆம் ஆண்டு சட்டம் இதைத் தெளிவாகக் கூறிய பிறகும் பல்கலைக்கழக பார்ப்பனர்கள் கேள்வி கேட்க ஆள் இல்லை என்ற இறுமாப்பில் இதில் புதிய அளவுகோலைப் புகுத்தினர். இதன்படி பொதுப் போட்டியில் சேர்க்கப்படும் மாணவர்களில் கடைசி மாணவன் பெற்றுள்ள ‘கட்-ஆப்’ மதிப்பெண்களைவிட 10 சதவீதம் குறைவாகப் பெற்றுள்ளவர்கள் மட்டுமே பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கவே முடியும் என்ற முறையைப் புகுத்தி, பிற்படுத்தப்பட்ட மாணவர்களே மனு செய்ய விடாமல் தடுத்து விட்டனர். மாணவர் சேர்க்கைக்கான குறைந்தபட்ச மதிப்பெண் என்பதற்கும், ‘கட்-ஆப்’ மதிப்பெண் என்பதற்கும் வேறுபாடு உண்டு. **இந்தியாவில் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்வோரை, அவர்களது வாழ்நிலையை வைத்துத்தான் மதிப்பிட வேண்டுமே தவிர, டாட்டா, அம்பானியின் வருமானத்தோடு ஒப்பிட்டு, நிர்ணயம் செய்ய முடியாது.** அம்பானியின் மொத்த வருவாயில் 50 சதவீதம் குறைந்தவர்களாக இருப்பவர்களாக இருந்தால் மட்டுமே வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கான அரசின் சலுகைகளைப் பெற முடியும் என்று அறிவித்தால், அது கடைந்தெடுத்த கயமை அல்லவா என்று கேட்கிறோம். பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு குறைந்தது 27 சதவீத இடங்களாவது ஒதுக்கப்பட வேண்டும் என்ற இடஒதுக்கீட்டுக் கொள்கையின் நோக்கத்தையே இது முறியடிப்பதாகும்.

பெரியார் - தமிழ்நாட்டில் தொடங்கி வைத்த சமூகநீதி என்ற இடஒதுக்கீடு உரிமைப் போராட்டம் மண்டல் அறிக்கை அமுலாக்கம் வழியாக இந்தியா முழுதும் பரவினாலும்கூட அந்த உரிமைகளைப் பேணி பாதுகாத்துக் கொள்ளக்கூடிய விழிப்புணர்வு இன்னும் வடமாநிலங்களில் வராத நிலையே தொடருகிறது. ஆனாலும், இப்போது டெல்லியில் விழிப்புணர்வுள்ள சமூகநீதிப் போராளிகள் வரத் தொடங்கியிருப்பது இனியும் ஏமாற்ற முடியாது என்று பார்ப்பன ஆதிக்க சக்திகளுக்கான எச்சரிக்கையாகும். டெல்லி பல்கலைக்கழகத்தில் ‘இடஒதுக்கீடு அமுலாக்கக் குழு’ என்ற அமைப்பை சமூகநீதியாளர்கள் உருவாக்கி, இந்த அநீதிகளுக்கு எதிராக நியாயம் கேட்கத் தொடங்கி விட்டனர். இந்தக் குழுவின் சார்பிலும், டெல்லி பல்கலைக் கழகத்தில் ஆங்கிலத் துறை பேராசிரியராக பணியாற்றும் பேராசிரியர் ஹனிபாபுவும், டெல்லி உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் டெல்லி உயர்நீதிமன்றம் பிற்படுத்தப்பட்ட மாணவர் சேர்க்கையில் தேர்வுகளில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையே கவனத்தில் கொள்ள வேண்டுமே தவிர, பொதுப் போட்டியில் இடம் பெற்றவர்களின் ‘கட் ஆப்’ மதிப்போடு இணைத்து நிர்ணயிக்கக் கூடாது என்று தெளிவாகக் கூறிவிட்டது.

இந்த நிலையில் தமிழ்நாட்டில் அய்.அய்.டி. இயக்குனராக இருந்து ஓய்வு பெற்றவரும், இட ஒதுக்கீட்டை ஒழிப்பதே தனது வாழ்நாள் லட்சியமாகக் கருதி செயல்பட்டு வருபவருமான பி.வி. இந்திரேசன் என்ற பார்ப்பனர், உயர்நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து, உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளார். இந்த வழக்கில் தங்களையும் இணைத்துக் கொள்ளுமாறு இடஒதுக்கீட்டு அமுலாக்கக் குழுவும், பேராசிரியர் ஹனிபாபுவும் மனு செய்துள்ளனர். பொதுப் போட்டிக்கான இடங்களை 11,957-லிருந்து 16,692 ஆக உயர்த்திக் கொண்டு விட்டனர் என்ற அதிர்ச்சியான உண்மை, இவர்கள் தாக்கல் செய்த மனுவிலிருந்து தெரிய வருகிறது.

இந்த மத்திய பல்கலைக்கழகங்கள் பிற்படுத்தப்பட்டோருக்கான உரிமைகளை அலட்சியப்படுத்தி புறந்தள்ளி வருவதற்கு சான்றாக மற்றொரு செய்தியும் வெளி வந்துள்ளது. புதுடில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை நிரப்புவதற்காக ஒதுக்கப்பட்ட நிதியை நாற்காலி, மேசைகள் வாங்குவதற்கும், வெளிநாடுகளுக்கு சுற்றுலா போவதற்கும், சர்வதேச மாநாடுகளில் பங்கேற்பதற்கான செலவுக்கும் செலவிட்டுள்ளதாக மத்திய தணிக்கைத் துறை சுட்டிக்காட்டியுள்ளது. 2005 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை பிற்படுத்தப்பட்டோர் முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டு ஒதுக்கப்பட்ட நிதி அதற்கான நோக்கத்தில் செலவிடப்பட்டுள்ளதா என்பதை தணிக்கைக் குழு ஆராய்ந்தபோது, இந்த உண்மைகள் வெளிவந்துள்ளன. பல்கலைக் கழகத்தின் 3 சிறப்பு மய்யங்கள்; இது தவிர, 8 பள்ளிகள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மேம்பாட்டுக்காக அமைக்கப்பட்ட சிறப்பு மய்யங்களில் தணிக்கை செய்த போது, பிற்படுத்தப்பட்டோர் நிதியை அவர்களுக்காகப் பயன்படுத்தாமல் 26 முறைகேடான வழிகளில் திருப்பி விடப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

இது தவிர, ஜவகர்லால் நேரு பல்கலையில் பணி நியமனங்களில் நடந்துள்ள பல்வேறு முறைகேடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பட்டபடிப்பு, பட்ட மேல்படிப்புகளில் சேர்ந்த மாணவர்கள், படிப்பை முழுமையாகத் தொடராமல் பாதியில் விட்டுச் செல்வது 35-லிருந்து 48 சதவீதம் வரை இருந்தும் பல்கலைக்கழக நிர்வாகம், இதற்கான காரணத்தைக்கூட பரிசீலிக்காமல் இருப்பதையும், தணிக்கை குழு வியப்புடன் சுட்டிக் காட்டியிருக்கிறது. மத்திய பல்கலைக் கழகங்களில் பார்ப்பன ஆதிக்கம் தலைவிரித்தாடுவதும், ஆட்சி அதிகார மய்யம் ‘அவாளிடம்’ முடங்கிக் கிடப்பதும் தான் இதற்கு அடிப்படையான காரணம்.

மத்திய பல்கலைக் கழகங்களில் சேருவதற்கான உரிமை அனைத்து மாநில மாணவர்களுக்கும் உண்டு. என்றாலும், உ.பி., பீகார் மாநிலங்களிலிருந்து மட்டுமே 10,000 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இதர மாநிலத்திலுள்ள மாணவர்களுக்கு இது பற்றிய தகவல்கள் தெரியாத காரணத்தால், ஏனைய 20 மாநிலங்களிலிருந்து 1000 விண்ணப்பங்கள் மட்டுமே வந்துள்ளன.

இடஒதுக்கீட்டுக்கான சட்டங்கள் வந்ததால் மட்டும் பயனில்லை. அவை அமுலாக்கப்படுவதே முக்கியம். சட்டங்கள் வந்த பிறகும் சட்டங்களை குப்பைக் கூடைக்குள் வீசி எறியும் ஆணவத்துடனேயே பார்ப்பனர் இப்போதும் செயல்பட்டுக் கொண்டிருப்பதையே இது காட்டுகிறது. ✦

## 2000 ஆண்டு தடை தகர்த்து கருவறைக்குள் பெண்கள்

கோயில் கருவறைக்குள் பார்ப்பனர்கள் மட்டுமே அர்ச்சகர்களாக நுழைய முடியும் என்ற பார்ப்பன ஆதிக்கம் தமிழ்நாட்டில் ஆகமக் கோயில்களில் இன்றும் பின்பற்றப்படுகிறது. தமிழக சட்டமன்றத்தில் இரண்டு முறை அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகும் உரிமைக்கு அனுமதி அளித்து ஒரு மனதாக சட்டம் நிறைவேறிய பிறகும் பார்ப்பனர்கள் உச்சநீதிமன்றத்தில் சட்டமன்றத் தீர்மானத்தை முடக்கி விட்டனர். அனைத்து சாதி யினருக்கும் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளைத் தமிழக அரசு நடத்தியது. பயிற்சிப் பெற்ற பார்ப்பனரல்லாத இளைஞர்கள் உச்சநீதிமன்றத் தடையினால் அர்ச்சகர் ஆக முடியவில்லை. இந்த நிலையில் வடநாட்டில் முக்கிய கோயில்களில் கோயில் கர்ப்பக்கிரகம் வரை பக்தர்களே நேரடியாக சென்று கடவுளை வழிபடும் முறை உள்ளது. மராட்டியம், இதில் இன்னும் ஒரு படி மேலே போய் பெண்களையும் கருவறைக்குள் அனுமதிக்க முன் வந்துள்ளது. மகாராட்டிர மாநிலம் கோலாப்பூரில் பிரபலமான மகாலட்சுமி கோயில் உள்ளது இக்கோயில் கருவறைக்குள் கடந்த 2000 ஆண்டுகளாக பெண்கள் செல்ல தடை இருந்தது. பெண்களையும் கருவறைக்குள் அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை பெண்கள் முன் வைத்தனர். இதனைத் தொடர்ந்து மாநில உள்துறை அமைச்சர் கடேஜ் பட்டேல் என்பவர் தலைமையில் கோயில் நிர்வாகக் குழுவினர், அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் கோயில் கருவறைக்குள் பெண்களையும் அனுமதிக்கலாம் என்ற முடிவு எடுக்கப்பட்டது. இப்போது, பெண்கள் கருவறை வரை சென்று, மகாலட்சுமி கோயிலில் ‘தரிசனம்’ செய்கிறார்கள்; 2000 ஆண்டுகால தடை உடைந்தது.

## சுவரெழுத்து சுப்பையா பற்றி நடிகர் சத்யராஜ்

சுவர்களில் அப்படியெல்லாம் நெத்தியடி வாசகங்களை (பிள்ளை பெற அரச மரத்தைச் சுற்றினால், அபார்ஷனுக்கு எந்த மரத்தைச் சுற்றுவாய்!) எழுதுகிற ஆள் யாருன்னு அப்போது எனக்குத் தெரியாது. நானும் விசாரித்தது கிடையாது. சமீபத்தில் - அதுவும் கடந்த ஒரு மாதம் முன்புதான் தெரிந்தது... அவர் பேர் சுவர் எழுத்து சுப்பையா’.

கோயம்புத்தூரில் இருந்து ஒரு விழாவில் கலந்து கொள்ள என்னை அழைக்க வந்திருந்தார்கள். “சுவர் எழுத்து சுப்பையா அவர்களின் சுவர் எழுத்துகளை எல்லாம் சேர்த்து ஒரு புத்தகமாக வெளியிடுகிறோம்” என்றார்கள். “யாருங்க அந்த சுவர் எழுத்து சுப்பையா?” என்று அவர்களிடம் விசாரித்தபோது, உண்மை தெரிந்தது.

“ஒரு பெரியார் தொண்டர். அவர் எப்படின்னா.. கோயம்புத்தூர், திருச்சி, திருப்பூர் என்று ஊர் ஊரா போவார். கையிலே கறுப்பு பெயின்ட், பிரஷ் வைத்திருப்பார். நாள் முழுக்க பெரிய, பெரிய சுவர்களில் எல்லாம் தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கைகளை எழுதிக்கிட்டே போவாரு.

அங்கே இருக்கிற ஏதாவது பெரியார் தொண்டரின் வீட்டில் சாப்பாடு. திண்ணையிலே படுத்துக் கொள்வார். இரண்டு நாள் கழித்து பார்த்தால், அங்கு இருக்க மாட்டார். அப்படியே நடந்து அடுத்த ஊருக்கு போயிருப்பார். இப்படியே கன்னியாகுமரி வரை போவாரு.

அப்படி பெரியாரின் பகுத்தறிவு கொள்கை உலகிற்கு தெரிய உழைத்த அந்த மானமிகு மனிதரைக் கவுரவிக்கும் விதமாக அவருடைய சுவர் எழுத்துகளை எல்லாம் திரட்டிப் புத்தகமாக்கப் போகிறோம். நீங்க கலந்துக்கணும்” என்றார்கள். நான் இப்ப நினைத்துப் பார்க்கிறேன். நாற்பது ஆண்டுக்கு முன்பு நான் படித்த அந்தச் சுவர் எழுத்துகள் மறுபடியும் என் மனக்கண் முன் வந்து பளிச்சிட்டது. என் விடலைப் பருவத்தில் கவன ஈர்ப்பு செய்த எழுத்துகள் அவை. பெட்டிக் கடையில் கணக்கு வைத்து புகைப் பிடித்து, சினிமா பார்த்துக் கொண்டு ஊர் சுற்றிய பதினெட்டு வயது பையனுடைய கவனத்தைத் திரும்ப வைத்திருக்கிறார். பெரியாருடைய தொண்டரான அந்தச் சுவர் எழுத்து சுப்பையா எவ்வளவு பெரிய ஆள் என்பது இப்ப என்னுடைய 56 வயதில் புரிகிறது!

**- இனமான நடிகர் சத்தியராஜ் ‘ராணி’ இதழில் (12.6.2011) எழுதியதிலிருந்து.**

## கழகப் போராட்டம் எதிரொலி: குறுக்கிளையான்பாளையம் நோக்கி படையெடுக்கும் தலைவர்கள்

அன்னூர் ஒன்றியம் குறுக்கிளையான்பாளையம் கிராமத்தில் தலித் மக்கள் பொதுக் குழாயில் தண்ணீர் எடுக்க சாதி வெறியர்கள் மறுத்ததை எதிர்த்து பெரியார் திராவிடர் கழகம் போராடி தண்ணீர் பிடிக்கும் உரிமையைப் பெற்றுத் தந்தது. இதனைத் தொடர்ந்து இந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜூன் சம்பத், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தங்கபாலு ஆகியோர் கடந்த ஜூலை 3 ஆம் தேதி அக்கிராமத்துக்கு தனித்தனியாக சென்று நடந்த சம்பவங்களை கேட்டார்களாம்!

# பிரேமதாசா மீது ஆத்திரம்: உளவு நிறுவனத்தின் வஞ்சகம் [ 4 ]

"1988 ஆம் ஆண்டு டிசம்பர் 29 ஆம் தேதி ஜெயவர்த்தனாவைத் தொடர்ந்து, பிரேமதாசா அதிபர் பதவிக்கு வந்தார். அப்போது, வடக்கு-கிழக்கு மாநிலங்களில் இந்திய ராணுவம் நிலை கொண்டிருந்தது. ராஜீவ்-ஜெயவர்த்தனே சமரச ஒப்பந்தத்தை துப்பாக்கி முனையில் இந்திய ராணுவம் திணிக்க முயன்ற நடவடிக்கைகளால், தமிழ் மக்கள் கொதித்துப் போயிருந்தனர். யுத்த மேகம் பரவி மக்கள் அச்சத்துக்குள்ளாகியிருந்த சூழலில், வடக்கு-கிழக்கு மாகாண கவுன்சிலுக்கு இந்திய ராணுவத்தின் பார்வையில் ஒரு தேர்தல் நாடகம் அரங்கேற்றப்பட்டது. தில்லுமுல்லுகள் முறைகேடுகளுடன் நடத்தப்பட்ட தேர்தலில் - 'ஈ.பி.ஆர்.எல்.எப்.' இயக்கத்தைச் சார்ந்த வரதராஜப் பெருமாள், வடக்கு-கிழக்கு மாகாண முதல்வராக திரிகோணமலையில் முடிசூட்டப்பட்டார். ஈ.பி.ஆர்.எல்.எப்., இந்திய ராணுவத்தின் 'செல்லப் பிள்யைாக' மாறி, விடுதலைப் புலிகளை ராணுவத்திடம் காட்டிக் கொடுக்கும் வேலைகளைச் செய்து வந்தது. இதனால், விடுதலைப் புலிகள் பக்கம் நின்ற ஏராளமான தமிழர்கள், வீடுகளிலும், வீதிகளிலும், இந்திய ராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டனர். அதே நேரத்தில் இலங்கையின் தெற்குப் பகுதியில் 'ஜெவிபி' சிங்களர் அமைப்பு, வடகிழக்கில், இந்திய ராணுவம் நிலை பெற்றிருப்பதை எதிர்த்து, கலவரங்களில் இறங்கியது சிங்கள காவல் நிலையங்களும், அரசு அலுவலகங்களும் தாக்கப்பட்டன. இதில் 2500 பேர் வரை கொல்லப் பட்டனர். இத்தகைய பதட்டமான சூழலில் பதவிப் பொறுப்புக்கு வந்த பிரேம தாசா, நிலைமையைப் புரிந்து கொண்டு, இந்திய ராணுவத்தை வெளியேற்றிட வேண்டும் என்ற உறுதியான முடிவுக்கு வந்தார்.

பிரேமதாசா சமுதாயத்தின் கீழ் மட்டத்திலிருந்து வந்த தலைவர்; புத்தமதப் பற்று அதிகம்; தனது பதவி ஏற்பையே கண்டியில் உள்ள புத்தர் பல் இருக்கும் மடாலயத்தில் தான் நடத்தினார். இலங்கை ஒரே நாடு; அது பிரிக்க முடியாது என்ற உணர்வு கொண்டவர். பதவி ஏற்றவுடன் விடுதலைப் புலிகளையும், ஜெ.வி.பி. இயக்கத்தையும் பேச்சு வார்த்தைக்கு அழைத்தார். 'இனப் பிரச்சினை எங்களின் உள்நாட்டுப் பிரச்சினை; அதில் அன்னிய சக்திகளைத் தலையிட அனுமதிக்க மாட்டோம்' என்று சூசகமாக அறிவித்தார். லண்டனிலிருந்த விடுதலைப் புலிகளின் ஆலோசகர் பாலசிங்கத்திடம் தொடர்பு கொண்டு பேசினார் பிரேமதாசா. இந்திய ராணுவம் வெளியேறவேண்டும் என்று பிரேமதாசா வெளிப்படையாக அறிவிக்கவில்லை. அந்த நிலையில் விடுதலைப் புலிகளோடு இலங்கை ராணுவத்தின் போர் நிறுத்தத்தை அறிவித்தார். இந்திய ராணுவமும் புலிகளுக்கு எதிராக போர் நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். பிரேமதாசா தானாக அறிவித்த இந்த போர் நிறுத்தத்தை விடுதலைப் புலிகள் ஏற்க தயக்கம் காட்டினார். இந்திய ராணுவம் வெளியேறாத வரை, போர் நிறுத்தம் செய்ய முடியாது; அது தங்களுக்கு ஆபத்து என்று விடுதலைப் புலிகள் அறிவித்தனர். இதைப் புரிந்து கொண்ட பிரேமதாசா, கொழும்பு புற நகரில் கோயில் விழா ஒன்றில் பேசுகையில் - இந்திய அரசு, மூன்று மாதங்களில் ராணுவத்தைத் திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டும் என்று வெளிப்படையாக அறிவித்தார். அதே நாளில், இலங்கை வெளிநாட்டுத் துறை அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னே விடுதலைப் புலிகளுக்கு, பேச்சு வார்த்தைக்கு வருமாறு அதிகாரபூர்வ அழைப்பு விடுத்தார். புலிகள் பேச்சு வார்த்தைக்கு சம்மதித்தனர். பிரேமதாசாவின் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த அமைச்சர்களின் குழு - பாலசிங்கம் தலைமையில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளோடு பேச்சு வார்த்தையைத் துவக்கியது. மனித உரிமைக்கு எதிரான இந்திய ராணுவத்தின் அடக்கு முறைகள் பற்றி விவாதிக்கப்பட்டன. 5000 தமிழர்கள் இந்திய ராணுவத்தால் கொல்லப்பட்டதையும், அமைதிப்படை ஆக்கிரமிப்புப் படையாக செயல்படுவது சர்வதேச சட்டங்களுக்கு எதிரானது என்பதையும் விடுதலைப் புலிகள் விளக்கினர். இந்தக் கருத்துகள் கூட்டறிக்கையாக வெளியிடப்பட்டபோது, பிரேமதாசா மீது இந்தியா கோபம் கொண்டது. கொழும்பிலுள்ள இந்தியத் தூதர் பேச்சு வார்த்தையில் இந்திய ராணுவ நடவடிக்கைகளை விமர்சனம் செய்வதற்குக் கண்டனம் தெரிவித்தார்.

***ராஜீவ் சர்மாவின் 'புலிகளுக்கு அப்பால்....' நூலுக்கு மறுப்பு தெரிவித்து, சென்னை (ஜூன் 4) வெளியீட்டு விழாவில் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரையின் தொகுப்பு.***

இதற்கிடையே தெற்கு ஆசிய நாடுகளின் மாநாட்டை (சார்க்) நவம்பரில், இலங்கையில் நடத்தவிப்பதால், **ஜூலை 31 ஆம் தேதிக்குள், இந்திய ராணுவத்தை திருப்பி அழைத்துக் கொள்ளுமாறு பிரேமதாசா, பிரதமர் ராஜீவுக்குக் கடிதம் எழுதினார்.** ஆத்திரமடைந்த ராஜீவ் காந்தி, பெங்களூரில் பேசும்போது, "ஈ.பி.ஆர் .எல்.எப். ஆட்சி நடத்தும் மாகாணக் கவுன்சிலுக்கு உரிய அதிகாரங்களைப் பெற்றுத் தந்த பிறகுதான், அமைதிப்படை வெளியேறும்" என்று அறிவித்தார். பிரேமதாசா, ராஜீவ்காந்தியின் இந்தப் பேச்சால் மிகவும் வருத்தமடைந்தார். இரண்டாவது சுற்று பேச்சு வார்த்தைகளில் இலங்கை - இந்திய முரண்பாடுகள் பற்றியே பெரிதும் விவாதிக்கப்பட்டன. இந்த நிலையில், வரதராஜப் பெருமாள் முதலமைச்சராக இருந்த தமிழர் பகுதியில் பள்ளி மாணவர்களைக் கட்டாயப்படுத்தி, 'தமிழ் தேசிய ராணுவம்' ஒன்றை உருவாக்கினர். சுமார் 4500 சிறுவர்களை 'ஈ.பி.ஆர். எல்.எப்.' குழுவினர், பள்ளிகளிலிருந்து கட்டாயப் படுத்தி கடத்திப் போய் பல்வேறு இந்திய ராணுவ முகாமுக்குப் பயிற்சிக்கு அனுப்பினர். விடுதலைப் புலிகள் சிறுவர்களை ராணுவத்தில் சேர்ப்பதாக குற்றம் சாட்டியது இந்தியா. ஆனால் அந்தக் குற்றத்தைச் செய்ததே இந்தியா தான்!

சிறுவர்களின் பெற்றோர்கள், இந்திய ராணுவ முகாம்களின் முன்னால் திரண்டு, தங்கள் பிள்ளைகளை விடுவிக்குமாறு மன்றாடினார்கள். இந்த நிலையில் இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும், ராணுவ மோதலை நிறுத்துவதாக அதிகாரபூர்வமாக அறிவித்தனர். இந்திய ராணுவத்தைப் போர் நிறுத்தம் செய்ய வைப்பதற்காக, பிரேமதாசாவின் வேண்டுகோளை ஏற்று, முதலில் தயங்கிய விடுதலைப்புலிகள் பிறகு போர் நிறுத்தத்துக்கு சம்மதம் தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரசுக்குமிடையே மோதல் நிறுத்தப்பட்டு, அமைதிக்கான நடவடிக்கைகள் தொடங்கப் பட்டுவிட்டதால், இந்திய ராணுவமும், விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை நிறுத்திவிட வேண்டும் என்று, பிரேமதாசா இந்திய பிரதமர் ராஜீவுக்கு கடிதம் எழுதினார். இதற்கு ராஜீவ் காந்தி அடுத்த நாளே பதில் கடிதம் ஒன்றை எழுதினார் .

பிரேமதாசா கடிதத்தால் ராஜீவ் ஆத்திரத்தின் உச்சிக்கே சென்று விட்டார். ஆசிய நாடுகளின் முடிசூடா மன்னராக வலம் வருவதற்கு ராஜீவ் காந்தி விரும்பினார். அதன் காரணமாகத்தான் ஈழத் தமிழர் பிரச்சினையில் தமிழர்களின் பிரதிநிதியாக தன்னைத் தானே நியமித்துக் கொண்டு ஈழத் தமிழர் விடுதலை இயக்கத்தை ஓரம் கட்டிவிட்டு, ஜெய வர்த்தனாவுடன் ஒப்பந்தம் போட்டுக் கொண்டு அதைத் தமிழர்கள் மீது திணித்தார். வலிமை மிக்க இந்திய ராணுவத்தின் முன் இந்த சின்னஞ்சிறு நாடுகள் எல்லாம் 'தூசு' என்ற சர்வாதிகார மனப்போக்கில் திளைத்திருந்த ஒருவருக்கு பிரேமதாசாவின் இந்த அறிவிப்பு ஆத்திரத்தை ஏற்படுத்தாதா? பிரேமதாசாவுக்கு ராஜீவ் எழுதிய பதிலில் இந்த ஆத்திரத்தின் வெளிப்பாட்டைப் பார்க்க முடியும். இலங்கை அரசுடன் விடுதலைப் புலிகள் போர் நிறுத்தம் செய்ய முன் வந்திருந்தாலும் அந்த போர் நிறுத்தத்தை தன்னால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று ராஜீவ், பிரேமதாசாவுக்கு பதில் எழுதினார்.

அமெரிக்காக்காரன் நடத்தி வரும் நாட்டாண்மையை எல்லாம் மிஞ்சக் கூடியதாக, இது இருப்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். ராஜீவ் தனது பதில் கடிதத்தில் புலிகள் போர் நிறுத்தம் செய்தால் மட்டும் போதாது. இலங்கையின் ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் ஏற்றுக் கொள்ள முன்வர வேண்டும். இலங்கை அரசிடம் புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்றெல்லாம் ராஜீவ் காந்தி நிபந்தனை விதித்தார். இதற்கு அர்த்தம் பிரேமதாசாவைவிட ராஜீவுக்கு இலங்கை ஒருமைப்பாட்டில் கவலை வந்து விட்டது என்பது அல்ல. விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டும் தமது முயற்சி தோல்வியில் முடிந்ததும், பிரேமதாசா, தனது ராணுவத்தைத் திருப்பி அனுப்ப கெடு விதித்து விட்டாரே என்ற ஆத்திரமும் தான் காரணம். பிரேமதாசா, ராஜீவ் மிரட்டலுக்கு அஞ்சவில்லை.

இன்னும் ஒரு படி மேலே போய் அவர் பதிலடி தந்தார். "ஒப்பந்தப்படி இந்திய ராணுவம் எனது கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. நானே இந்திய ராணுவத்தை வெளியேற உத்தரவிடுவேன்" என்று அறிவித்தார். தெற்கு ஆசியாவின் சக்தி மிக்க தலைவராக தன்னை நிலைநிறுத்திக் கொள்ள துடித்துக் கொண்டிருந்த ராஜீவ் காந்திக்கு பிரேமதாசா விடுத்த சவாலை, ராஜீவால் செரிமானம் செய்து கொள்ள முடியவில்லை. இந்த நிலையில் ராஜீவ் மிரட்டலுக்கு பணிய மறுத்த விடுதலைப் புலிகளை ஒழிப்பதில் தீவிரம் காட்டி செயல்பட்டு வந்த உளவுத் துறையின் கவனம், பிரேமதாசாவின் பக்கம் திரும்பியது. பிரேமதாசாவுக்கு எதிரான திட்டங்களை உளவுத் துறை உருவாக்கத் தொடங்கியது. விடுதலைப் புலிகளுக்கு பச்சைக் கொடி காட்டினார்கள். தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆயுதங்கள் தரத் தயாராக இருப்பதாகவும், பிரேமதாசாவை எதிர்த்து போராட்டத்தைத் தொடங்கினால், இந்தியா விடுதலைப் புலிகள் பக்கம் நிற்கும் என்று விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனுக்கு தூது அனுப்பினார்கள். ஆனால், இந்திய சதி வலையில் சிக்கிட பிரபாகரன் தயாராக இல்லை. பிரபாகரன் இத்திட்டத்தை நிராகரித்து விட்டார். இதற்கெல்லாம் என்ன ஆதாரம் என்று நீங்கள் கேட்கலாம். ஆதாரங்களுடன் தான் ஒவ்வொரு கருத்தையும் நான் உங்கள் முன்னால் கூறிக் கொண்டிருக்கிறேன். நான் கூறிய இந்தக் கருத்துகளுக்கு சாட்சியாக நான் நிறுத்த விரும்புவது மறைந்த முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறனைத் தான்.

முரசொலி மாறன் அப்போது தி.மு.க. சார்பில் மாநிலங்களவை உறுப்பினர். பிரேமதாசா - ராஜீவ் முரண்பாடு முற்றியிருந்த நேரத்தில் ராஜீவ் முரசொலி மாறனை அழைத்துப் பேசினார். இது பற்றி முரசொலி மாறனே இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டுக்கு அளித்த பேட்டியில் விரிவாகக் கூறுகிறார். இதோ முரசொலி மாறன் பேட்டி:

"இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டபோதே அதை எதிர்த்தவர் பிரேமதாசா. இவர் இலங்கை அதிபர் ஆனதும் இந்திய அமைதிப் படையை வெளியேற்றச் சொன்னார். விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுடன் ரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டு, இந்தியப் படைக்கு எதிராக புலிகளுக்கு ஆயுதம் வழங்கினார். **பிரேமதாசா - பிரபாகரன் நெருக்கம் அதிகமாவதைக் கண்ட இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி என்னை (முரசொலி மாறன்) அழைத்துப் பேசினார்.** பிரபாகரனுக்கு நாம் உதவிகள் செய்யலாம். புலிகள் பற்றி உண்மை நிலவரம் எனக்கு தெரியாமல் போய் விட்டது. எனவே தமிழக முதல்வர் கருணாநிதியை புலிகளுடன் பேசச் சொல்லுங்கள். சுதந்திர தமிழ் மாநிலம் அமைக்க நாம் உதவலாம் என்று கூறினார். நான் (முரசொலி மாறன்) இப்போதே அவர்கள் சுதந்திர தனி மாநிலமாகத்தான் உள்ளனர். வரி வசூல் வரை நீதிமன்றம் வரை நிர்வாகம் செய்கிறார்கள் என்றேன். உடனே ராஜீவ் காந்தி சிரித்தபடி தமிழ் ஈழத்தின் பிதாமகர் தி.மு.க. தான் என்றார்." ('இந்தியன் எக்ஸ்பிரஸ்' 16.12.1997)

முரசொலி மாறன் அளித்த இந்தப் பேட்டி, விடுதலைப்புலிகளை ஒழிப்பதைக் கூட நிறுத்திக் கொண்டு அவர்களிடம் சமரசம் பேசி ஆயுதம் வழங்கி, பிரேமதாசாவுடன் மோத விடும் நிலைக்கு ராஜீவ் வந்தார் என்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறது. ஆக, விடுதலைப் புலிகளைவிட பிரேமதாசா ராஜீவ் காந்தியின் முதன்மையான எதிரியாகக் கருதும் நிலைக்கு ராஜீவ் காந்தி வந்து விட்டார். அதற்கேற்ப உளவு நிறுவனமும் 'காய்'களை நகர்த்தியது.

ஒரு முக்கியமான செய்தியை சுட்டிகாட்ட வேண்டும். பிரேமதாசா கொழும்பு புறநகர்ப் பகுதியான பட்டாரமுல்லா என்ற இடத்தில் 1989 ஆம் ஆண்டு ஜூன் முதல் தேதி பேசும் போது இந்திய ராணுவம் இலங்கையிலிருந்து ஒரு மாத காலத்துக்குள் அதாவது ஜூலை 29 ஆம் தேதிக்குள் வெளியேறிட வேண்டும் என்று கெடு நிர்ணயித்து அறிவித்தார். (ஜூலை 29 - என்ற தேதிக்கான

4 ஆம் பக்கம்

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# 7 நாட்கள் சென்னையை கலக்கிய பகுத்தறிவு பரப்புரை



தென் சென்னையில் 22.6.2011 முதல் 28.6.2011 வரை தொடர் கொள்கை விளக்கக் கூட்டங்கள் நடைபெற்றன.

22.6.11 - அம்பேத்கர் சிலை அருகில், இராமாபுரத்தில் க. சுப்பிரமணி தலைமை வகித்தார். வழக்கறிஞர் சு. குமாரதேவன் சிறப்புரையாற்றினார். 23.6.11 - திரு.வி.க. குடியிருப்பு தேனாம்பேட்டையில் வாகன்ராஜ் தலைமை வகித்தார். உடுமலை தமிழ்ச் செல்வன் சிறப்புரை யாற்றினார். 24.6.11 - சத்தியவாணி முத்துநகர் மந்தை வெளியில் ந.தமிழரசன் தலைமை வகித்தார். பேராசிரியர் பெரியார் சிறப்புரையாற்றினார். 25.6.11 - பல்லக்கு மாநகர் மைலாப்பூரில் சசிக்குமார் தலைமை வகித்தார். துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் சிறப்புரையாற்றினார். 27.6.11 - பி.வி. தெரு, திருவல்லிக்கேணி நிகழ்ச்சியில் இரவி தலைமை வகித்தார். உடுமலை தமிழ்ச்செல்வன் சிறப்புரையாற்றினார். 28.6.11 - கௌடியா மடம் சாலை இராயப்பேட்டையில் வேழவேந்தன் தலைமை வகித்தார். அன்பு தனசேகர் சிறப்புரையாற்றினார்.

அனைத்துக் கூட்டங்களிலும் சிற்பி இராசன் 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக நடத்தினார். சம்பூகன் இசைக் குழுவினர் அருள்தாஸ், நாத்திகன் இன எழுச்சிப் பாடல்களை பாடினர். அருண்குமார், தபேலா வாசித்தார். தென்சென்னை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சுகுமார், மாவட்ட செயலாளர் உமாபதி அனைத்துக் கூட்டங்களையும் ஒருங்கிணைத்தார்.

வடசென்னையில் கழக கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம் 21.6.2011 அன்று மாலை 6 மணியளவில் மங்களபுரம் போலீஸ் பூத் அருகில் நடைபெற்றது. சி. பாஸ்கர் தலைமை வகித்தார். சீ. மணிவண்ணன் வரவேற்புரையாற்றினார். க.இராஜேந்திரன், நா.பரசுராமன், ஆ. அன்புமணி முன்னிலை வகித்தனர். துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், வழக்கறிஞர் சு. குமாரதேவன் சிறப்புரையாற்றினர். சிற்பிராசன் அறிவியல் நிகழ்ச்சியான 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சியை நடத்தினார். சம்பூகன் இசைக் குழுவினர் அருள்தாஸ், கீர்த்தி, நாத்திகன் இன எழுச்சிப் பாடல்களைப் பாடினர். வி. ஜனார்த்தனன் நன்றியுரை கூறினார்.

---

*3 ஆம் பக்கத் தொடர்ச்சி*

முக்கியத்துவம் ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தம் அமுலுக்கு வந்த தேதி என்பதாகும்). ராஜீவ் காந்தியும் இந்திய உளவு நிறுவனமும் பிரேமதாசாவின் இந்த 'கெடு'வால் அதிர்ச்சி அடைந்தார்கள். அவர்கள் இதை சற்றும் எதிர்பார்க்க வில்லை.

அவசர அவசரமாக இந்திய உளவு நிறுவனம் பிரேமதாசாவுக்கு எதிரான சதித் திட்டங்களை உருவாக்கியது. என்ன திட்டம்?

1. இந்திய ராணுவம் வெளியேறக் கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்தும், ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை பிரேமதாசா கை விடுவதை எதிர்த்தும், தமிழர் பகுதியில் தங்களின் 'கைத்தடி' அமைப்பிலிருந்து ஆட்களைப் பிடித்து பிரேமதாசாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்த இந்திய உளவு நிறுவனம் ஏற்பாடு செய்தது.
2. விடுதலைப் புலிகள் தாக்கும் நிலையில் பலமாகவே உள்ளார்கள் என்றும், இந்திய ராணுவம் இப்படிப்பட்ட நிலையில் வெளியேறக் கூடாது என்றும், விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் பிரேமதாசாவின் இலங்கை ராணுவத்துக்குக் கிடையாது என்றும் சில சம்பவங்களை உருவாக்கி உணர்த்த வேண்டும் என்று திட்டங்களை வகுத்தனர். தமிழ் ஈழத்தில் 'இந்தியாவின் தலையீடு' என்ற விரிவான நூலை (Indian Intervention in Srilanka) ரோகனா குணரத்னா என்ற கொழும்பு பத்திரிகையாளர் எழுதியுள்ள இந்த நூலில் இந்திய உளவு நிறுவனத்தின் மேற்குறிப்பிட்ட திட்டங்களை அவர் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

விடுதலைப் புலிகள் வலிமை குறையாதவர்கள் என்றும், அவர்கள் தலைவர்களைக் கொலை செய்யக் கூடியவர்கள் என்றும் பிரேமதாசா இந்திய ராணுவத்தை வெளியேறச் சொல்லும் கருத்துக்கு கடும் எதிர்ப்பை உரு வாக்கிவிடலாம் என்ற திட்டத்தின் கீழ் சில கொலைகளுக்கான திட்டங்கள் உரு வாக்கப்பட்டன. விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குள்ளேயே இந்திய உளவு நிறு வனத்தின் வலையில் சிக்கியிருந்த மாத்தையாவின் அணி, இதற்காக, களமிறக்கப்பட்டது.

பிரேமதாசா இந்திய ராணுவம் வெளியேற வேண்டும் என்று ஒரு மாதம் கெடு விதித்து அறிவித்த நாள், 1989 ஜூன் 1, கெடு முடியும் நாள் ஜூலை 29. இந்த ஒரு மாத இடைவெளியில் தான் சில முக்கிய தலைவர்கள் கொலை செய்யப்பட்டு, அவர்களை கொலை செய்தவர்கள் விடுதலைப்புலிகள்தான் என்ற பழியை சுமத்தி ஊடகங்கள் வழியாக பரப்பினர். எந்தத் தேதியில், யார் யார் கொல்லப்பட்டார்கள்?

**1989 ஜூலை 12 - தமிழர் அய்க்கிய விடுதலை ன்னணி தலைவர்கள் அமிர்தலிங்கம் மற்றும் யோகேஸ்வரன்.**

**1989 ஜூலை 17 - அதாவது, அடுத்த நான்கு நாட்களில் புளோட் இயக்கத் தலைவர் உமா மகேசுவரன்.**

**1989 ஜூலை 23 - அடுத்த 10 நாட்களில் 'பிரபாகரன்' மாத்தையால் கொல்லப் பட்டார் என்ற அறிவிப்பு (அனைத்து இந்திய மற்றும் சர்வதேச ஊடகங்களில் உயிருடன் இருந்த பிரபாகரன் - மாத்தையாவால் கொல்லப்பட்டதாக இந்திய உளவு நிறுவனம் செய்திகளைப் பரப்பியது).**

பிரேமதாசா - இந்திய ராணுவம் வெளியேற கெடு விதித்த ஒரு மாத கால இடைவெளியில் மட்டும், இந்தக் கொலைகள் நடந்தன என்றால், அதன் நோக்கம், மூளை, பின்னாலிருந்து இயக்கிய சக்திகளைப் புரிந்து கொள்ள முடியும்.

**(தொடரும்)**

# பொள்ளாச்சி பயிற்சி முகாம் சிறக்க உதவியோர்; உழைத்தோர்

சூலூரில் பயிற்சி முகாம் வெற்றி பெற உதவிய தோழர்கள்:

பயிற்சி முகாம் நடத்த தமது 'அம்மன் பார்ம்ஸ்' பண்ணையை தந்து உதவியவர் - ம.தி.மு.க. மாநில விவசாய அணி செயலாளர் பொன்னுசாமி. உணவு வழங்குவதில் தங்களது பங்களிப்பை வழங்கியோர்: சூ.பெ. கருணாநிதி (ம.தி.மு.க. மாவட்ட பொறுப்பாளர்), யுவராஜ் (ம.தி.மு.க. ஒன்றிய மாணவரணி செயலாளர்), அகில் குமாரவேல் (பெரியார் திராவிடர் கழக மாவட்ட பொருளாளர்), அரசூர் ஜெய், கணேசு, கழகத் தோழர் அ.ப. சிவா, காரணப் பேட்டை சுப்ரமணியம், சக்தி பாய்லர் கந்தசாமி.

நிகழ்ச்சிகளை முழுமையாக வீடியோ படமெடுத்து உதவியவர் ஹாலிவுட் சேகர்.

வாகனங்கள் வழங்கி உதவியவர்கள்: ராவத்தூர் கிளை கழக செயலாளர் கார்த்திகேயன், சூலூர் நகர செயலாளர் தேவா.

முகாம் சிறக்க ஒருங்கிணைந்து செயல்பட்டவர்கள் மாவட்ட செயலாளர் கா.சு. நாகராசு, சூலூர் பன்னீர் செல்வம், ப. வீரமணி.

திருப்பூர் மாவட்டக் கழகத் தலைவர் துரைசாமி, திருப்பூர் கழகத் தோழர்கள் முகில்ராசு, அகிலன், சுசிலா, ஆசிரியர் சிவசாமி ஆகியோர் முகாமில் பங்கேற்றனர்.

## மு. கேப்டன் அண்ணாதுரை தாயார் மறைவு

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் 28.6.2011 அன்று மாலை 4 மணிக்கு மு.கேப்டன் அண்ணாதுரை தாயார் லட்சுமி (வயது 69) மறைவுற்றார். அவரின் உடல் எந்த சடங்கும் செய்யாமல் இரவு 9 மணிக்கு குமாரபாளையம் இடுகாட்டில் எரியூட்டப்பட்டது. இறுதி நிகழ்ச்சியில் ஏராளமான கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**வரப்பெற்றோம்**

## பூப்பு நீராட்டு விழா தேவையா?

'பூப்பு நீராட்டு விழா தேவையா?' என்ற தலைப்பில் பெண்ணிய சிந்தனையாளர்களின் கட்டுரைகளைப் பெற்று தொகுப்பாக வெளியிட்டுள்ளார் பி.இரெ. அறசெழிலன். பெரும்பாலான கட்டுரைகள் இச்சடங்குக்கு எதிரானவை. ஒரு சில கட்டுரைகள் இச்சடங்கை வரவேற்கின்றன. சமூகத்தில் நிலவும் பெண்கள் தொடர்பான பழைய பண்பாட்டுத் திணிப்புகள், பார்ப்பனியம் - ஆணாதிக்கம் சார்ந்தவைகளாக மாற்றப்பட்டு பெண்கள் நிலையை மேலும் அடிமையாக்கவே பயன்பட்டுவரும் நிலையில், அதற்குள் நியாயங்களைத் தேடிக் கொண்டிருப்பது பயனற்ற வீண் முயற்சியேயாகும். பெண்கள் உடலும் - கற்பும் - புனிதமாக ஆண்களால் கட்டமைக்கப்பட்டதன் நோக்கம், அவர்களை 'நுகர் பொருளாக' மாற்றுவற்குத்தான் பயன்பட்டதே தவிர மனித உரிமை உள்ள மானுடர்களாக்குவதற்காக அல்ல. பழந்தமிழன் பண்பாடுகளின் 'பெருமைகளை' மீட்டெடுப்பதைவிட, காலத்துக்கு ஏற்ற வளர்ச்சி நோக்கிய மனித மாண்புகளை வளர்த்தெடுப்பதே சமூக நலன் சார்ந்த பார்வையாகும். பெண்ணியச் சிந்தனைகளை விதைக்கும் சிறப்பான தொகுப்பு.

வெளியீடு: அறிவுச் சுடர் வெளியீட்டகம், 7 ஆ, எறும்பீசுவரர் நகர், மலைக்கோயில், திருவெறும்பூர், திருச்சிராப்பள்ளி - 620 013. விலை : ரூ.30

## மணமகள் தேவை



பி.டெக். (மெக்கானிக்கல்) டி.ஏ.ஈ., பி.பி.ஏ. படித்து ஆண்டுக்கு ஒரு லட்சத்து 80 ஆயிரம் ஊதியம் பெற்று அமெரிக்கச் சார்பு தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் பெரியார் கொள்கையை ஏற்றுக் கொண்ட 29 வயது மணமகனுக்கு மணமகள் தேவை. சாதி தடையில்லை.

தொடர்புக்கு : 9445109323

## நன்கொடை

கோவை அரசூர் அ.ப.சிவா, சோ. பெரியார் செல்வி - தங்களின் பெண் குழந்தை 'நறுமுகை' பிறந்த நாள் 19.6.2011 மகிழ்வாக கழக ஏட்டின் வளர்ச்சிக்கு ரூ.500/- வழங்கினர். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

**"புரட்சிப் பெரியார் முழக்கம்"**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 7th July 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.


புரட்சிப் **பெரியார் முழக்கம்**
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | ஜுலை 14, 2011 | புரட்சி 10 | முழக்கம் 26 | விலை: ரூ.2.50

### விழாவில் 'நாடு கடந்த தமிழீழ அரசு' அமைச்சர்கள் பங்கேற்றனர்

# தெற்கு சூடான் விடுதலை மலர்ந்தது

ஜுலை 9 ஆம் தேதி தெற்கு சூடான் தனி நாடாக தன்னை அறிவித்துக் கொண்டது. 'சூடான் மக்கள் விடுதலை இயக்கம்' என்ற ஆயுதம் தாங்கிய விடுதலைப் படை ராணுவத்துக்கு எதிராக விடுதலைப் போரை நடத்தியது. இந்த விடுதலை இயக்கத்தை ஆணி வேராக இருந்து இயக்கிய அதன் தலைவர் டாக்டர் ஜான் கரங் - கடந்த 2005 ஜுலையில் விமானத்தில் பயணம் செய்தபோது சதித் திட்டத்தால் கொல்லப்பட்டார். ஆனாலும் விடுதலைப் போராட்டம் தொடர்ந்தது. தலைமறைவு போராளியாக காடுகளில் பதுங்கி போரிட்ட சல்வாகீர் தான் இப்போது தெற்கு சூடானின் அதிபர். எண்ணெய் வளமிக்க நாடு சூடான். மக்கள் மதத்தால் கிறிஸ்தவர்கள். 1989 இல் ராணுவப் புரட்சி மூலம் சூடானில் ஆட்சியைப் பிடித்த ஓமர் அல்பஷீர் நாடு முழுதும் இஸ்லாமிய சட்டத்தைத் திணித்தபோது தெற்கு சூடானில் வாழ்ந்த கிறிஸ்தவ பழங்குடி மக்கள் எதிர்த்து போராடினர்.

தெற்கு சூடானின் எண்ணெய் வளத்தையும் மக்களையும் சுரண்டிய வடக்கு சூடான் இனப் படுகொலையைக் கட்டவிழ்த்துவிட்டது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், சூடான் அதிபர் உமர்பஷீர் இனப்படுகொலை செய்தார் என்பதை உறுதி செய்து அவரைக் கைது செய்ய ஆணையிட்டுள்ளது. ஆனால், அரேபிய நாடுகளும், ஆப்பிரிக்க நாடுகளும் அவரை கைது செய்ய விரும்பவில்லை. பஷீர், இதற்குப் பிறகு சீனாவுக்கு அரசுப் பயணம் மேற்கொண்டுள்ளார். தமது நாட்டின் எண்ணெய் வளத்துக்கான உரிமைகள் அனைத்தையும் சீனாவுக்கு தந்துவிட்டார் பஷீர். சீனா, சூடானில் விவசாயத் துறையிலும், மசகு, எண்ணெய் மற்றும் பதனிடும் நிலையங்களில் பெரும் முதலீடு செய்துள்ளது. எனவே இனப் படுகொலை செய்த ராஜபக்சேயை ஆதரிப்பது போலவே சூடான் அதிபரையும் சீனா ஆதரிக்கிறது. 2005 ஆம் ஆண்டில் அமெரிக்கா தலையீட்டினால் அமைதி உடன்பாடு ஏற்பட்டு, அதன்படி பிறகு 2011 ஜனவரி 15 இல் மக்களிடம் நேரடி வாக்கு எடுப்பு நடத்தப்பட்டது. 99 சதவீத மக்கள் தெற்கு சூடான் தனிநாடாக பிரிவதற்கு ஆதரவாக வாக்களித்தனர். தெற்கு சூடான் ஆப்பிரிக்காவின் 54வது நாடாகும். அய்.நா.வில் 193வது உறுப்பு நாடு. தெற்கு சூடான் விடுதலை இயக்கம் விடுத்த அழைப்பை ஏற்று, நாடு கடந்த தமிழீழ அரசின் இரண்டு அமைச்சர்கள் தெற்கு சூடான் விடுதலை விழாவில் பங்கேற்றுள்ளனர். 2009 ஆம் ஆண்டு பில்டல்பியா நகரில் நடந்த நாடு கடந்த தமிழீழ அரசின் அமர்வில் தெற்கு சூடான் விடுதலை இயக்கத்தின் பிரதிநிதி கலந்து கொண்டு தமிழீழ விடுதலை போராட்டத்துக்கும் தெற்கு சூடான் விடுதலை போராட்டத்துக்கும் உள்ள ஒற்றுமைகளை விளக்கிப் பேசியது குறிப்பிடத் தக்கது. தெற்கு சூடானின் கட்டுமானப் பணிகளில் தமிழீழப் பொறியாளர்களும் பங்கேற்று பணியாற்றி வருகிறார்கள்.



தெற்கு சூடானைத் தொடர்ந்து தமிழ் ஈழத்திலும் பொது வாக்கெடுப்பு நடத்தி தமிழ் ஈழம் மலரும் நாள் வெகு தொலைவில் இல்லை! அதற்கான இயக்கத்தை உலகு தழுவிய அளவில் முன்னெடுப்போம்!

உலகம் முழுதும் தேசிய இனங்களின் விடுதலைக்காகப் போராடும் மக்கள் சார்பில் சுதந்திரம் பெற்ற தெற்கு சூடான் நாட்டை நாமும் வாழ்த்துவோம்!

# சூலூர் முகாமில் சூளுரைத்த தோழர்கள்

2011 ஜுலை 2, 3, சனி, ஞாயிறு ஆகிய நாட்களை, கோவை மாவட்டம் சூலூரில், பெரியாரியல் பயிலரங்கத்தில் பங்கு பெற்ற தோழர்கள் தாங்கள் தெரிந்து கொண்ட செய்திகளையும், தங்கள் கருத்துகளையும் பதிவு செய்தனர். கிணத்துக்கடவு ஒன்றியத்தில், ஆதிக்கச் சாதியில் பிறந்து, ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தில் இணைந்து, சாதி வெறியராகவும், மத வெறியராகவும் இருந்து, பெரியாரியல்வாதியாக மாறி இப் பயிலரங்கத்தில் கலந்து கொண்ட தோழர் நிர்மல்குமார் பகிர்ந்து கொண்ட கருத்து:

"நானும், எனது நண்பர்களும் வெளியூர் கோவிலுக்கு செல்லும்போது ஓட்டலில் சாப்பிடுவோம். பக்திமானாக இருந்தபோதே அசைவ உணவு விரும்பியாக இருந்தேன். இதை பற்றிய விவாதங்கள் வருகிறபோதும், எனக்கு தெரிந்தவைகளையும், கடவுளை பற்றிய எனது சுய கருத்துகளையும் சொல்கிறபோது, என்னை நாத்திகன் என்றும், பெரியார் கட்சிக்காரன் என்றும் சொல்வார்கள். எனக்கு அப்போது பெரியாரைப் பற்றியெல்லாம் தெரியாது. நான் ஒரு சாதி வெறியனாக, ஆதிக்கசாதி திமிரோடு தாழ்த்தப்பட்டவர்களை மிரட்டுபவனாக இருந்ததால் என்னை எனது சாதிக்காரர்கள் பெருமைப்படுத்தி ஊக்கப்படுத்தியே வந்தார்கள்.

பெரியார் சாதி ஒழிப்புக் கொள்கையாளர் என்பது எனக்குத் தெரியாது. அப்படி தெரிந்திருந்தால், நான் பெரியார் இயக்கங்களுக்கு கடுமையான எதிரியாக இருந்திருப்பேன். கடவுள் மறுப்பாளராக பெரியாரை அறிந்து, பெரியார் திராவிடர் கழகத்தில் இணைந்து, இப்போது தெரிந்து கொண்டேன். சாதி ஒழிப்பே மிக முக்கியம் என்பதை! எங்கள் கிராமத்திலும், சுற்றியுள்ள கிராமங்களிலும், பல்வேறு தீண்டாமை கொடுமைகள் நிலவி வருவதை உணர்ந்து, குறிப்பாக தேநீர் கடைகளிலுள்ள இரட்டைக் குவளைகளுக்கு எதிராக சண்டையிட்டு, பல கடைகளில் அதை நீக்கியிருக்கிறேன். அனைவருக்கும் ஒரே மாதிரியான புதிய குவளைகள் வாங்குவதற்கு பணம் இல்லை என்று ஒரு கடையில் சொன்னார்கள். நான் சொன்னேன்... "பொதுக் குவளை வைப்பதற்கு பணம் இல்லை என்பதுதான் சிக்கல் என்றால், நீங்கள் இரட்டைக் குவளைகளையே பயன்படுத்துங்கள். பெரியார் கட்சியை சார்ந்தவர்களோ, அல்லது யார் வந்து கேட்டாலும் நான் பார்த்துக் கொள்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. இதுவரை தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்கிய குவளையில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வழங்கிய குவளையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் மாற்றிக் கொடுங்கள்" - என்று சொன்னேன். அடுத்த நாளே அனைவருக்கும் பொதுவான புதிய குவளை மாற்றப்பட்டது. என்னை ஆதரித்து வந்த எனது சாதிக்காரர்கள், இப்போது என்னை எதிரியாக பார்க்கிறார்கள். என்றாலும், நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் பின்வாங்குகிறார்கள். பெரியார் திராவிடர் கழகத்தில் சேர்ந்ததற்கு எதிர்ப்பு தெரிவித்த எனது தகப்பனாரிடம், பெரியார் பற்றியோ, பெரியார் தி.க. பற்றியோ தவறான ஒரு காரணத்தை சொல்லும்படி கேட்டேன். குறை சொல்ல சரியான காரணம் இல்லாததால் எனது தந்தையின் எதிர்ப்பும் இப்போது இல்லை. உயர் சாதிக்காரர்களிடம் நம் சாதியை இழிவுபடுத்துகிறான் என்றும், தாழ்த்தப்பட்டவர்களிடம் கடவுளை இழிவுபடுத்துகிறான் என்றும், காவல்துறையில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளன் என்றும், சாதி வெறியோடு இருக்கும் இன்னும் சிலர் மட்டுமே, ஒவ்வொருவரிடமும் என்னைப் பற்றி வெவ்வேறான புகார்களைச் சொல்லி முடக்க நினைக்கிறார்கள். சாதி பெண்ணைத் தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்கிறார்கள். அவர்களிடம் நான் சொன்னேன்.... "நீங்கள் சொல்வதற்காகவோ, பெரியாரியல்வாதியாக ஆனதற்காகவோ அல்ல, என்றைக்கு பெரியாரைப் பற்றி படிக்க ஆரம்பித்தேனோ, அன்றே முடிவு செய்துவிட்டேன், எனக்கு திருமணம் என்று ஒன்று நடந்தால் அது தாழ்த்தப்பட்ட பெண்ணுடன்தான்" - என்று. தாழ்த்தப்பட்டவர்களும் அடிமைத்தனத்தில் இருந்து விடுபடுவதற்கு பாடுபடுகிறார்கள். ஆனாலும் இன்னும் ஒரு ஆண்டிற்குள் குறைந்தபட்சம் என்னைச் சுற்றியுள்ள கிராமங்களில் தேநீர் கடைகளில் இருக்கும் இரட்டைக் குவளைகளை ஒழித்தே தீருவேன் என்று உறுதி கூறுகிறேன்" - என்று சூளுரைத்தார், அந்த இளைஞர்.

சூலூர் பயிற்சி முகாமில் பங்கேற்ற பல இளைஞர்கள் தங்களது கொள்கை உறுதியை வெளிப்படுத்தினார்கள். சூலூர் கழகச் செயல் வீரர்கள் பயிற்சி முகாம், உணவு ஏற்பாடுகளை மிகச் சிறப்பாக செய்திருந்தனர்.

(குறிப்பு: கடந்த இதழில் சூலூர் பயிற்சி முகாம் செய்திக்கான தலைப்பில் பொள்ளாச்சி என தவறாக வெளிவந்துள்ளதை தோழர்கள் திருத்திப் படிக்கக் கோருகிறோம்)

தலையங்கம்

# ‘கல் முதலாளிகள்’

நாடு மக்களுக்கு சொந்தம் என்பதுதான் உலக நியதி. ஆனால், நாட்டை கோயிலுக்கு உரிமையாக்கியதுதான் பார்ப்பனியம். திருவாங்கூர் சமஸ்தானமே பத்மநாப சாமிக்கே சொந்தமாம். அப்படித்தான் அந்த சமஸ்தானத்தின் மன்னராக இருந்த மார்தண்ட வர்மா, தனது மரணத்தின் போது தமது குடும்ப வாரிசுகளிடம் கூறினாராம்.

திருவனந்தபுரம் பத்மநாபன் கோயில் சுரங்கத்தில் புதைந்து கிடக்கும் தங்க ஆபரணங்களின் மதிப்பு ரூபாய் ஒரு லட்சம் கோடிக்கும் அதிகம் என்று செய்திகள் வருகின்றன. உலக கத்தோலிக்கர்களின் தலைமை பீடமான போப் ஆட்சி செய்யும் ‘வாடிக்கன்’ (இது ஒரு தனி நாடு) சொத்தையும் விஞ்சி நிற்கிறது – திருவனந்தபுரம் கல் முதலாளி பத்மநாபனின் சொத்து. இந்தியாவிலுள்ள பல கோயில்களில் இப்படி பல லட்சம் கோடி முடங்கிப் போய்க் கிடக்கிறது. திருப்பதி ஏழுமலையானுக்கு ரூ.42,000 கோடி; பூரி ஜெகநாதன் வசம் 90 கோடி; சாமியார்கள், ‘பாபா’க்களின் ஆசிரமங்களில் பல்லாயிரம்கோடி. புட்டபர்த்தி சாய்பாபா செத்துப் போனவுடன் அவரது அறையிலிருந்து கோடி கோடியாக பணம் கடத்தப்படுகிறது. இதுதான் ‘பார்ப்பன இந்தியா’.

சுரங்கத்துக்குள் புதைந்து கிடக்கும் லட்சக்கணக்கான கோடி மதிப்புள்ள ஆபரணங்களை அப்படியே சுரங்கத்துக்குள் போட்டு மூடிவிட வேண்டும். அதை மக்களுக்கு பயன்படுத்துவது ‘தெய்வ குற்றம்’ என்கிறார், கொலை வழக்கு விசாரணையில் உள்ள காஞ்சி ஜெயேந்திரன். திருவிதாங்கூர் மன்னர்களின் வாரிசுகள் தொடர்ந்த வழக்கில் இந்த சொத்துக்களை ‘வேத பாடசாலை’ போன்ற அமைப்புகளுக்குத்தான் பயன்படுத்த வேண்டுமே தவிர மக்களுக்கு பயன்படுத்தக் கூடாது என்று கோரியுள்ளனர்.

கோயிலுக்குள் முடங்கிக் கிடக்கும் பல லட்சம் கோடி சொத்துக்களை மக்களுக்கு செலவிடக் கூடாது என்று கூறுகிறவர்களை நாம் கேட்கிறோம் – இந்த உடைமைகள் மக்களிடமிருந்து வந்தது தானே? மக்கள் காணிக்கையாகத் தந்தது தானே! கடவுள்களா இந்த உடைமைகளைக் கொண்டு வந்தன?

முதல் போட்டு உழைப்பாளர்களைச் சுரண்டும் முதலாளிகூட முதலீடு செய்ய வேண்டும்; தொழிலாளர்களுக்கு ஊதியம் தந்தாக வேண்டும். ஆனால் முதல் போடாமலேயே மக்களின் ‘அறியாமை’யைச் சுரண்டும் ‘கல் முதலாளி’களான கடவுள்களால் பார்ப்பனர்கள் சுரண்டிக் கொழுத்தார்களே தவிர, மக்களுக்கு என்ன பயன் கிடைத்தது? ‘கல் முதலாளி’களின் சுரண்டலை எதிர்த்து குரல் கொடுத்த தலைவர் பெரியார், கூழுக்கு ஏழை அழும்போது, பாழும் கல்லுக்கு பாலாபிஷேகம் ஏன், என்று கேள்வி எழுப்பியதுதான் சுயமரியாதை இயக்கம்.

கோயில் வழிபாடு என்பதே பார்ப்பனருக்கு உரியது அல்ல. பார்ப்பனர்கள் நெருப்பை வழிபட்டவர்கள். அதனால்தான் பார்ப்பனர்கள் மட்டுமே ‘அக்னிஹோத்ரிகள்’ என்று அழைக்கப்பட்டனர். பார்ப்பனர்கள் யாகங்களை மட்டுமே நடத்தி வந்தவர்கள். யாகம் நடத்துவதும், ‘அக்னி’யை வணங்குவதும் பார்ப்பனர்களுக்கு மட்டுமே உள்ள உரிமை என்றாகிவிட்டதால், ஏனைய பார்ப்பனரல்லாதவர்கள் புத்தமதத்தில் உருவான மடாலயங்களைப் பார்த்த பிறகு கோயில்களை உருவாக்கத் தொடங்கினர். ‘கரையான் புற்றெடுக்க கருநாடகம் குடிபுகுந்தது போல்’ பிற்காலத்தில் கோயில்களில் குவிந்த செல்வத்தினால் பார்ப்பனர்கள் தங்கள் வேதகால கடவுள்களானஅக்னி, இந்திரன், வருணன் போன்றவற்றுக்கு விடை கொடுத்துவிட்டு கோயில்களை தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து விட்டனர். கடவுளுக்கு சமஸ்கிருதம் மட்டுமே தெரியும், கடவுள் ‘பிராமணர்’களை மட்டுமே ஏற்றுக் கொள்வார் என்று அறிவித்து, கடவுளை தங்களது ‘மந்திரத்துக்கு’ மட்டுமே கட்டுப்பட்டவராக்கிக் கொண்டார்கள். கடவுளுக்கு எந்த சக்தியும் இல்லை என்று பார்ப்பனர்களுக்கு நன்றாகவே தெரியும்.

நீதிக் கட்சி ஆட்சிக் காலத்தில் ‘இந்து அறநிலையத் துறை’ அமைக்கப்படும் வரை, கோயில்களின் சொத்துக்கள், செல்வங்கள் எல்லாம் பார்ப்பனர்களின் தனி உடைமைகளாகவே இருந்தன. பார்ப்பனர்கள் தான் அவற்றை அனுபவித்தார்கள். கோயில்களில் பார்ப்பனரைத் தவிர, பிற சாதியினரை நுழைய அனுமதித்த பார்ப்பனர்கள் கோயிலுக்குள் ‘தேவதாசி’களாக பெண்களை நியமித்துக் கொண்டு கோயில்களில் பெண்களுடன் பாலுறவு கொள்வதை புனிதமாக்கி, “வேஸ்யா தர்சனம்; புண்யம், பாபநாசனம்” என்று அதற்கு மந்திரத்தையும் உருவாக்கிக் கொண்டார்கள்.

கோயிலுக்குள் நுழைய முடியாத பிறசாதியினர், வீதியிலிருந்து தரிசிப்பதற்காகவே கோபுரங்களை கட்டி, அதில், கடவுள் பொம்மைகளை வைத்தனர். இன்றும் பார்ப்பனர்களின் ஆதிக்கத் திமிரின் சின்னமாகவே இந்த ஆகம கோயில்கள் விளங்குகின்றன.

திருவாங்கூர் சமஸ்தானம் என்பது பார்ப்பனர்களின் வர்ணாஸ்ரம கோட்டையாகவே திகழ்ந்திருப்பதாக வரலாறுகள் கூறுகின்றன. அந்த மண்ணின் மைந்தர்கள் தான், அங்கே அரசர்கள். ஆனால் பார்ப்பனர்களின் அடிமைகளாகவே இருந்திருக்கிறார்கள். ’கிராந்தி’ என்ற உருது பத்திரிகை, சாதியை எதிர்த்து எழுதியது என்பதால், அங்கே நடந்த மன்னராட்சி, அந்த ஏட்டுக்கு தடை போட்டது. கோயில் சொத்துகள் எல்லாம் பார்ப்பனரே அனுபவிக்க, மன்னராட்சி அனுமதித்தது. திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் வாழும் பார்ப்பனர்களுக்கு மட்டும் தனியே ‘ஒட்டுப்புரா’ என்ற பெயரில் சாப்பாடு கூடங்களை உருவாக்கி, இலவசமாக அவர்களுக்கு மட்டும், மன்னர்கள் சாப்பாடு போட்டு வந்தார்கள். அதற்கு பல லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. பிற சாதியினர் பட்டினியால் தவித்தாலும் அங்கு போய் சாப்பிட முடியாது. பார்ப்பனர்கள் வீதியில் நடக்கும்போது சத்தம் எழுப்பிக் கொண்டே போவார்கள். சத்தம் கேட்டால், மற்ற சாதியினர் வீதிகளில் வந்தால், ஓடி மறைந்து கொள்ள வேண்டும்.

திருவிதாங்கூர் சமஸ்தான கோயில்களில் காந்தி, லாலா லஜபதிராய் போன்ற தலைவர்கள் தரிசனத்துக்குப் போனபோது அவர்கள், ‘கடற்பயணம்’ செய்தவர்கள் என்று காரணம் காட்டி, பார்ப்பனர்கள் அனுமதி மறுத்தார்கள். அந்த சமஸ்தானத்துக் கோயிலில் தான் இப்போது ‘புதையல்கள்’ வெளியே வந்திருக்கின்றன. இப்போதும் பார்ப்பனர்கள் அதே ‘வர்ணத் திமிரோடு’ மக்களுக்குப் பயன்படுத்தக் கூடாது என்று எதிர்க்கிறார்கள்.

கேரளத்தில் ஆட்சியிலிருந்த பொதுவுடைமை கட்சி கூட இந்த சொத்துகளை மக்கள் உடைமையாக்க வேண்டும் என்று கூற அஞ்சுகிறது. இதில் பா.ஜ.க.வும், கம்யூனிஸ்ட் கட்சிகளும், ஒரே நிலை எடுப்பதுதான் வேடிக்கை. இவர்கள் தான் இந்த நாட்டில் ‘புரட்சி’யை கொண்டு வரப் போகிறார்களா?

வெளிநாட்டு வங்கிகளில் முடக்கப்பட்டுள்ள பல்லாயிரம் கோடி திருட்டுப் பணத்தை வெளியே கொண்டு வரவேண்டும் என்று முழங்கும் ஊழல் எதிர்ப்பாளர்களும் சரி, உச்சநீதிமன்றமும் சரி, கோயிலுக்குள் முடங்கிக் கிடக்கும் பல லட்சம் கோடி உடைமைகளை மக்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்று கூறத் தயங்குவது ஏன்? வறுமைக் கோட்டுக்குக் கீழே 50 சதவீதத்துக்கும் அதிகமாக மக்கள் வாழ்வதாகக் கூறப்படும் ஒரு நாட்டில் கல் முதலாளிகளுக்கு பல லட்சம் கோடி ஆபரணங்களும், சொத்துகளும் தேவை தானா?

‘கடவுள்’ என்ற அச்சத்தைக் காட்டியே இப்படி நாட்டைச் சுரண்டிக் கொண்டிருக்கும் நிலையில் கடவுள் மறுப்பை பேசாமல் இருக்க முடியுமா? பகுத்தறிவு சிந்தனை வெகு மக்கள் இயக்கமாக மாற்றப்பட்டிருக்குமானால், இப்படி ‘கல் முதலாளிகள்’ பெயரில் சொத்துகள் முடக்கப்படும் நிலை தொடருமா? பகுத்தறிவு கருத்துகளைப் பரப்புவதற்கு – பொதுவுடைமையாளர்களும், ‘புரட்சி’க்கட்சிக்காரர்களும் முன் வராமல், ஒதுங்குவது ஏன்?

பார்ப்பான் ஆதிக்கமும், கல் முதலாளிகள் சுரண்டலும் இப்பொழுதும்தொடருகிறது என்பதையே ‘பத்மநாபன் சுரங்கக் கதைகள்’ உறுதிப்படுத்துகின்றன.

# உயர் கல்விய: தலித் மாணவர்கள் பின்னடைவு?

தமிழ்நாட்டில் நீண்டகாலமாகக் கல்வியில் பின்பற்றப்பட்டு வரும் இடஒதுக்கீட்டு உரிமைகளால் ஒடுக்கப்பட்ட சமுதாயம் வளர்ச்சிப் பெற்று வருவதை சமூகவியலாளர்கள் வியந்து போற்றுகிறார்கள். பெரியார் தொடங்கி வைத்த சமூகப் புரட்சியின் பயன் இது. இந்த ஆண்டு பொறியியல் கல்லூரியில் சேருவதற்கு பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் விண்ணப்பித்துள்ளனர். பொறியியல் கல்லூரியில் சேர வந்த மொத்த விண்ணப்பங்கள் 1 லட்சத்து 49 ஆயிரத்து 109. இதில் பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவர்கள் 49 புள்ளி 27 சதவீதம். அதாவது 70 ஆயிரத்து 519 பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், பொறியியல் கல்லூரிகளில் சேர முன்வந்துள்ளனர். பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு 30 சதவீதம். இதை விட 19.27 சதவீதம் பேர் கூடுதலாக விண்ணப்பித்துள்ளனர்.

அதேபோல் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவர்கள் 35 ஆயிரத்து 889 பேர் விண்ணப்பித்துள்ளனர். மொத்தம் விண்ணப்பித்தவர்களில் 25 சதவீதம் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான 20 சதவீத இடஒதுக்கீட்டைவிட 5 சதவீதம் கூடுதலாக விண்ணப்பித்துள்ளனர்.

ஆனால், தாழ்த்தப்பட்ட அதாவது ஷெட்யூல்டு பிரிவின் கீழ் விண்ணப்பித்த மாணவர்களே 17 ஆயிரத்து 928 தான். அதாவது 12 புள்ளி 52 சதவீதம். இவர்களுக்கான 18 சதவீத இடஒதுக்கீட்டைவிட சுமார் 6 சதவீதம் பேர் குறைவாகவே விண்ணப்பித்துள்ளனர். பழங்குடி சமூகத்தினருக்கு ஒதுக்கப்பட்ட ஒரு சதவீத இடங்களுக்கு 0.33 சதவீதம் பேர் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர்.

தாழ்த்தப்பட்டோர், பழங்குடி சமூகத்தினர் கல்வி நிலை பின்னோக்கிப் போவது மிகவும் கவலையளிக்கக்கூடியதாகும். சாதிய ஒடுக்குமுறைக்கு உள்ளாகியுள்ள தலித் மாணவர்களின் தன்மானமும், சமத்துவமும், சம உரிமையும் அவர்கள் பெறும் உயர் கல்வியில்தான் அடங்கியிருக்கிறது. தமிழ் நாட்டில் இப்படி ஒரு நிலை தொடரவே கூடாது. இந்த ஆபத்தானப் போக்கை தடுத்து நிறுத்துவது எப்படி என்பதை பெரியாரிஸ்டுகளும், அம்பேத்கரிஸ்டுகளும், ஆட்சியாளர்களும் கவலையுடன் சிந்தித்து தலித் மாணவர்களின் கல்வித் தடைகளை நீக்கும் முயற்சிகளில் இறங்கியாக வேண்டும்.

## பெரியார் தொழிலாளர் கழக முடிவுகள்

2.7.2011 மாலை 4 மணியளவில் சேலம் மாவட்டம் நங்கவள்ளி கழகம் சார்பில் கழக தொழிற்சங்கமான ‘பெரியார் தொழிலாளர் கழகம்’ என்ற தொழிற் சங்கம் நங்கவள்ளி கே.வி.ஆர். என்ற தனியார் ஸ்பின்னிங் மில்லில் தொடங்குவது குறித்த கலந்துரையாடல் கூட்டம், நங்கவள்ளி இராசேந்திரன் ‘சுடர் மின்கல பணி மையத்தில் மாநில பெரியார் தொழிலாளர் கழகத் தலைவர் கோபி. இளங்கோவன் தலைமையில் கழக தொழிற்சங்க மாநில பொருளாளர் கோபி. கருப்பண்ணன், சேலம் மாவட்ட கழக செயலாளர் அ. சக்திவேல், கழக அமைப்பாளர் நங்கவள்ளி சீ. அன்பு, மேட்டூர் நகர தலைவர் அ. அண்ணாதுரை ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

எதிர்வரும் 12.7.2011 மாலை 3 மணியளவில் நங்கவள்ளி கே.வி.ஆர். ஸ்பின்னிங் மில்லில் பணிபுரியும் தொழிலாளர்களை ஒருங்கிணைத்து ‘பெரியார் தொழிலாளர் கழகம்’ என்ற கழக தொழிற்சங்க தொடக்க விழா நடத்துவது எனவும்.

தொடக்க விழாவிற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணியை அழைத்து சங்க பெயர் பலகை திறந்து கொடியேற்று நிகழ்ச்சியினை செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

சங்க புதிய பொறுப்பாளர்களாக சங்க தலைவர் - கா.கொ. சிவக்குமார், செயலாளர் - நா.குமார், பொருளாளர் - பா. செந்தில்குமார், துணை தலைவர் - து.கணேசன், துணை செயலாளர் - மா. அருள்குமார், சட்ட ஆலோசகராக எம்.கே. அர்ச்சுணன் ஆகியோர் மாநில தொழிற்சங்க தலைவர் ஒப்புதலுடன் நியமிக்கப்பட்டனர்.

கூட்டத்தில் நங்கவள்ளி கிஷ்ணன், அருள் செல்வன் ஆர்.எஸ். நாகராஜ், மேட்டூர் அனல் மின் நிலைய கழக தொழிற் சங்க பொருளாளர் அ.இராமச்சந்திரன், செந்தில் மற்றும் கழக தொழிற் சங்க உறுப்பினர்கள் 15-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இறுதியாக அனைவருக்கும் தேனீர் வழங்கப்பட்டு நங்கவள்ளி கிருஷ்ணன் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

# அமிர்தலிங்கம் கொலையின் பின்னணி என்ன? [5]

> **ராஜீவ் சர்மாவின் ‘புலிகளுக்கு அப்பால்....’ நூலுக்கு மறுப்பு தெரிவித்து, சென்னை (ஜூன் 4) வெளியீட்டு விழாவில் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரையின் தொகுப்பு.**

பிரேமதாசாவும் விடுதலைப் புலிகளும் போர் நிறுத்தம் செய்து பேச்சு வார்த்தைத் தொடங்கியதை குலைத்து பிரேமதாசாவுக்கு கடும் நெருக்கடிகளை உருவாக்க திட்டமிட்டது இந்திய உளவுத் துறை!

தமிழர் அய்க்கிய விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கம் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் இருவரும் 1989 ஜூலை 13 ஆம் தேதி கொழும்பில் அமிர்தலிங்கம் வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டனர். அமிர்தலிங்கம் அவர்களோ, யோகேஸ்வரனோ, ஆயுதம் தாங்கிய போராளிகள் அல்ல. காந்திய வழியைப் பின்பற்றியவர் அமிர்தலிங்கம். அவர் செய்த ஒரே தவறு, இந்திய உளவுத் துறையை முழுமையாக நம்பியதுதான். தமிழ் ஈழ விடுதலையை இந்தியா மீட்டெடுத்து, தன்னிடம் ஒப்படைக்கும் என்று அவர் மலை போன்ற நம்பிக்கையைக் கொண்டிருந்தார். ஆனால் நடந்ததோ வேறு.

அமிர்தலிங்கம் - யோகேஸ்வரன் ஆகிய இரு தலைவர்களையும், அவரது வீட்டில் சுட்டுவிட்டு தப்பி வெளியே ஓடி வந்த 3 பேரை அமிர்தலிங்கம் வீட்டில் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்ட காவலர்கள் சுட்டுக் கொன்றனர். இந்தக் கொலைப் படைக்கு தலைமை தாங்கி காவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்டவர் விசு. அலாய்சியஸ், விக்னம் ஆகிய மூன்று பேர். இதில் விசு - யார்? மாத்தையாவின் வலதுகரமாக செயல்பட்டவர்.

இந்திய உளவுத் துறையின் வலையில் சிக்கியிருந்த மாத்தையா - பிரேமதாசாவுடன் புலிகள் பேச்சு வார்த்தையைக் குழப்பிட இந்திய உளவுத் துறையின் திட்டத்தை ஏற்று நடத்திய கொலைதான் இது! இதைச் செய்தது யார் என்பது பற்றி பத்திரிகைகளிலே குழப்பமான செய்திகள் வந்தன. ‘வீரகேசரி’ நாளேடு விடுதலைப் புலிகள், அமிர்தலிங்கத்தைக் கொலை செய்ததை ஒப்புக் கொண்டுவிட்டதாக செய்தி வெளியிட்டது. அதே நாளில் கொழும்பிலிருந்து வெளிவந்த ஆங்கில நாளேடுகள், இந்தக் கொலையில் தங்களுக்கு தொடர்பில்லை என்று புலிகள் மறுப்பு தெரிவித்துள்ளனர் என்று செய்தி வெளியிட்டன. ஒரே நாளிலேயே இரண்டு செய்திகளும் வெளி வந்ததுதான் வேடிக்கை.

“விடுதலைப் புலிகள் தமிழர்களைக் கொல்லும் சக்தியுடனேயே இருக்கிறார்கள். இலங்கை அரசால் விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்த முடியாது. எனவே, இந்திய ராணுவம் வடக்கு - கிழக்குப் பகுதியிலிருந்து வெளியேறுவது ஆபத்து” என்ற கருத்தை உருவாக்குவதே உளவு நிறுவனங்களின் திட்டம். இந்தத் திட்டத்தை அப்படியே ஜே.என். தீட்சத்தும் தனது நூலில் (Assignment in Colombo) வழிமொழிந்து அமிர்தலிங்கம் கொலையை நடத்தியது விடுதலைப் புலிகளே என்று எழுதினார்.

“இலங்கைத் தமிழர்களை ஜனநாயகப் பாதைக்கு அமிர்தலிங்கம், திருப்பி விடுவார் என்ற அச்சத்தின் காரணமாகவே விடுதலைப் புலிகள் அமிர்த லிங்கத்தைக் கொலை செய்தார்கள்” என்று ஜே.என். தீட்சத் உண்மையை மறைத்து எழுதினார். கொன்றது விடுதலைப் புலிகள் அல்ல; இந்திய உளவு நிறுவனம் - மாத்தையாவைப் பயன்படுத்தி நடத்திய சதி என்பது தெரிந்திருந்தும் புலிகள் மீதே பழி போடும் நோக்கத்தையே பிரதிபலித்தார்.

அமிர்தலிங்கத்தைச் சுட்ட 3 பேரும் தப்பி வந்தபோது, அமிர்தலிங்கத்தின் பாதுகாவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார்கள் என்பதும், அவர்கள் மாத்தையாவின் ஆட்கள் என்பதும் உண்மை. இது பற்றி மற்றொரு ஆதாரத்தை நான் முன் வைக்க விரும்புகிறேன். தமிழ் ஈழத்திலே நடந்த அரசியல் படுகொலைகள் பலவற்றுக்கும் காரணமாக இருந்த இந்திய உளவுத் துறை, அத்தனை பழிகளையும் விடுதலைப் புலிகள் மீதே போட்டதும், இங்கே பார்ப்பன ஊடகங்கள் அதையே மீண்டும் மீண்டும் எழுதி, உண்மையாக உறுதி செய்ததும், பாமர மக்களை நம்பச் செய்ததும், எவ்வளவு மோசமான பார்ப்பன சூழ்ச்சி என்பதை, நாம் புரிந்து கொள்ள வேண்டும். ராஜீவ் சர்மாவும் கூசாமல் இந்த நூலில் அதே பழியைத்தான் போடுகிறார்!

ஒரு மகத்தான விடுதலை இயக்கத்தின் மீது, இப்படி புழுதிவாரி தூற்றி, களங்கப்படுத்திய இந்த கயமைப் பிரச்சாரங்களுக்கு பதில் கூறுவதற்கான ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்றே கருது கிறேன். அவர்களோ விடுதலைப் புலிகள் மீது எந்த ஆதாரமும் இல்லாமல் அபாண்டமாக பழி சுமத்துகிறார்கள். அதே வழியில் எந்த ஆதாரங்களும் இல்லாமல், ஏதோ, உணர்வுகளின் அடிப்படையில் நாம் அவற்றை மறுக்கவில்லை. மாறாக, மறுப்புகளை உரிய ஆதாரங்கள் தரவுகளுடன் தான் மறுக்கிறோம். அமிர்தலிங்கத்தை விடுதலைப் புலிகள் ஏன் கொலை செய்ய வேண்டும்? தீட்சத் கூறுவதுபோல் ஈழத் தமிழர்களின் கருத்துகளை அப்படியே தன் பக்கம் திருப்பிவிடக் கூடிய செல்வாக்குள்ள தலைவராகத் தான் அமிர்தலிங்கம் இருந்தாரா? அந்தக் காலக் கட்டத்தில் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் முழுமையாக விடுதலைப் புலிகளிடமே தங்கி யிருந்தது என்ற உண்மை சிறு குழந்தைகளுக்குக்கூட தெரியுமே! அமிர்தலிங்கத்தையும், யோகேஸ்வரனை யும் விடுதலைப் புலிகள் கொல்வதற்கு ஏதேனும் ஒரு காரணத்தைக் கூறியாக வேண்டிய கட்டாயம் - உளவு நிறுவனத்துக்கும், ஜெ.என். தீட்சத்துக்கும் இருந்தது. எனவே சொத்தையான எவருமே ஏற்றுக் கொள்ள முடியாத காரணத்தை ஜே.என். தீட்சத் முன் வைக்கிறார்; அவ்வளவுதான்.

அமிர்தலிங்கத்தை சுட்டுக் கொன்றவர்கள் பற்றிய விவரங்களை அமிர்தலிங்கத்தின் வரலாற்றை எழுதிய டி.சபாரத்தினம் விளக்கிக் கூறியுள்ளார். டி.சபா ரத்தினம், 1996 ஆம் ஆண்டு, அமிர்தலிங்கத்தின் வரலாற்றை எழுதி, ‘The Murder of a Moderate’ என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளார். அதில் அமிர்தலிங்கம் கொலை பற்றி எழுதப்பட்டுள்ளது. என்ன?

“அமிர்தலிங்கத்தைக் கொன்றவர்கள், எந்த அரசியல் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பதில் பெரும் குழப்பமே நீடிக்கிறது. இதில் பல்வேறு கருத்துகள் கூறப்படுகின்றன. அமிர்தலிங்கத்தை சுட்ட விசு, வவுனியாவுக்கு விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுக்கு தலைவராக இருந்தவர். அதுவரை அந்தப் பதவியில் இருந்த தினேஷ் என்பவர் காணாமல் போன பிறகு நியமிக்கப்பட்ட விசு, அதன் பிறகு, **விடுதலைப் புலிகள் இயக்கத்தை விட்டு வெளியேறி விட்டதாகக்** கூறுகிறார்கள். வேறு சிலர், “இல்லை, விசு, அப்போதும், விடுதலைப் புலிகள் இயக்கத்தில்தான் இருந்தார்” என்றார்கள். லண்டனில் உள்ள விடுதலைப் புலிகள் தலைமையகம் அமிர்தலிங்கம் கொலையில், விடுதலைப் புலிகளுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்று அறிக்கையே வெளி யிட்டது. புலிகளின் அந்த அறிக்கை அமிர்தலிங்கம், கொலையைக் கண்டித்தது. இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்து வரும் பேச்சு வார்த்தையை விரும்பாத சக்திகளே, இந்தக் கொலையை செய்து, விடுதலைப் புலிகள் மீது பழிபோட்டு, களங்கம் கற்பிக்கின்றன என்றும் அந்த அறிக்கை குற்றம் சாட்டியது. அத்துடன், “தமிழர் அய்க்கிய விடுதலை முன்னணி தலைவர் அமிர்த லிங்கம் மற்றும் யோகேஸ்வரன் ஆகியோரின் மறைவுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் ஆழ்ந்த கவலையுடன் துயரத்தை வெளிப்படுத்திக் கொள்கிறது. சில ஈவிரக்கமற்ற கொடூர சக்திகள் விடுதலைப் புலிகளை களங்கப்படுத்தி, அரசுக்கும் புலிகளுக்கு மிடையே நடக்கும் பேச்சு வார்த்தையை சீர்குலைக்க திட்டமிடுவதாகவே சந்தேகிக்கிறோம்.”

- “The LTTE learned with deep distress the tragic demise of the T.U.L.F. leaders, Amirthalingam and Yogeswaran. We suspect that diabolical forces are at work to discredit the organization and to disrupt the current peace talks between the LTTE and the government of Sri Lanka” - என்று அந்த அறிக்கை கூறியது.

ஆக, அமிர்தலிங்கம் வரலாற்றை எழுதியவரே புலிகள் மீதான குற்றச்சாட்டை உறுதி செய்ய வில்லை.

இத்தகைய ராணுவ ரீதியான நடவடிக்கைகளை புலிகள் மேற்கொண்டால் அவர்கள் அதை மறுக்கும் வழக்கமுமில்லை என்பது புலிகள் வரலாற்றை அறிந்தவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

- இந்திய ராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என்ற விடுதலைப் புலிகள் நியாயமான கோரிக்கைக்கு இலங்கை அரசே ஆதரவு தந்து போர் நிறுத்தம் செய்து புலிகள் சம்மதத்துடன் பேச்சு வார்த்தை களை நடத்திக் கொண்டிருந்த ஒரு நல்ல வாய்ப்புச் சூழலில் கிடைத்த நல்ல வாய்ப்பை விடுதலைப் புலிகளே குலைப்பார்களா என்பதை நடுநிலையில் சிந்திக்கும் எவருமே புரிந்து கொள்ள முடியும்.

இந்த உளவு நிறுவன சதியை அன்றைய பிரேமதாசா அரசும் நன்றாகவே புரிந்து கொண்டது. இலங்கை அரசாங்கமே நடத்தும் ‘டெய்லி நியூஸ்’ பத்திரிகை இது பற்றி வெளியிட்ட செய்தியே (1989 ஜூலை 14) என்ன தெரியுமா?

“அமிர்தலிங்கம் கொலையை நடத்தியதே விடுதலைப் புலிகள்தான் என்று தவறாக, புலிகள் மீது பழிபோடும் முயற்சிகள் நடக்கின்றன. இத்தகைய முயற்சிகள் பற்றி, அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகிறார்கள்” - இதுதான் இலங்கை அரசின் அதிகாரபூர்வ பத்திரிகை வெளியிட்ட செய்தி.

ஈழப் போராட்டத்தின் தொடக்கக் காலத்தி லிருந்து உன்னிப்பாக ஆராய்ந்து ஜெயரத்தினம் வில்சன் என்ற ஆய்வாளர் ‘Break-up of Srilanka’ என்ற நூலை எழுதியுள்ளார். அதில் 1983-86 ஆம் ஆண்டுகளின் நிலையை இவ்வாறு குறிப்பிடுகிறார்:

“எனக்கு தெரிந்தவரை இலங்கையில் தங்களின் தலையீட்டுக்காகவே இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்கள் திட்டங்களை உருவாக்கி வெவ்வேறு கட்டங்களில் அமுல்படுத்தி வந்துள்ளனர். இந்தியா வின் இத் திட்டத்தால் தமிழர் அய்க்கிய முன்னணி தலைவர்களும், போராளி இயக்கங்களும் நம்பிக்கை பெற்றன. தமிழர் தலைவர்களை ஏமாற்றி திசை திருப்புவதுதான் இந்தியாவின் நோக்கம் என்ற கருத்து ஊகமாகக்கூட இருக்கலாம். ஆனால் – ஒன்று மட்டும் உண்மை. தமிழ் தலைவர்களுக்கும் போராளிகளுக்கும் இந்தியா இந்த உதவிகளை செய்ததன் மூலம் அவர்கள் அனைவரும், இந்தியாவின் கட்டுப்பாட்டின் கீழ் வந்து விட்டார்கள்” என்று எழுதும் ஜெயரத்தனம் வில்சன், மேலும் எழுதுகிறார்:

“இந்தியாவின் ‘ரா’ (RAW) உளவு நிறுவனம், இந்தக் கருத்தை உருவாக்குவதில் முனைப்புடன் செயல்பட்டது. ‘ரா’வின் ஏஜெண்டுகள் தமிழ் போராளி குழுக்களிடையே ஊடுருவினார்கள். அவர்களிடமிருந்து பல முக்கிய ரகசிய தகவல்களை சேகரித்ததோடு, போராளிகள் குழுக்களிடையே பிளவுகளை உருவாக்கி, ஒரு குழு, மற்ற குழுவை அடக்கிடும் வலிமை பெற்று விடாமல், சமநிலையில் இருக்குமாறு பார்த்துக் கொண்டனர். இந்த முயற்சியில் முதல் கூட்டத்தில் ‘ரா’ உளவு நிறுவனம் வெற்றிப் பெற்றது என்பது உண்மைதான். ஆனால், கடைசியாக விடுதலைப் புலிகள், வலிமை பெற்று உயர்ந்து நின்றதைத் தடுக்க முடியாமல் **‘ரா’ அவர்களிடம் தோற்றுப் போய் விட்டது”** – என்று எழுதுகிறார்.

ஆக -

- அமிர்தலிங்கத்தை சுட்டவர்கள் - மாத்தையாவின் ஆட்கள்.
- அமிர்தலிங்கம் மரணத்தைக் கண்டித்த - புலிகள் இயக்கம். அவரைக் கொன்றவர்கள் பேச்சு வார்த்தையை குலைக்க விரும்பும் சக்திகள் என்று பகிரங்க அறிக்கை விடுத்தது.
- அமிர்தலிங்கம் வரலாற்றை எழுதியவரே கொலையில் உறுதியான முடிவுக்கு வரவில்லை.
- இலங்கை அரசே, அமிர்தலிங்கம் கொலையில் புலிகள் தொடர்பை மறுத்தது.
- அமிர்தலிங்கத்தை கொலை செய்யக் கூடிய தேவையோ, அரசியல் சூழலோ புலிகளுக்கு

6 ஆம் பக்கம்

# கல்லூரி – பள்ளிகள் முன்பு தமிழ்நாடு மாணவர் கழகம் தொடர் வாயிற் கூட்டங்கள்

பெரியார் திராவிடர் கழகத்தின் முன்னணி அமைப்பான தமிழ்நாடு மாணவர் கழகம், கல்விக் கொள்கை - கல்விக் கொள்ளை - கல்வி சீர்திருத்தம் குறித்து தோழர்கள் பேசுவார்கள்.

கல்லூரி, பள்ளி வாயில்களில் ஜூலை 18 தொடங்கி ஆகஸ்டு 5 வரை தொடர் வாயிற் கூட்டங்களை நடத்துகிறது.

தலைமை : தோழர் ந. பன்னீர்செல்வம், மாநில அமைப்பாளர், தமிழ்நாடு மாணவர் கழகம்

அறிவியல் விளக்க உரை : தோழர் புதியவன், தோழர் காவை.இளவரசன், தோழர் துரை.தாமோதரன்

| நாள் | நேரம் | இடம் | ஊர் |
|---|---|---|---|
| 18.07.11 | பகல் 12.00 | அண்ணாமலைப் பல்கலைக்கழகம் | சிதம்பரம் |
| | மாலை 4.00 | அரசு நந்தனார் மேனிலைப்பள்ளி | சிதம்பரம் |
| 19.07.11 | காலை 8.00 | அரசு கலைக்கல்லூரி | பூம்புகார் |
| | பகல் 1.00 | ஏ.வி.சி கலைக் கல்லூரி | மயிலாடுதுறை |
| | மாலை 4.00 | நகராட்சி மேனிலைப்பள்ளி | மயிலாடுதுறை |
| 20.07.11 | காலை 8.00 | அரசு கலைக்கல்லூரி | கும்பகோணம் |
| | பகல் 1.00 | அரசு சரபோஜி கலைக்கல்லூரி | தஞ்சாவூர் |
| | மாலை 4.00 | கரந்தை தமிழ்க்கல்லூரி | தஞ்சாவூர் |
| 21.07.11 | காலை 8.00 | அண்ணா பல்கலைக்கழகம் | திருச்சி |
| | காலை 10.00 | பாரதிதாசன் பல்கலைக்கழகம் | திருச்சி |
| | பகல் 1.00 | ஈ.வெ.ரா. அரசு கலைக்கல்லூரி | திருச்சி |
| | மாலை 4.00 | ஜமால்முகம்மது கலை, அறிவியல் கல்லூரி | திருச்சி |
| 22.07.11 | காலை 8.00 | அரசு மேனிலைப்பள்ளி | திருவரங்கம் |
| | பகல் 1.00 | அரசு மேனிலைப்பள்ளி | காட்டூர் |
| | மாலை 4.00 | தேசியக்கல்லூரி | திருச்சி |
| 25.07.11 | காலை 8.00 | மன்னர் திருமலை கலைக்கல்லூரி | மதுரை |
| | பகல் 1.00 | சட்டக்கல்லூரி | மதுரை |
| | மாலை 4.00 | காமராசர் பல்கலைக்கழகக்கல்லூரி | மதுரை |
| 26.07.11 | காலை8.00 | காமராசர் பல்கலைக்கழகம் | மதுரை |
| | பகல் 1.00 | பசும்பொன்முத்துராமலிங்கம் கலைக்கல்லூரி | உசிலம்பட்டி |
| | மாலை 4.00 | அருளானந்தர் கலைக்கல்லூரி | கருமாத்தூர் |
| 27.07.11 | காலை 8.00 | அரசினர் தொழிற்பயிற்சிநிலையம் ITI | தேனி |
| | பகல்1.00 | ஹாஜி கருத்தராவுத்தர் கல்லூரி | உத்தமபாளையம் |
| | மாலை 4.00 | அரசு மேனிலைப்பள்ளி | போடி |
| 28.07.11 | காலை 8.00 | தங்கம் முத்து பாலிடெக்னிக் | பெரியகுளம் |
| | பகல் 1.00 | அரசு மேனிலைப்பள்ளி | ஆத்தூர் |
| | மாலை 4.00 | கே.ஆர் அரசு மேனிலைப்பள்ளி | ஒட்டன்சத்திரம் |
| 29.07.11 | காலை 8.00 | பழனியாண்டவர் கலை பண்பாட்டுக்கல்லூரி | பழனி |
| | பகல் 1.00 | நகராட்சி ஆண்கள் மேனிலைப்பள்ளி | பழனி |
| | மாலை 4.00 | பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி | பழனி |
| 01.08.11 | காலை 9.00 | அரசு மேனிலைப்பள்ளி | வேம்பார்பட்டி |
| | பகல் 1.00 | நகராட்சி ஆண்கள் மேனிலைப்பள்ளி | திண்டுக்கல் |
| | மாலை 4.00 | காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம் | காந்திகிராமம் |
| 02.08.11 | காலை 9.00 | ஆர்.வி.எ பொறியியல் கல்லூரி | திண்டுக்கல் |
| | பகல் 1.00 | அரசு கலைக்கல்லூரி | தான்தோன்றிமலை |
| | மாலை4.00 | நகராட்சி ஆண்கள் மேனிலைப்பள்ளி | கரூர் |
| 03.08.11 | காலை 8.00 | அரசு மேனிலைப்பள்ளி | வேலாயுதம்பாளையம் |
| | பகல் 1.00 | அரசு மேனிலைப்பள்ளி | கிருட்டிணராயபுரம் |
| | மாலை 4.00 | அரசு கலைக்கல்லூரி | குளித்தலை |
| 04.08.11 | காலை 8.00 | அரசு மேனிலைப்பள்ளி | அம்மாபாளையம் |
| | பகல் 1.00 | அரசுகலைக்கல்லூரி | பெரம்பலூர் |
| | மாலை 4.00 | அரசு மேனிலைப்பள்ளி | பெரம்பலூர் |
| 05.08.11 | காலை 8.00 | அரசு மேனிலைப்பள்ளி | ஆத்தூர் |
| | பகல் 1.00 | அண்ணா அரசு கலைக்கல்லூரி | ஆத்தூர் |
| | மாலை 4.00 | அரசு மேனிலைப்பள்ளி | வாழப்பாடி |

பயணத் திட்டம் குறித்து தொடர்புக்கு: ந. பன்னீர்செல்வம், பேசி: 98944 53095

## திருப்பூரில் இந்துத்துவ சக்திகளுக்கு பதிலடி

19.6.2011 அன்று மாலை 6 மணிக்கு திருப்பூர் கொங்குமெயின் சாலையில் மூட நம்பிக்கை ஒழிப்புப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. செ. செகநாதன் தலைமை வகித்தார். கழகப் பேச்சாளர்கள் காசு. நாகராசு, கோபி. வேலுச்சாமி சிறப்புரையாற்றினர். காவை இளவரசனின் ‘மந்திரமல்ல தந்திரமே’ நிகழ்ச்சி நல்ல வரவேற்பைப் பெற்றது..

பொதுக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்பாக ஊர்வலமாக வந்த இந்துமத வெறியர்கள், பாரத் மாதாகி ஜே என்று முழக்கமிட்டனர். அவர்களுக்கு பதிலளித்து காசு. நாகராசு உரையாற்றினார். கா.சு. நாகராசு, கோபி வேலுச்சாமி உரையை பொது மக்களை சிந்திக்கச் செய்தது. க. சீனிவாசன் நன்றி கூறினார்.

கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் சு. துரைசாமி, மாநகர தலைவர் இரமேசு பாபு, மாநகர செயலாளர் முகில்ராசு, அகிலன், கிளாகுளம் செந்தில், பாடகர் தியாகு, பல்லடம் விஜயன், சூலூர் வீரமணி, மூர்த்தி, ஜீவா நகர், சாமுண்டி புரம், மாஸ்கோ நகர் வெள்ளியங்காடு தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டனர். செகநாதன், சீனிவாசன் மற்றும் தோழர்கள் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

## இராஜபக்சேயை போர்க் குற்றவாளியாக அறிவிக்கக் கோரி கழகப் பொதுக் கூட்டம்

தமிழீழ மக்கள் மீது தவறான போரை நடத்தி தமிழ் மக்களை இனப்படுகொலை செய்த கொடுங்கோலன் இராஜபக்சேவை போர்க் குற்றவாளியாக அறிவிக்க வலியுறுத்தி கழகத்தின் சார்பில் 24.6.2011 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு திருப்பூர் வெள்ளியங்காடு 60 அடி சாலையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

மாநகர கழகத் தலைவர் இரமேஷ் பாபு தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பாடகர் தியாகு, அவிநாசியப்பன் ஆகியோர் பாடல்களை பாடினர். பலலடம் திருமூர்த்தி ‘மந்திரமா தந்திரமா’ நிகழ்ச்சி நடத்தினார். மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழக கொள்கை பரப்புச் செயலாளர் நாஞ்சில் சம்பத், கழகப் பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

மற்றும் ஆட்சிக் குழு உறுப்பினர் பொள்ளாச்சி மனோகரன், திருப்பூர் மாவட்ட செயலாளர் கருமலையப்பன், மாவட்ட தலைவர் துரைசாமி, ம.தி.மு.க. நகரச் செயலாளர் சு.சிவபாலன், 15 வேலம்பாளையம் நாகராஜ், கழக மாநகர் செயலாளர் முகில்ராசு, ஒன்றிய தலைவர் அகிலன் விஜயகுமார், சண். முத்துக்குமார், பாண்டியநாதன், ஆடிட்டர் குணசேகரன் மற்றும் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டு பேசினர்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை மாணவரணி அமைப்பாளர் கார்த்திகேயன், கமல், முரளி, தினேஷ், மநேந்திரன், தினேஷ் குமார், கார்த்தி, கலை, பிரகாஷ், இராஜேஷ், குகன் ஆகியோர் செய்திருந்தனர்.

# அரூரில் ராஜபக்சேவின் போர்க் குற்றங்கள் விளக்கம்

அய்.நா. வல்லுநர் குழு அறிக்கையும், தமிழர் கடமைகளும் பொதுக் கூட்டம் 29.06.2011 மாலை 6 மணிக்கு அரூரில் நடைபெற்றது. முன்னதாக சமர்பா குமரன் குழுவினர் இன எழுச்சி இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

பொதுக் கூட்டத்துக்கு மாவட்ட கழக அமைப்பாளர் கொ. வேடியப்பன் தலைமை வகித்தார். அ. இளம்பரிதி, நெ.த. அறிவுடை நம்பி, கணேசன், நஞ்சப்பன், செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



இராசுகுமார் வரவேற்றார். கிருட்டிணகிரி மாவட்ட அமைப்பாளர் பழனிச்சாமி, தமிழின மான மீட்பு இயக்க க. சிவக்குமார், நாடு கடந்த தமிழீழ அரசு தோழமை மைய அமைப்பாளர் பேராசிரியர் சரசுவதி, கழக பொதுச் செயலாளர் கோவை கு. இராம கிருட்டிணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

பெரும் திரளாக தமிழின உணர்வாளர்களும், கழக ஆதரவாளர்களும் கலந்து கொண்ட பொதுக் கூட்டம் மாநாடு போல் காட்சியளித்தது.

# ஈழ விடுதலையில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் ன் மகத்தான பங்களிப்பு

தமிழ்நாட்டில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆக்கப்பூர்வமான உதவிகளை செய்த பெருமை மறைந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு உண்டு. இதை எவராலும் மறுக்க முடியாது. விடுதலைப் புலிகள் இயக்கமே இதை நன்றியுடன் பதிவு செய்திருக்கிறது.

- விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு இரண்டு தவணைகளில் பல கோடி ரூபாய் நிதியை வழங்கியவர் - மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். தான். இரண்டாவது முறை - அரசு நிதியிலிருந்து வழங்கிய காசோலைக்கு ராஜீவ் ஆட்சி எதிர்ப்பு தெரிவித்ததால் "அந்தக் காசோலையைக் கிழித்தெறியுங்கள்; எனது சொந்தப் பணத்தைத் தருகிறேன்" என்று கூறி, சொந்தப் பணத்தை எடுத்துத் தந்தவர் அவர்தான்.
- சென்னை துறைமுகத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வந்து இறங்கியபோது அதை துறைமுகத்திலிருந்து வெளியே எடுப்பதற்கு தடைகள் வந்தபோது, முதல்வர் என்ற முறையில் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, ஆயுதங்களைக் கிடைக்கச் செய்தவர் எம்.ஜி.ஆர். தான்.
- ஈழத் தமிழர்களுக்காக தான் கருப்புச் சட்டை அணிந்ததோடு, தனது சக அமைச்சர்களையும் கருப்புச் சட்டை அணியச் செய்தவர் எம்.ஜி.ஆர். தான்.
- இந்தியாவின் ராணுவம் ஈழத்துக்குப் போக வேண்டும் என்ற ஒரு கருத்து தமிழகத்தில் சிலரால் முன் வைக்கப்பட்டபோது முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர். தமிழக சட்டமன்றத்திலேயே, "ஈழத் தமிழர்களோ, விடுதலைப் புலிகளோ, தங்கள் நாட்டுக்கு ராணுவம் அனுப்புமாறு கேட்கவில்லை" என்று சட்டமன்றத்தில் கூறி ராணுவத்தை அனுப்புவதையே எதிர்த்தவர் எம்.ஜி.ஆர்.
- ராஜீவ் காந்தி - ஜெயவர்த்தனாவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு அதை புலிகள் ஏற்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தினார்கள். டெல்லி அசோகா ஓட்டலிலே பிரபாகரனை சிறைபிடித்து வைத்துக் கொண்டு முதல்வர் எம்.ஜி.ஆரை. சென்னையிலிருந்து அழைத்து வந்து பிரபாகரனிடம் ஒப்பந்தத்தை ஏற்க வைக்குமாறு நிர்ப்பந்தித்தார்கள். எம்.ஜி.ஆர். அப்போதும், பிரபாகரனை கட்டாயப்படுத்தி ஏற்கச் செய்து, ராஜீவ் ஆட்சியிடம் நற் சான்றிதழ் பெற விரும்பவில்லை. "உங்களுக்கு எது சரி என்று தோன்றுகிறதோ அதன்படி முடிவு எடுங்கள்" என்று பிரபாகரனிடம் கூறியவர் - எம்.ஜி.ஆர். தான்!
- ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தைப் பாராட்டி சென்னையில் ராஜீவ் காந்திக்கு பாராட்டு விழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த விழாவில் பங்கேற்க விரும்பாத முதல்வர் எம்.ஜி.ஆர்., தனது சிகிச்சைக்காக முதல் நாளே அமெரிக்கப் பயணத்துக்கு ஏற்பாடு செய்து விட்டார். இந்த செய்தியறிந்து டெல்லியிலிருந்து 'ஹாட் லைனில்' தொடர்பு கொண்டு எம்.ஜி.ஆரிடம் ராஜீவ் காந்தியே, 'நீங்கள் அந்த தேதியில் அமெரிக்கா போகக் கூடாது; பயணத்தை தள்ளிப் போட்டுவிட்டு, பாராட்டு விழாவில் பங்கேற்க வேண்டும்' என்று கட்டாயப்படுத்தினார். தனக்கு உடன்பாடு இல்லாமலே 'வேண்டா வெறுப்போடு' அந்த விழாவிலே எம்.ஜி.ஆர். கலந்து கொண்டார். ஒப்பந்தத்தைப் பற்றி எதுவும் பேசவில்லை.
- உடல் நல சிகிச்சைக்காக அமெரிக்க மருத்துவமனையிலே இருந்த நிலையில் கூட எம்.ஜி.ஆர்., ஈழப் பிரச்சினைகளை உன்னிப்பாக கவனித்து வந்தார். இந்திய அரசின் துரோகத்துக்கு எதிராக நீதி கேட்டு, ஒரு சொட்டு தண்ணீர்கூட அருந்தாமல் திலீபன் வீரமரணமடைந்த செய்தியால் கலங்கிப் போன எம்.ஜி.ஆர். திலீபன் உண்ணாவிரதம் - இந்திய அரசுக்கு எதிரானது என்ற நிலையிலும், திலீபன் மறைவுக்கு அமெரிக்காவிலிருந்து இரங்கல் செய்தி அனுப்பினார்.
- "திலீபன் அவர்கள் இந்திய அரசுக்கு அய்ந்து கோரிக்கைகளை முன் வைத்து பட்டினிப் போர் தொடங்கி, 12 நாட்கள் ஒரு சொட்டு நீர்கூட குடிக்காமல் 26.9.87 இல் மடிந்து போனார் என்பதை அறிந்து வருந்துகிறேன். எனது சார்பிலும் தமிழக மக்கள் சார்பிலும் - தமிழக அரசு சார்பிலும் ஆழ்ந்த அஞ்சலியை தெரிவிக்கிறேன்" என்று தமிழக அரசின் 'அஞ்சலி'யை திலீபனுக்கு காணிக்கையாக்கியவர் எம்.ஜி.ஆர்.
- அது மட்டுமல்ல; புலேந்திரன், குமரப்பா உள்ளிட்ட 17 விடுதலைப் புலிகளை போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்த பிறகு ஒப்பந்தங்களுக்கு எதிராக, அவர்களைக் கைது செய்து, அவர்களை சிங்கள ராணுவம் கொழும்புக்கு விசாரணைக்கு அழைத்துப் போனது; நியாயமாக, ஒப்பந்தத்துக்கு எதிரான இந்த செயலை ஈழத்தில் நிலை கொண்டிருந்த இந்திய ராணுவம் தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும்; வேண்டுமென்றே அதை செய்யவில்லை. புலேந்திரன், குமரப்பா உள்ளிட்ட 12 புலிகள் இயக்கத்தின் மரபுக்கேற்ப, ராணுவத்திடம் உயிருடன் பிடிபடக் கூடாது என்று 'சைனைடு' அருந்தி பலியானார்கள். அமெரிக்க மருத்துவமனையிலிருந்து இந்த செய்தி அறிந்து துடித்த எம்.ஜி.ஆர். அங்கிருந்து - உயிரிழந்த மாவீரர்களுக்கு இரங்கல் செய்தியையும், இந்தியாவின் அலட்சியத்தையும் சுட்டிக் காட்டியும் செய்தி அனுப்பினார். "தங்களால் கைது செய்யப்பட்ட 17 விடுதலைப் புலிகளையும், இலங்கை கடற்படை இந்திய அமைதிப் படையிடம் ஒப்படைத்திருக்குமானால், அவர்களுள் 12 பேர் ஒட்டு மொத்தமாக தற்கொலை செய்து கொண்டிருக்க மாட்டார்கள். வன்முறைகளும் வெடித்திருக்காது. இந்திய இலங்கை உடன்படிக்கையின் அடிப்படையில் இடைக்கால அரசு ஒன்று ஏற்பட வேண்டிய நேரத்தில், வன்முறைகள் வெடித்ததும், அதில் இந்திய அமைதிப் படையும் விடுதலைப் புலிகளும் இறங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதும் கவலைக்குரியது. இந்தக் கடினமான பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வுகளைத் தொடர்ந்து முயற்சிப்பேன். தமிழக அரசு இது பற்றி எடுக்கும் முடிவுகளுக்கு ஆதரவு தருமாறு தமிழக மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்" (11.10.1987 நாளேடுகள்) - என்று அறிக்கை விட்டு, மத்திய அரசின் நடவடிக்கைக்கு கண்மூடித்தனமான ஆதரவைக் காட்ட மாட்டேன் என்று வெளிப்படுத்தியவர் எம்.ஜி.ஆர்.
- புலேந்திரன், குமரப்பா உள்ளிட்ட 12 போராளிகள் வீரமரணமடைந்ததைத் தொடர்ந்து பிரபாகரனைக் கைது செய்ய இந்திய ராணுவம் திட்டமிட்டது. 'பிரபாகரன் கைது' என்று ஊடகங்கள் வழியாக செய்திகளைப் பரப்பினார்கள். இத் தகவல் அமெரிக்காவில் சிகிச்சை பெறும் முதல்வர் எம்.ஜி.ஆருக்கு தரப்பட்டது. விடுதலைப்புலிகளுடன் இந்திய ராணுவம் மோதலுக்கு தயாராகி வந்தது. இந்த நிலையில் இந்திய ராணுவம் அப்படி ஒரு போரை நடத்தக் கூடாது என்று தமிழகத்தில் ஈழ விடுதலை ஆதரவாளர்கள் அனைத்து கட்சிக் கூட்டம் ஒன்றை கூட்டினர். அதில் அ.தி.மு.க. சார்பில், பிரதிநிதியைப் பங்கேற்கச் செய்து எம்.ஜி.ஆர். அமெரிக்காவிலிருந்து செய்தி அனுப்பினார்.
- விடுதலைப் புலிகளும் இந்திய ராணுவமும் மோதுவதை நிறுத்திவிட்டு மீண்டும் பேச்சுவார்த்தை தொடங்க வேண்டும்என்று தமிழ்நாட்டில் 17.10.1987 அன்று கடையடைப்பு, முழு வேலை நிறுத்தம் நடத்துவது என பழ. நெடுமாறன அவர்கள் முயற்சியால் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சி கூட்டம் முடிவு செய்தது. அப்போது அமெரிக்காவிலிருந்து முதல்வர் எம்.ஜி.ஆர். முழு அடைப்புக்கு ஆதரவு தெரிவித்து அறிக்கை வெளியிட்டார். "சிங்கள அரசிடமிருந்து 12 பேர்களை மீட்க வாய்ப்பு இருந்தும் இந்திய அமைதிப் படை முயற்சி எடுக்கவில்லை. மாறாக ஈழத் தமிழர்களுக்குப் பல வழிகளில் தொல்லை கொடுக்க ஆரம்பித்துவிட்டது. வன்முறையும் பெருமளவில் வெடித்தது. இந்திய ராணுவம் நடத்தி வரும் தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று வற்புறுத்தி தமிழகம் முழுதும் 17.10.1987 அன்று முழு அடைப்புக்கு ஆதரவு அளித்து, தமிழக மக்கள் கடைகளை அடைத்து, தமிழக மக்களின் ஒருமித்த உணர்வை உலகுக்குத் தெரிவிக்க வேண்டும்" (16.10.1987 நாளேடு செய்திகள்) என்று இந்திய அரசின் துரோகத்துக்கு எதிராக துணிந்து குரல் கொடுத்தவர் எம்.ஜி.ஆர்.
- 31.10.1987 இல் தமிழகம் திரும்பிய எம்.ஜி.ஆர். அடுத்த நான்கு நாட்களிலேயே விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசினார். இந்திய ராணுவம் போரை நிறுத்த வேண்டும் என்று தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வரும் முயற்சிகளில் இறங்கினார். பதறிப் போன இந்திய ஆட்சி, உடனே அப்படி ஒரு தீர்மானம் கொண்டு வராமல் தடுப்பதற்கு வெளிநாட்டுத் துறை அமைச்சர் நட்வர்சிங்கை சென்னைக்கு அனுப்பி, எம்.ஜி.ஆரை சந்திக்க வைத்தது. எம்.ஜி.ஆர். தமது எதிர்ப்பு உணர்வுகளை நட்வர்சிங்கிடம் வெளிப்படுத்தினார்.
- உடல்நலம் குன்றிய நிலையிலும் தொடர்ந்து தமது ஆதரவை விடுதலைப்புலிகளுக்கு வழங்கியே வந்தவர் எம்.ஜி.ஆர். அதன் பிறகு, அவர் வாழ்ந்த காலம் மிகக் குறுகியது. மரணம் - அவரை தழுவிக் கொண்டது. தமிழ் ஈழத் தேசியத் தலைவர் பிரபாகரன்தனது இரங்கல் செய்தியில் கூறினார்:

"ஈழத் தமிழினம் அநாதையாக ஆதரவின்றித் தவித்துக் கொண்டிருக்கையில் உதவிக்கரம் நீட்டி உறுதியாகத் துணை நின்ற புரட்சித் தலைவரே! தமிழீழப் போராட்டத்துக்கு ஆதரவும், ஊக்கமும் கொடுத்த செயல் வீரரே! தங்களது இழப்பு என்பது வேதனைச் சகதியில் சிக்கிக் கிடக்கும் தமிழீழ மக்கள் மார்பில் தீ மூட்டுவது போலுள்ளது.

என்மீது கொண்டிருந்த அன்பையும், ஈழ இயக்கத்தின் மீது தாங்கள் கொண்டிருந்த ஈடுபாட்டையும் எம்மால் மறக்க முடியாது. தமிழீழப் போராட்டத்தின் வெற்றிக்காக எம்.ஜி.ஆர். அவர்கள் மறைமுகமாக எமக்குச் செய்த உதவிகள் தமிழீழ மக்கள் மனதில் என்றும் நிலைத்திருக்கும்" - என்று கூறி இயக்கத்தின் சார்பில் பிரபாகரன் கண்ணீர் அஞ்சலி செலுத்தினார்.

ஒரு முதல்வராக இருந்து ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். செய்த பேருதவிகளை - வெளிப்படுத்திய கொள்கை உறுதியை - அவர் கலைஞரைப் பட்டியல் போட்டுக் காட்டியதில்லை. ஆனால் நன்றியுள்ள தமிழினம் இதை வெளிப்படுத்த வேண்டும்.

ஈழத் தமிழினம் கடும் நெருக்கடியை சந்தித்த காலத்தில் முதல்வராக இருந்த கலைஞர் செயல்பட்டதையும், இழைத்த துரோகத்தையும் மறைந்த எம்.ஜி.ஆர். அவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறோம். ஆம்; அப்போதுதான் எம்.ஜி.ஆர். பெருமை - அருமை புரிகிறது. ஈழத் தமிழர் விடுதலைப் போராட்ட வரலாற்றில் எம்.ஜி.ஆர். அவர்களின் பங்களிப்பு பிரிக்க முடியாத பக்கங்களாகவே இருக்கும்.

***- சென்னை கூட்டத்தில் (13.6.2011) பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையிலிருந்து.***

## 'இதுதாண்டா ராணுவம்'

ராணுவத்தின் செயல்பாடுகள் பற்றி தமிழ்நாட்டு மக்கள் 1988 ஆம் ஆண்டிலிருந்தே நன்றாக புரிந்து வைத்துள்ளனர். ஈழத்துக்கு இந்திய ராணுவம் போய் அங்கே மக்களைக் கொன்று குவித்தபோது சென்னை நகரம் ராணுவத்தினரின் 'இயங்குதளமாக' செயல்பட்டது. நகரில் ராணுவத்தினரின் அட்டகாசம் கண்டு மக்கள் முகம் சுளித்தனர். மிக மோசமாக வாகன விதிகளை மதிக்காமல் ராணுவத்தினர் ஓட்டுவதும், விபத்துகளும் உயிரிழப்பும் ஏற்படுவதும் இப்போதும் தொடரவே செய்கிறது. சென்னை ராணுவ குடியிருப்பு வளாகத்துக்குள் தில்சன் என்ற 13 வயது ஏழைக் கூலித் தொழிலாளி மகன் காய்பறிப்பதற்கு மரத்தில் ஏறியதற்காக ராணுவ அதிகாரி ஒருவர் தனது துப்பாக்கியால் 'மரண தண்டனை' வழங்கிய நிகழ்ச்சி கடும் கொந்தளிப்பை உருவாக்கி விட்டது. குற்றவாளி ராணுவ அதிகாரியாக இருந்தாலும் சரி; காவல்துறையிடம் ஒப்படைக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் உறுதியாக அறிவித்தார். ராம்ராஜ் என்ற உசிலம்பட்டியைச் சார்ந்த ராணுவ அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

இத்தகைய ராணுவத்தின் ஆட்சி நடக்கும் வடகிழக்கு மாநிலங்களிலும் ஜம்மு காஷ்மீர் மாநிலத்திலும் மக்கள் என்ன பாடுபடுவார்கள் என்பதை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. இது ஒரு 'ஜனநாயக' நாடு என்பதை ராணுவத்தினர் மறந்தே போய் விட்டார்கள்.

# பெருந்துறையில் கழகக் கூட்டம்

பெரியார் கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம் பெருந்துறை, பழைய பேருந்து நிலையத்தில் 10.6.2011 வெள்ளி மாலை 7 மணிக்கு நடைபெற்றது. 6.30 மணிக்கு கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ. மணி பழைய பேருந்து நிலையத்தில் கொடியேற்றி வைத்தார்.

பெருந்துறை ஒன்றியச் செயலாளர் விசு நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார். காவை. இளவரசனின் ‘மந்திரமல்ல தந்திரமே’ அறிவியல் விளக்க நிகழ்ச்சியைத் தொடர்ந்து கோபி வேலுச்சாமி, தூத்துக்குடி பால். பிரபாகரன் ஆகியோர் பெரியார் கொள்கை விளக்கவுரையாற்றினர்.

நிகழ்ச்சிக்கு ஈரோடு ரத்தினசாமி, நாத்திகசோதி, திருப்பூர் துரைசாமி, முகில் ராசு, ஆசிரியர் சிவகாமி, கிளாகுளம் செந்தில், விஜயமங்கலம் ஜெகன், கோபி. ஆனந்தராஜ், நிவாசு, செயராமன், நாகப்பன், இறையலன் மூர்த்தி, அருளானந்தன், பிரகாசு, ஈரோடு பகுத்தறிவாளர் பேரவை தோழர்கள் உள்பட ஏராளமான தோழர்கள் , பொது மக்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

நிகழ்ச்சிக்கு திருப்பூர் மாவட்டத் தலைவர் சு. துரைசாமி, மேடை ஒலிப்பெருக்கி வழங்கினார். ஒலி, ஒளி, திருப்பூர் பெரியார் முத்து அமைத்துக் கொடுத்தார். இரவு உணவு, கழக ஆதரவாளர் பெருந்துறை சரவணன் (பிரைட் ஸ்டார்) வழங்கினார். நிகழ்ச்சியை சூதாம்பி துரை, அர்ச்சுணன் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

## பட்டுக்கோட்டையில் சமச்சீர் கல்வியை வலியுறுத்தி பொதுக் கூட்டம்

4.7.2011 திங்கள்கிழமை மாலை 6 மணிக்கு தஞ்சை மாவட்டம் பட்டுக் கோட்டையில், அழகிரி சிலை அருகில் ஐக்கிய நாடுகள் சபை ராஜபக்சேவை தண்டிக்க வலியுறுத்தியும், சமச்சீர் கல்வியை தமிழக அரசு முழுமையாக அமுல்படுத்தக் கோரியும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கழக ஒன்றிய அமைப்பாளர் கு.பாரி தலைமையேற்றார். தமிழ்த் தேச கூட்டமைப்பைச் சார்ந்த மன்னர் மன்னன் வரவேற்றுப் பேசினார். ஐ.நா. அறிக்கையைப் பற்றி கழகத் தலைவர் கொளத்தூர் மணி, சமச்சீர் கல்வி பற்றி தமிழ்த் தேசிய விடுதலை இயக்க பொதுச் செயலாளர் தியாகு ஆகியோர் சிறப்புரையாற்றினர். அதம்பை சி.இராமசாமி, ஆண்டனி, செந்தோழன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பேராபூரணி பகுதி கழகத் தோழர் திருவேங்கடம் நன்றி கூறினார்.

### தி. ஸ்டாலின் – து. ருமேனியா வாழ்க்கை ஒப்பந்தம்



6.7.2011 புதன்கிழமை அன்று காலை 11 மணிக்கு திருச்சிராப்பள்ளி மாவட்டம் இலால்குடி எம்.எல். திருமண மண்டபத்தில் அரியூர் தி. ஸ்டாலின் - திருவையாறு து. ருமேனியா ஆகியோரது வாழ்க்கை இணையேற்பு ஒப்பந்தத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி நடத்தி வைத்தார். மணவிழா மகிழ்வாக கழக ஏட்டிற்கு ரூ.2000 வழங்கினர்.

### நன்கொடை

நாமக்கல் தோழர் மு. கேப்டன் அண்ணாதுரை அவரது தாயார் லட்சுமி அம்மாள் நினைவாக முழக்க வளர்ச்சி நிதியாக ரூ.100 வழங்கினார்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 99416 13535

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

இல்லை - இவ்வளவுக்குப் பிறகு ராஜீவ் சர்மா, அமிர்தலிங்கத்தைக் கொன்றது புலிகள் தான் என்று பழிபோட்டு விடுகிறார்.

ஒரு காலத்தில் ஈழத்தில் தமிழர்களின் செல்வாக்கு மிக்க தலைவராக உயர்ந்து நின்ற அமிர்தலிங்கம், 1981க்குப் பிறகு இந்தியாவை நம்பினார். இந்திரா காந்தி தமிழ் ஈழத்தை வென்று, தம்மிடம் ஒப்படைப்பார் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தார். ஆனால், 1984 இல் இந்திரா, சீக்கியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டவுடன் அவரது கனவு தகர்ந்தது.

அமிர்தலிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டபோது அவர் 5 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு மீண்டும், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டிருந்தார். அந்த 5 ஆண்டுகாலமும் தற்காலிகமாக தமிழ்நாட்டில் அரசு பாதுகாப்போடு தங்கியிருந்தார். இந்திய உளவு நிறுவனத்தோடு அமிர்தலிங்கம் மேற்கொண்ட ரகசிய உடன்பாடுகள் இலங்கை நாடாளுமன்றத்துக்கு வந்த அமிர்தலிங்கம் வழியாக அம்பலமாகிவிடுமோ என்ற அச்சம், ‘ரா’ உளவு நிறுவனத்துக்கு வந்திருக்கக் கூடும். தாங்கள் வகுத்து செயல்படுத்திக் கொண்டிருக்கும் ரகசிய திட்டங்கள் அம்பலமாவதற்கு உளவுத் துறை எப்போதுமே வாய்ப்புகளைத் தருவதில்லை, இது உளவுத் துறையின் செயல்பாடுகளை அவதானிப்போருக்கு நன்றாகவே தெரியும். அந்த சதிக்கே அமிர்தலிங்கம் பலியானார்.

இதேபோல், 1985 ஆம்ஆண்டில் யாழ்ப்பாணத்தில், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களான வி.தர்மலிங்கம், எம். ஆலால சுந்தரம் ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டபோது அந்தப் பழியும் விடுதலைப் புலிகள் மீது தான் போடப்பட்டது. அது உண்மை தானா? அதையும் தான் பார்த்து விடுவோமே!

(தொடரும்)

# உச்சநீதிமன்றத்தின் ‘அதிரடி’ தீர்ப்புகள்

இந்தியாவில் பார்ப்பன-பன்னாட்டு கூட்டுக் கொள்ளைக்கு வேகமாக ஆட்சியாளர்கள் கதவு திறந்து விடுகின்றனர். அரசியல் கட்சிகள் இவர்களிடம் விலை போய் விட்டன. இதன் காரணமாக ஊழல் பெருக்கெடுத்து ஓடுகிறது. அரசியல் கட்சிகளிடம் மக்கள் நம்பிக்கை இழந்து வரும் நிலையில் உச்சநீதிமன்றம் அண்மைக்காலமாக சில பாராட்டுத்தக்க தீர்ப்புகளை வழங்கி வருகிறது. அதில் சிலவற்றை பட்டியலிடலாம்:


- கடந்த ஏப்.19 ஆம் தேதி உச்சநீதிமன்ற நீதிபதிகள் மார்கண்டயகட்ஜு மற்றும் கியான் சுதாமிஸ்ரா ஆகியோர் அளித்த தீர்ப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. தமிழ்நாட்டில் நிலவும் இரட்டை தம்ளர் போன்ற தீண்டாமைக் குற்றங்களைத் தடுத்து நிறுத்தாத மாவட்ட காவல்துறை மற்றும் நிர்வாக அதிகாரிகளை தற்காலிக பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று ஆணையிட்டதோடு, உச்சநீதிமன்றமே அத் தீர்ப்பின் நகலை தமிழக நிர்வாகத்தினருக்கு அனுப்பி வைத்தது.
- மாவோயிஸ்டுகளுக்கு எதிராக சத்தீஸ்கர் மாநில ஆட்சியே தனி நபர்களுக்கு ஆயுதம் கொடுத்து சட்ட விரோதமாக உருவாக்கிய ‘சல்வார்ஜீடும்’ போன்ற அமைப்புகள், அரசியல் சட்டத்துக்கும் மனித உரிமைக்கும் எதிரானவை என்று, கடந்த ஜூலை 5 ஆம் தேதி உச்சநீதிமன்ற நீதிபதிகள் சுதர்சன் ரெட்டி மற்றும் சுரீந்தர்சிங் நிசார் தீர்ப்பளித்துள்ளனர்.
- வரி ஏய்ப்பு செய்து பல கோடி ரூபாய் பணத்தை வெளிநாடு வங்கிகளில் பதுக்கி வைத்துள்ள பொருளாதாரக் குற்றவாளிகளுக்கு எதிராக ராம்ஜெத் மாலனி தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றம் இப்பிரச்சினையில் அரசின் அலட்சியத்தைக் கண்டித்து, இந்த குற்றங்களைத் தடுப்பதற்கு அரசின் நடவடிக்கைகளை கண்காணிக்க சிறப்புப் புலனாய்வுக் குழு ஒன்றையே அமைத்து கடந்த ஜூலை 4 ஆம் தேதி உத்தரவிட்டுள்ளது.
- கோத்ரா ரயில் எரிப்பைத் தொடர்ந்து குஜராத்தில் மோடி ஆட்சி, முஸ்லீம்களை இனப் படுகொலை செய்ய துணை நின்றது. இதில் தொடர்புடைய குற்றவாளிகளைக் காப்பாற்றுவதற்கு மோடி ஆட்சி முயன்றது. விசாரணைகள் முறையாக நடக்கவில்லை. இதை எதிர்த்து தேசிய மனித உரிமை ஆணையம், உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை ஏற்று குற்றவாளிகள் மீதான விசாரணையை மீண்டும் புதிதாகத் தொடங்க உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.
- பொது வினியோகத் திட்டத்தைக் கண்காணிக்க நீதித் துறை ஆணையம் ஒன்றை உச்சநீதிமன்றம் நியமித்து ஒவ்வொரு மாநிலத்திலும் பொது விநியோகத் துறையைக் கண்காணிக்க உத்தரவிட்டது. கூடுதலாக இருக்கும் உணவு தானியங்களை மிகவும் பின்தங்கிய மாநிலங்களுக்கு வழங்கிட உச்சநீதிமன்றம் ஆணையிட்டது.
- இவைகள் தவிர, கிரிமினல் குற்ற வழக்கை சந்தித்துக் கொண்டிருந்த அதிகாரி பி.ஜே. தாமஸ், மத்திய ஊழல் தடுப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டதைத் தடுத்து நிறுத்தியது; உ.பி.யில் மாயாவதி ஆட்சி, ஏழை விவசாயிகளின் 156.3 எக்டர் நிலத்தைக் கைப்பற்றியதைத் தடுத்து மீண்டும் ஏழை விவசாயிகளுக்கே வழங்க உத்தரவிட்டது; 2ஜி அலைக்கற்றை ஊழல் விசாரணையை உச்சநீதிமன்றமே தனது கண்காணிப்புக்குள் கொண்டு வந்தது; ராஜஸ்தான் மாநிலத்தைச் சார்ந்தே பெண்கள் உரிமைக்குப் போராடிய சமூக ஊழியர் விசாகாவை வன்முறைக் கும்பல் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியது; இதை எதிர்த்து விசாகா உச்சநீதி மன்றம் சென்றார். இந்த வழக்கில் அரசு மற்றும் தனியார் பணியிடங்களில் பெண்களுக்கு செய்ய வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளையும், வழிகாட்டி நெறிமுறைகளையும் உச்சநீதிமன்றமே வழங்கியது; தொழிற்சாலை தொடங்குவதற்காக டேராடூன் காடுகளில் மரங்களை வெட்டிக் குவித்தபோது உச்சநீதிமன்றம் தலையிட்டு, சுற்றுச் சூழல் பாதிப்புகளை உறுதி செய்யாமல் தொழிற்சாலைகளுக்காக மரங்களை வெட்டக் கூடாது என்று தீர்ப்பளித்தது; போபால் விஷவாயுவில் பலியான - பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீட்டுத் தொகை வழங்குதல்; அவர்களுக்கான உடல்நலன் பாதுகாப்பு தொடர்பான செயல்பாடுகளை உச்சநீதிமன்றமே நேரடியாக கண்காணிப்பது - என்று உச்சநீதிமன்றம் பல்வேறு வரவேற்கத்தக்க தீர்ப்புகளை வழங்கியிருக்கிறது.

அதற்காக உச்சநீதிமன்றத்தை நீதி வழங்கும் மன்றமாக முழுமையாக ஏற்கவும் முடியாது. அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் சட்டத்தை முடக்கியிருப்பதும், இடஒதுக்கீடு 50 சதவீதத்துக்கு மேல் போகக் கூடாது என்று தடை போடுவதும் இதே நீதிமன்றங்கள்தான் என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும். இந்தியா என்ற பார்ப்பன பனியா-பன்னாட்டு சுரண்டல் அமைப்பு கடும் நெருக்கடிக்கு உள்ளாகி வரும் நிலையில் உச்சநீதிமன்றங்கள் அதைக் காப்பாற்றுவதற்கு துடிக்கும் முயற்சியாகவே இதைப் பார்க்க வேண்டும். இந்தியாவின் பார்ப்பன கட்டமைப்பு கடும் நெருக்கடிகளை சந்தித்து வருகிறது என்பது மட்டும், உண்மை!

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 14th July 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | ஜூலை 21, 2011 | புரட்சி 10 | முழக்கம் 27 | விலை: ரூ.2.50


## கழகத் தலைவர் கொளத்தூர் மணி வலியுறுத்தல்

# அய்.நா. வாக்கெடுப்பு நடத்த வேண்டும்!

***அய்.நா. குழு அறிக்கையை விளக்கி பல்வேறு கூட்டங்களில் பேசிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தமிழர்களிடையே அய்.நா. வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.***

ஈழத்தில் முதலில் மறைந்திருந்து தாக்குகிற கொரில்லா போர் நடந்தது. பிறகு இரண்டு இராணுவமும் நேருக்கு நேர் மோதும் மரபு வழி போர் நடந்தது. தங்கள் நாட்டின் பெரும் பகுதியை மெல்ல மெல்ல விடுதலைப் புலிகள் மீட்டுக் கொண்டனர். இனி போர் வேண்டாம். பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ளலாம் என்ற, 2002 ஆம் ஆண்டு நார்வே தலைநகர் ஓஸ்லோவில் ஒரு அமைதி ஒப்பந்தம் போடப்பட்டது. அப்போது தமிழர் பகுதியின் மூன்றில் இரண்டு பங்கு புலிகள் கட்டுப் பாட்டிலும், ஒரு பங்கு இலங்கை அரசு கட்டுப் பாட்டிலும் இருந்தது. அமைதி ஒப்பந்தம் போடப்பட்டு போர் நிறுத்தம் செய்யப்பட்டிருந்த போது, அரச தலைவராக இருந்த இரணில் விக்ரமசிங்கே, உலகம் முழுவதும் சென்று, முப்பத்திரண்டு நாடுகளில், ‘விடுதலைப் புலிகள்’ இயக்கத்தை பயங்கரவாத இயக்கம் என்று, 2005-2006 இல் போரே நடக்காதபோது தடை செய்ய வைத்தார்.

இப்படிப்பட்ட பேரழிவுகளுக்கு, தடை செய்த ஐரோப்பிய நாடுகளும் ஒரு காரணம் என ஐ.நா. அறிக்கை கூறுகிறது. அமைதியாக இருந்த இயக்கத்தை பயங்கரவாத இயக்கப் பட்டியலில் கொண்டு வர இந்தியாவும் ஒரு காரணம்.

2008 ஜனவரியில், இலங்கை அரசு தானாகவே ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டது. மீண்டும் போர் தொடங்கி ஒன்றரை ஆண்டுகளில், தமிழர் படை (தமிழரை காத்து நின்ற விடுதலைப் புலிகள் படை) முற்றிலுமாக அழிக்கப்பட்டு விட்டதாக அந்த அரசு சொன்னது. இலங்கை அரசின் அறிவிப்புப்படி பயங்கரவாதிகள் அழிக்கப்பட்டு விட்டார்கள். போர் முடிந்து விட்டது. பயங்கரவாதிகளிடம் இருந்து மக்களை மீட்கும் நடவடிக்கையை செய்ததாக சொன்னார்கள். பொது மக்கள் யாரும் பாதிக்காத வாறு, மனிதாபிமான போரை நடத்தியதாக அறிவித்துக் கொண்டார்கள். அங்கே மக்கள் அநியாயமாக கொல்லப்படுகிறார்கள் என்று, விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆதரவாளர்களான எங்களைப் போன்றவர்களும், தமிழ் ஈழ விடுதலைக்கு ஆதரவானவர்களும், தமிழ் ஈழ மக்களுக்கு ஆதரவான குழுக்களும், இங்கு குரல் எழுப்பினோம். அப்போது பலரும் ஏற்றுக் கொள்ளவில்லை.

2008 பிப்ரவரியில் கழகத்தின் சார்பில் புதுடெல்லி சென்று காயக்கட்டுப் பேரணியும் நாடாளு மன்றத்தின் முன்பாக ஆர்ப்பாட்டமும் நடத்தி, இலங்கைக்கு இராணுவ உதவி செய்யாதே என பொது மக்களிடம் திரட்டப்பட்டிருந்த கையெழுத்து படிவங்களை பாதுகாப்பு அமைச்சரிடம் நேரில் கையளித்து இருந்தோம். ஆனாலும் 2008 ஆம் ஆண்டு அக்டோபர் இரண்டாம் நாள், முதன்முதலாக இந்திய பொதுவுடமைக் கட்சி, தமிழ்நாடு முழுவதும் ஒரு உண்ணாநிலை போராட்டத்தை நடத்தினார்கள். அதுதான் தமிழ்நாட்டில் ஒரு புதிய எழுச்சியை உண்டாக்கியது. வெகுமக்கள் பேச ஆரம்பித்தார்கள். இந்த கொடுமையான போரை நிறுத்தச் சொல்லியும், இந்திய அரசே இலங்கைக்கு ஆயுதம் வழங்காதே என்று வலியுறுத்தியும், பல போராட்டங்கள் நடைபெற்றன. அங்கு அப்பாவி மக்கள் கொல்லப்படுகிறார்கள் என்று நாம் சொன்னோம். ஆனால் இந்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை.

போர் முடிந்த பின்னால் பான்கிமூன் இலங்கைக்கு வந்து அதன் அரச தலைவர் இராசபக்சேவை சந்தித்தார். மே 19 ஆம் தேதி போர் முடிந்தது. மே 23



ஆம் தேதி இறந்தவர்கள் பற்றியும் போரின் நிகழ்வுகளைப் பற்றியும் கணக்கெடுப்பு நடத்துவதற்கு, இருவரும் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டார்கள். பொது மக்களெல்லாம் போதிய உணவு, தண்ணீர் வசதி இல்லாமல் முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டார்கள். அதைப் பற்றி நாம் குரல் எழுப்பிய போதும், எவரும் ஏற்றுக் கொள்ள வில்லை. தமிழரல்லாதவர்கள் (பொதுவானவர்கள்) சொல்ல வேண்டும் எனக் கருதினார்கள். பல மனித உரிமை ஆர்வலர்கள் அறிக்கை விட்டார்கள். யாரும் கண்டுகொள்ளவில்லை.

2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அயர்லாந்தின் தலைநகர் “டப்ளினில்” எந்த அரசு கட்டுப்பாட் டிலும் இல்லாத ‘நிரந்தர மக்கள் தீர்ப்பாயம்’ என்ற சுதந்திரமான அமைப்பு, ஒரு விசாரணையை நடத்தியது. இலங்கையின் சார்பாகவும் அழைக்கப் பட்டார்கள். இந்தியாவில் இருந்தும் ஓய்வு பெற்ற டெல்லி உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ராஜீந்திர சச்சார் போனார். எல்லோரும் விசாரித்து அறிக்கை ஒன்றைக் கொடுத்தார்கள். இந்தப் போர் நடந்தபோது ஏராளமான பொது மக்கள் கொல்லப்பட்டிருக் கிறார்கள். ஏராளமான போர்க் குற்றங்கள் நடந்திருக் கிறது. மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் நடந் திருக்கிறது. இனப்படுகொலை நடந்திருப்பதற்கான சுவடுகள் தெரிகின்றன. அவற்றை ஆழ்ந்து விசாரிக்க வேண்டும் என்று ஒரு அறிக்கை கொடுத்தார்கள்.

உலகத்தில் மூன்று குற்றங்கள் தான் பெருங்குற்றம். இரண்டாம் உலகப் போருக்கு பின்னால் உலக நாடுகள் எல்லாம் சேர்ந்து வரையறுத்திருந்தார்கள். அப் பெருங்குற்றங்களுக்கு ஒரு சிறப்பு தன்மை உண்டு. பாதிக்கப்பட்டவர்கள்தான் புகார் கொடுக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. யார் வேண்டு மானாலும் கொடுக்கலாம். குற்றம் நடந்த நாட்டில் தான் வழக்கு தொடுக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. எங்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம். குற்றம் நடந்து ஒரு ஆண்டிற்குள் வழக்கு கொடுத்தால் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும் என்று இந்தியாவில் தேசிய மனித உரிமை ஆணையம் சொல்கிறது. ஆனால், இப்பெருங்குற்றங்களுக்கு, குறிப்பிட்ட நாட்களுக்குள் வழக்கு கொடுக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. எப்போது வேண்டுமானாலும் கொடுக்கலாம்.

1942 ஆம் ஆண்டு செர்பியாவில், ஒரு படையணி முப்பத்தியாறு பொதுமக்களை சுட்டுக் கொன்று விட்டது. 69 ஆண்டுகளுக்கு பின்னர், அதற்காக ஹங்கேரியை சார்ந்த 97 வயதான ஒருவரை கடந்த மாதம் கைது செய்திருக்கிறார்கள்.

### அய்.நா. அதிகாரியே கூறுகிறார்

ஆனால், இலங்கையில் எவ்வளவு பேர் கொல்லப் பட்டிருக்கிறார்கள்? 1300 பயங்கரவாதிகளை (போராளிகளை) கொன்றிருப்பதாக இலங்கை அரசு கணக்கு கொடுத்தது. இருபதாயிரம் பேர் இறந்திருப்பதாக வெளிநாட்டு பத்திரிகைகளில் எழுதினார்கள். நாற்பதாயிரம் பேர் இறந்திருப்பதாக சில மனித உரிமை அமைப்பைச் சார்ந்தவர்கள் சொன்னார்கள். அய்.நா.வின் நடவடிக்கையே தவறாக இருக்கிறது என்று. ஐ.நா.விலிருந்து விலகிவிட்ட, அய்.நா.வில் வேலை செய்த கார்டன் வெய்ஸ் என்பவர் குற்றம்சாட்டினார். இலங்கைப் பிரச்சினையில் யார் பேச்சையோ கேட்டு அய்.நா. ஒரு தலைபட்சமாக செயல்படுகிறது என்று. பதவி விலகிய கார்டன் வெய்ஸ், தனது கணக்குப்படி எழுபதாயிரம் பேர் இறந்திருப்பதாக சொன்னார்.

இப்போது இலங்கை அரசு அமைத்த

2 ஆம் பக்கம்

## தமிழக அரசின் வீண் பிடிவாதம் – சமூகநீதிக்கு எதிரானது

மாணவர் நலனையும் நாட்டின் நலனையும் கருத்தில் கொண்டு சமச்சீர் கல்வியை இந்த ஆண்டே தமிழக அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் 18.7.2011 இல் தெளிவாக தீர்ப்பு வழங்கிய பிறகு, மீண்டும் உச்சநீதிமன்றம் போகப் போவதாக தமிழக அரசு அறிவித்திருப்பது இந்த அரசின் வீண் பிடிவாதத்தையே காட்டுகிறது.

பெரியார் தொடங்கி வைத்த சமூகநீதிக் கல்வி உரிமை தமிழக வரலாற்றுச் சூழலில் பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் பிரச்சினையோடு, பிணைந்து நிற்பதை தமிழக முதல்வர் ஜெயலலிதா மறந்துவிடக் கூடாது. இன்று மெட்ரிகுலேஷன் பள்ளிகளை நடத்தி கொள்ளை அடிப்பவர்கள் பார்ப்பன அணியாகவும், சமச்சீர்க் கல்வி உரிமை கோரும் வெகு மக்கள் பார்ப்பனரல்லாதார் அணி என்ற உணர்வுடனேயே இந்தப் பிரச்சினையை பெரியார் தந்த வெளிசசத்தில் பார்த்து வருகிறார்கள். அ.இ.அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் இந்த மிக முக்கிய உயிரோட்டமான பிரச்சினை குறித்து, எதையும் சொல்லாமல், அதிகாரத்துக்கு வந்தபிறகு அத்திட்டத்தில் கை வைப்பது வாக்களித்த மக்களுக்கு இழைத்த துரோகமாகிவிடும் என்பதை தமிழக முதல்வருக்கு சுட்டிக் காட்டுகிறோம்.

இராஜகோபாலாச்சாரியர் குலக் கல்வித் திட்டத்தை தனது கட்சியை கலந்து ஆலோசிக்காமலே கொண்டு வந்தார். இராமானுசரும், சங்கரரும் எவரைக் கேட்டு தங்கள் கருத்துகளைப் பரப்பினர் என்று ஆணவத்தோடு கேட்டார். அதற்குப் பிறகு ஆச்சாரியார், அரசியலிலிருந்தே அகற்றப்பட்டதுதான் வரலாறு. அன்று - ஆச்சாரியார் பின்னால் பார்ப்பனர்கள் மட்டுமே நின்றார்கள். 57 ஆண்டுகளுக்குப் பிறகு, கடந்த 19.7.2011 அன்றுதான், அதாவது உயர்நீதிமன்றத் தீர்ப்பு வந்த அதே நாளில் ‘இந்து’ நாளேடு ஆச்சாரியார் குலக்கல்வித் திட்டத்தை தவறு என்று ஒப்புக் கொண்டு எழுதியுள்ளது. இதுதான் வரலாற்றுத் திருப்பம்.

ஈழத் தமிழர் ஆதரவு, இடஒதுக்கீடு, சமச்சீர் கல்வி என்று எந்தப் பிரச்சினையானாலும் அதன் மய்யமான நீரோட்டம் சமத்துவம் என்பதுதான். சமத்துவம் மறுக்கப்படுவதை ஈழத் தமிழர் பிரச்சினையில் மட்டும் எதிர்த்து விட்டு, கல்விப் பிரச்சினையில் மாறாக செயல்படுவது, பச்சை முரண்பாடே ஆகும்.

பார்ப்பனர்களின் தவறான வழிகாட்டுதல்களிலிருந்து தமிழக முதல்வர் விலகி நிற்க வேண்டும். இல்லையேல் தமிழினத்தின் நம்பகத் தன்மையை இழந்துவிடுவார் என்ற உண்மையை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# அய்.நா.வில் இந்தியாவின் துரோகம்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

விசாரணை கமிசனில் சாட்சியம் அளித்த, மன்னார் மாவட்டத்தைச் சார்ந்த "ஆயர் - ராயப்ப ஜோசப்" சொன்னார்... "இந்த நாட்டில் 2008 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒரு கணக்கெடுப்பு நடந்திருக்கிறது. முல்லைத் தீவிலும், கிளிநொச்சியிலும் சேர்த்து நான்கு லட்சத்தி இருபத்தி எட்டாயிரம் பேர் இருந்தார்கள். இப்போது முகாம்களில் இரண்டு லட்சத்தி எண்பத்தி இரண்டாயிரம் பேர்தான் இருக்கிறார்கள். மீதி ஒரு லட்சத்தி நாற்பத்தி ஆறாயிரம் பேரை காணவில்லை. சிறையில் இருப்பவர்கள் பத்தாயிரம் பேர் என்று வைத்துக் கொண்டால் ஒரு லட்சத்து முப்பத்தி ஆறாயிரம் பேர் போரில் இறந்திருக்கிறார்கள்" என்று கணக்கு சொல்கிறார்.

அய்.நா.வின் மனித உரிமை குழுவின் தலைவராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவரும், தற்போது "சர்வதேச நெருக்கடி மன்றம்" என்ற அமைப்பை வைத்திருப்பவருமான "லூயிஸ் ஆபர்" என்ற ஜெர்மன் நாட்டைச் சார்ந்த பெண்மணி 2010 மார்ச் மாதம் ஒரு அறிக்கை விட்டார்கள். போரில் பாதிக்கப்பட்டு உடல் உறுப்புகளை இழந்த பதினெட்டு பேர், முகாமில் இருந்து தப்பி வந்த இருபத்தியொரு பேர், போரின்போது அங்கு பணியாற்றிய ஐ.நா. ஊழியர்கள் தந்த வீடியோ படங்கள், செயற்கைக் கோள் படங்கள், இதையெல்லாம் வைத்துக் கொண்டுதான் டப்ளின் ஆணையம் அறிக்கை கொடுத்தது. இவ்வளவு கொடுமைகள் நடந்திருந்திருக்கின்றன என்ற நிலையிலும் ஐ.நா. மன்றம் ஏன் அமைதியாக இருக்கிறது? விசாரிக்க வேண்டாமா? என்று "லூயிஸ் ஆபர்" அறிக்கை விட்ட பின்னால்தான், மனித உரிமைக் கண்காணிப்பகம், ஆம்னெஸ்டி இன்டர்நேஷனல் போன்ற பல அமைப்புகள் இதை வலியுறுத்தினர்.

அதன் பிறகு, 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3 ஆம் நாள், ஒரு குழு அமைக்க இருப்பதாக பான்கிமூன் சொன்னார். ஜூன் 22 ஆம் தேதி மூன்று பேர் கொண்ட குழுவை அறிவித்தார். உடனே இலங்கையில் இருப்பவர்கள் அந்த நாட்டு அமைச்சரான விமல் வீரவன்ச தலைமையில், ஐ.நா. எப்படி எங்கள் நாட்டில் தலையிடலாம் என்று, கொழும்புவில் இருக்கும் ஐ.நா. மன்றத்தை முற்றுகையிட்டார்கள். 52 மணி நேரம் உள்ளிருந்து யாரும் வெளியில் செல்ல முடியாமல், உள்ளேயும் யாரையும் செல்லவிடாமல் போராட்டம் நடத்தினார்கள். உலக நாடுகளில் இருக்கும் தலைவர்கள் எல்லாம் இராசபக்சேவிடம் பேசித்தான், அய்.நா. அலுவலகத்தின் உள்ளே இருப்பவர்களை வெளியே கொண்டுவர முடிந்தது.

அதன் பிறகு செப்டம்பர் 16 இல் குழு தன் விசாரணையைத் தொடங்கியது. அதன் அறிக்கை தான் இப்போது வந்திருக்கிறது.

### அய்.நா. அறிக்கை கூறுவது என்ன?

உலகத்தில் மிகவும் நம்ப தகுந்த, யாரும் குற்றம் சொல்ல முடியாத மூன்று பேரை அய்.நா. குழு நியமித்தது. இந்தோனேசியாவின் ஓய்வு பெற்ற அட்டர்னி ஜெனரல் மனித உரிமை ஆணையத்தில் பத்து ஆண்டுகள் பணி புரிந்தவர். (அந்த நாட்டு அதிபர் சுகர்தோ மீதே வழக்கு நடத்தி தண்டனை வாங்கி கொடுத்தவர்) தென் ஆப்பிரிக்காவின் மனித உரிமை ஆணையத்தில் தலைவராக பணிபுரிந்த யாஸ்மின் சூக்கா என்ற பெண்மணி, அமெரிக்காவைச் சார்ந்த, சர்வதேச மனித உரிமை சட்ட வல்லுநர் ஸ்டீபன் ரேட்னர் ஆகிய மூன்று பேரும் அந்த குழுவில் இருந்தார்கள். இவர்கள் 2011 மார்ச் 31 ஆம் தேதி அறிக்கையை கொடுத்திருக்கிறார்கள். ஏப்ரல் 26 ஆம் தேதி தான் ஐ.நா.வால் வெளியிடப்பட்டது.

அந்த அறிக்கையில் சொல்லப்பட்டவைகளில் சில செய்திகள்..

முதலில் அய்.நா. மன்றமே முறையாக நடந்து கொள்ளவில்லை என்று அறிக்கைச் சொல்கிறது. ஐ.நா.வின் பொதுச் செயலாளருக்கு உண்மைகள் போகாமல் தடுக்கப்பட்டு, இலங்கையின் போரை நிறுத்துவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே ஈழ இறுதிப் போரின் போதான ஐ.நா. அலுவலகத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஒரு பரிந்துரை.

2009 மே 27 ஆம் தேதி (போர் முடிந்து எட்டு நாளில்) ஜெனிவாவில் இருக்கும், ஐ.நா.வின் மனித உரிமை ஆணையத்தில், சுவிட்சர்லாந்து நாடு ஒரு தீர்மானத்தை கொண்டு வந்தது. சுவிட்சர்லாந்து அமைதிக்கு பேர் போன நாடு, தன்னிடம் இராணுவம் வைத்துக் கொள்ளாத நாடு, உலகத்தில் போடப்பட்ட அனைத்து மனித உரிமை ஒப்பந்தங்களின் அசல் நகல்கள் சுவிட்சர்லாந்தின் பாதுகாப்பில்தான் உள்ளன. எனவே தன்னுடைய பொறுப்பை உணர்ந்து, அந்த தீர்மானத்தை கொண்டு வந்தது. என்ன தீர்மானம் என்றால்... "இலங்கையில் நடந்த இறுதிகட்டப் போரில், இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் ஏராளமான போர்க் குற்றங்களைச் செய்திருக்கிறார்கள். இதை இலங்கை அரசே ஒரு விசாரணை குழு அமைத்து, குற்றம் செய்தவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்"... என்பதுதான் தீர்மானம். இந்த தீர்மானத்தை இந்தியா முன் நின்று தோற்கடித்தது.

இன்னொரு தீர்மானத்தை இலங்கைக்கு ஆதரவாக முன்மொழிந்தார்கள். அது என்ன வென்றால்... "பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து தமிழ் மக்களை காப்பாற்றியதற்கு இலங்கையை பாராட்டுகிறோம். போரின் போது அவ்வப்போது உண்மை நிலவரங்களை, உலக நாடுகளுக்கு எடுத்துச் சொன்னதற்காகவும் தன்னுடைய வெளிப்படையான தன்மைக்கும் நாங்கள் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அய்.நா. மன்றம் போன்ற அனைத்துலக நாடுகளுடன் ஒத்துழைப்போம் என்று உறுதிமொழி தந்துள்ளதை வரவேற்கிறோம். (ஆனால் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூன் அமைத்த வல்லுநர் குழுவையே அதன் பணி தொடங்கிய செப்டம்பர் 16-லிருந்து விசாரணை அறிக்கை அளித்த 2011 மார்ச் 31 வரை இலங்கைக்குள் நுழைவதற்கு அனுமதிக்க மறுத்தது) இப்படி ஒன்பது பாராட்டுகளை சொல்லிவிட்டு, இலங்கைக்கு உலக நாடுகள் எல்லாம் உதவி செய்ய வேண்டும் என்று தீர்மானம், இந்த தீர்மானத்தை இந்தியா முன்னின்று வெற்றிப்பெறச் செய்தது. இருபத்தி ஒன்பது நாடுகள் ஆதரவைப் பெற்றது. பன்னிரண்டு நாடுகள் மட்டும் எதிர்த்து வாக்களித்தார்கள். ஆறு நாடுகள் வாக்களிக்கவே இல்லை.

இப்போது இந்த பரிந்துரையில் சொல்லியிருக்கிறார்கள்.... "இலங்கை ஏராளமான குற்றங்களைச் செய்திருக்கிறது. நிறைவேற்றப்பட்டது தவறான தீர்மானம். இந்த அறிக்கையின் வெளிச்சத்தில் அந்த தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுங்கள்"... என்று ஒரு பரிந்துரை.

இது அல்லாமல் அவர்கள் ஏராளமான செய்திகளை, தேதி வாரியாக பதிவு செய்கிறார்கள்....

2008 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து தான் விசாரணயை தொடங்கச் சொன்னார்கள். ஏனென்றால் அப்போதுதான் இலங்கை அரசு அறிவித்தது... "நாங்கள் கடுமையாக போர் நடத்தப் போகிறோம். இங்கிருக்கும் மனித உரிமை அமைப்புகள், ஐ.நா. மன்றத்தின் பிரதிநிதிகள், சர்வதேச அரசு சாரா அமைப்புகள் எல்லாம் வெளியேறுங்கள், உங்களுக்கு எங்களால் பாதுகாப்பு தர முடியாது. உலக உணவுக் கழகம் என்று ஒன்று இருக்கிறது. அதைத் தவிர எல்லோரும் வெளியேறுங்கள்"... என்று சொல்லிவிட்டார்கள். இரண்டு ஐ.நா. பிரதிநிதிகள் மட்டும் வெளியேற மறுத்து விட்டார்கள். மற்றவர்கள் எல்லோரும் வெளியேறி விட்டார்கள். உலக உணவுக் கழகம் மட்டும் அங்கிருந்து, அந்த மக்களுக்கு உணவு வழங்கிக் கொண்டிருந்தது. அதைப் பற்றி சொல்கிறார்கள்....

போரில்லா பகுதியென்று அறிவிக்கப்பட்ட பகுதியில் குறைந்தது, மூன்று லட்சத்து முப்பதாயிரம் பேர் இருந்தார்கள். ஆனால் எழுபதாயிரம் பேர் மட்டும் இருப்பதாக, இலங்கை அரசு சொன்னது. ஆனால் வன்னி மாவட்டத்தின் அரச முகவர் (ஆட்சித் தலைவர்) பார்த்திபராஜாவோ, "எண்பத்தி ஓராயிரம் குடும்பங்கள் இருக்கின்றன" என்று கூறினார். அடுத்த நாளே அவரைக் காணவில்லை. தற்போதுதான் அவர் சிறையில் இருப்பது தெரிய வந்திருக்கிறது. எழுபதாயிரம் பேர் இருப்பதாகத்தான், பிரணாப் முகர்ஜியும் இந்திய நாடாளுமன்றத்திலேயே சொன்னார். ஆனால் போர் முடிந்த பின்போ இரண்டு லட்சத்து தொண்ணூறாயிரம் பேர் முகாமிற்கு வந்தார்கள்.

எழுபதாயிரம் பேருக்கு மட்டுமே உணவு அனுப்ப, உலக உணவு கழகத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது. ஒரு ஐந்து ஆறு மாதங்களாக, ஒரு நபரின் உணவைத்தான் ஐந்து பேர் சேர்ந்து சாப்பிட்டிருக்கிறார்கள். எனவே ஆயிரக்கணக்கான மக்கள், அதாவது முதியோர், நோயாளிகள், குழந்தைகள் என ஆயிரக்கணக்கானோர் பட்டினியால் இறந்திருக்கிறார்கள்.

20.1.2009 இல், போர் இல்லாத பகுதி என்று சில பகுதிகளை அறிவித்து, அங்கு பொது மக்களை வரச் சொன்னார்கள். வள்ளிபுனம் என்ற அந்த பகுதியில் அடுத்த நாளே 21.4.2009 இல், விமானத்தில் வந்து குண்டுகள் வீசப்பட்டன என்று எழுதுகிறார்கள். அடுத்து 24.1.2009 இல் மீண்டும் குண்டு வீசப்பட்டது. அதுவும் ஐ.நா.வின் உணவு வழங்கும் இடத்திலும் குண்டு வீசப்பட்டது என்று சொல்கிறார்கள். அவர்களிடம் ஆளில்லா உளவு விமானங்கள் இருக்கிறது. அது மிகத் துல்லியமாக இடத்தை அறிந்து சொல்லும் உளவு விமானங்கள், அதுவும் அரசே அறிவித்த இடம். எனவே தெரிந்தே குண்டுகள் வீசப்பட்டன. நல்லவேளையாக ஐ.நா. ஊழியர்கள் யாரும் சாகவில்லை. ஒட்டு மொத்தப் போரில் அறுபத்து ஆறு மனித உரிமைப் பணியாளர்கள் இறந்திருக்கிறார்கள் என்று அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்த குண்டு வீச்சில் ஐ.நா. ஊழியர்கள் யாரும் சாகவில்லை. பால் வாங்குவதற்காக வரிசையில் நின்ற தாய்மார்கள் மீதும் குண்டுகள் வீசப்பட்டன. ஏராளமான தாய்மார்களும், குழந்தைகளும் இறந்தார்கள். செத்துப் போன தாய்மார்கள் எல்லோரும், பால் அட்டைகளை இறுக்கமாக பிடித்தவாறே இறந்து போயிருந்தார்கள் என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தைக்கூட வெளியேற்றிவிட்டார்கள். 1858 இல் ஆரம்பிக்கப்பட்டது செஞ்சிலுவை சங்கம். அதற்கு பிறகு நடைபெற்ற அனைத்து போர்களிலும் செஞ்சிலுவை சங்கம் இருக்கும். செஞ்சிவை சங்கம் இருக்கும் பகுதிகளில் தாக்குதல்கள் நடக்காது. உலகின் மிகக் கொடூரமானவன் என்று சொல்லப்படும் ஹிட்லர் கூட செஞ்சிலுவை சங்கத்தை போர்ப் பகுதியில் அனுமதித்தான். ஆனால் இங்கு மட்டும் எல்லோரும் வெளியேற்றப்பட்டு "சாட்சிகள் இல்லாப் போர்" தான் நடைபெற்றது.

அங்கிருந்த இரண்டு ஐ.நா. அதிகாரிகளும், போர் நடக்கும் பகுதிகளில் இருந்து வெளியேறி, கடற்கரை பக்கம் செல்கிறார்கள். அவர்கள் அறிக்கையில் சொல்கிறார்கள்... "நாங்கள் செல்லும்போது அதிகபடியான பிணங்கள் கீழே கிடந்ததால் அந்த கொடுமைகளை பார்க்க முடியாமல், மேலே பார்த்தவாறு நடந்து சென்றோம். ஆனால் மேலே பார்த்த எங்களுக்கு அதைவிட அதிர்ச்சியாக இருந்தது. குழந்தைகளின் உறுப்புகளும், மனித உடல்களின் தசைகளும் ஆங்காங்கே மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தன"... என்று.

அவர்கள் கடற்கரையோரங்களில் இருந்து கொண்டு, அழைத்து வரப்படும் காயம்பட்டவர்களை கப்பலில் ஏற்றி அனுப்புவார்கள். அதுவரை காயம்பட்டவர்கள் பதினான்காயிரம் பேரையும், உறுப்பு இழந்தவர்கள் ஐந்தாயிரம் பேர்களையும் வெளியில் அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அப்படி கடற்கரையில் வந்து காத்திருந்தவர்கள் மீதும் குண்டு வீசப்பட்டிருக்கிறது. கடைசியாக ஏப்ரல் மாதத்தின் இறுதியில் ஐ.நா.வின் கப்பல் மீது குண்டு வீசுகிறார்கள். அது செஞ்சிலுவை சங்கத்தின் கப்பலுக்கு இருபது மீட்டர் தொலைவில் வெடிக்கிறது. அதோடு கப்பல் திரும்பி சென்று விடுகிறது.

போர் இல்லா பகுதி என அறிவித்த மூன்று பகுதிகளிலும், தொடர்ந்து குண்டுகள் வீசி தாக்கப்பட்டன என்று எழுதுகிறார்கள். இங்கிருந்த மருத்துவமனைகளும் தாக்கப்பட்டன என்று எழுதுகிறார்கள். ஜனவரியில் இருந்து மே மாதம் 19 வரைக்கும், அறுபத்தி ஐந்து முறை மருத்துவமனைகள் மீது குண்டு வீசியிருக்கிறார்கள். தெரிந்தே

5 ஆம் பக்கம்

# உளவுத் துறை அதிகாரி உன்னி கிருஷ்ணன்களின் கதை! [6]

**ராஜீவ் சர்மாவின் 'புலிகளுக்கு அப்பால்....' நூலுக்கு மறுப்பு தெரிவித்து, சென்னை (ஜூன் 4) வெளியீட்டு விழாவில் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரையின் விரிவாக்கம்**

அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் கொலைகளை நடத்தியது புலிகள்தான் என்று பழிபோட்டது போல், அதற்கு முன்பே 1985 ஆம் ஆண்டில் இரண்டு நாடாளுமன்ற தலைவர்கள் கொல்லப்பட்டபோதும், புலிகள் மீதே வீண் பழி சுமத்தினர். கொல்லப்பட்ட வி.தர்மலிங்கம், எம். ஆலால சுந்தரம் என்ற இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும், யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்தனர். தர்மலிங்கம் 23 ஆண்டுகளாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து, தமிழர்களுக்கு தொண்டு செய்தவர். அதேபோல் ஆலாலசுந்தரம் நியமன முறையில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். மிகவும் நயவஞ்சகமாக இவர்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள். ஆலால சுந்தரம் வீட்டில் இருந்தபோது நன்னடத்தை சான்றிதழ் கேட்கச் சென்ற இரண்டு பேர், அவரை வீட்டிலிருந்து இழுத்து வந்து காரில் கடத்தினர். தர்மலிங்கம் திருமண நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது, ஆலால சுந்தரம் அவரை அவசரமாக சந்திக்க விரும்புவதாகக் கூறி வெளியே அழைத்து வந்து காரில் பலவந்தமாக ஏற்றி கடத்தினர். அடுத்த நாள் - தர்மலிங்கம் சடலம் கல்லறை ஒன்றின் அருகே நெற்றியில் குண்டுக் காயங்களோடு கிடந்தது. அருகே கிடந்த ஒரு துண்டு காகிதத்தில், "தமிழினத்துக்கு துரோகமிழைத்தவருக்கு வழங்கப்பட்ட தண்டனை இது. ஈழத்தை அடகு வைப்பவர்களுக்கு குறிப்பாக தமிழர் அய்க்கிய விடுதலை முன்னணிக்கு - இப்படிக்கு தன்மானமுள்ள தமிழர்கள்" என்று எழுதப்பட்டிருந்தது.

ஆலால சுந்தரத்தின் சடலம் மார்பில் குண்டு காயங்களோடு யாழ்ப்பாணம் நகரில் கைப்பற்றப் பட்டது. இந்த படுகொலைகள் யாழ்ப்பாணத்தில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தின. அதிலும் தர்ம லிங்கம், டி.யு.எல்.எப். தலைவர் அமிர்தலிங்கம் போக்கு பிடிக்காமல் அதிலிருந்த விலகி, அதிருப்தி யாளர்கள் உருவாக்கியிருந்த தமிழ் ஈழ விடுதலை முன்னணி அமைப்பில் இணைந்திருந்தார். பழகு வதற்கு மிகவும் எளிமையானவர். மற்றவர்களுக்கு உதவக் கூடியவர். பல ஏழைக் குழந்தைகளை தனது சொந்த செலவிலேயே பள்ளியில் சேர்த்து படிக்க வைத்தவர். அவரிடமிருந்த ஒரே வாகனம் சைக்கிள் தான். ஆலால சுந்தரம் - வழக்கறிஞர்; ஆனாலும் மிகவும் ஏழ்மையாகவே வாழ்ந்தவர். தன்னுடைய மகள், ஒரு சைக்கிள் கேட்டபோது, மனைவியின் நகையை விற்றுத்தான் வாங்கித்தர வேண்டிய நிலையில் இருந்தார். இந்த இருவரின் கொடூரமான கொலையும் யாழ்ப்பான மக்களின் நெஞ்சை உலுக்கியது. விடுதலைப் புலிகள் தான் ஈவிரக்கமின்றி, இந்தக் கொலையை செய்தார்கள் என்ற பிரச்சாரம் திட்டமிட்டு பரப்பப்பட்டது. பழிகள் புலிகள் மீது விழுந்தது.

இந்த சம்பவம் நடந்த 1985 ஆம் ஆண்டு கால கட்டத்தைப் பார்க்க வேண்டும். 1984 ஆம் ஆண்டு களில் இந்திரா பிரதமராக இருந்தபோது போராளி களுக்கு இந்தியாவில் ஆயுதப் பயிற்சி தர முன் வந்தார். 'ரா' உளவு நிறுவனம், அதற்கான ஏற்பாடுகளை செய்தது. அப்படிப் பயிற்சி பெறுவதற்கு 'ரா' முதலில் தேர்ந் தெடுத்த அமைப்பு சபாரத்தினம் தலைமையில் இயங்கிய 'டெலோ' தான்! காரணம். இந்தியா சொல்வதை அப்படியே நிறைவேற்றும் அமைப்பாக 'டெலோ' இருந்தது. பிறகு படிப்படியாக ஏனைய அமைப்புகளுக்கும் பயிற்சி தர 'ரா' முன் வந்தது. 'விடுதலைப்புலிகள்' மட்டும் தனித்து விடப்பட்டனர். விடுதலைப் புலிகள் இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் வர மாட்டார்கள் என்ற உறுதியான முடிவில் உளவு நிறுவனம் இருந்ததே இதற்குக் காரணம். ஏனைய குழுக்கள் இந்தியாவின் பயிற்சி மற்றும் ராணுவ உதவிகளோடு பலம் பொருந்தியவைகளாக மாறும்போது விடுதலைப் புலிகள் அழிக்கப்படக் கூடிய ஆபத்தை உணர்ந்த பிரபாகரன், இந்தியாவின் ராணுவப் பயிற்சியில் புலிகள் இயக்கத்தையும் இணைக்கவேண்டும் என்று வற்புறுத்தி இணைத்தார்.

இந்த சூழ்நிலையில் 1984 இல் இந்திரா, தனது மெய்க் காப்பாளர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். ராஜீவ் பிரதமரானவுடன் இந்திராவின் ஈழத் தமிழர் ஆதரவு அணுகுறையில் அதிருப்தியுற்றிருந்த பார்ப்பன அதிகார வர்க்கம், ராஜீவை தங்கள் வழிக்கு திருப்பினர். அதுவரை ஈழத் தமிழர்ப் பிரச்சினைக்கு பொறுப்பேற்றிருந்த பார்த்தசாரதி என்ற அதிகாரி மாற்றப்பட்டு பண்டாரி என்ற அதிகாரி, அந்த பொறுப்புக்கு வந்தார். ஈழ விடுதலைப் போராட் டத்தில் சமரசத்துக்கு உட்படாத இந்தியாவின் வலையில் விழ மறுத்த விடுதலைப் புலிகள் இயக்கத்தை மக்களிடமிருந்து தனிமைப்படுத்தி, அவர்களை பலவீனப்படுத்தும் திட்டங்களை உளவு நிறுவனம் உருவாக்கியது. தர்மலிங்கம், ஆலால சுந்தரம் படுகொலைகள் அந்த நேரத்தில்தான் நடந்தன. இந்தப் படுகொலைகளை விடுதலைப் புலிகள் மறுத்தாலும் எந்த ஆதாரமும் இன்றி புலிகள் மீது பழி போட்டே பிரச்சாரங்கள் நடந்தன.

ராஜீவ் சர்மாவும் இந்த நூலில், "1980-1990-க்கும் இடைப்பட்ட காலத்தில் சக தமிழ் இயக்கங்களைச் சார்ந்த 300 போராளிகளை மற்றும் எல்.டி.டி.ஈ. இயக்கத்திற்குள்ளேயே அவருக்கு எதிர்ப்பு தெரிவித்த பல முக்கிய தலைவர்களை பிரபாகரன் கொன்றார்" என்று எந்த ஒரு சிறு ஆதாரமும் இன்றி புலனாய்வுத் துறை பரப்பிய அதே பொய்களை அப்படியே வாந்தி எடுத்து எழுதுகிறார். இதிலிருந்தே இந்த நூல், எந்த 'எஜமானருடைய' குரலை எதிரொலிக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். எதைச் சொன்னாலும் நம்ப வைத்து விடலாம் என்று தமிழினம் ஏமாந்து இருந்த காலம் இப்போது இல்லை என்பதை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்த பொய் புனைவுகளை கிழித்தெறிந்து மக்கள் மன்றத்தில் நாம் உண்மைகளை அம்பலப் படுத்தியே தீருவோம்.

அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் படுகொலை களைப் போலவே, தர்மலிங்கம், ஆலாலசுந்தரம் படுகொலைகளும் புலிகள் மீது வீண்பழி சுமத்தவே அரங்கேற்றப்பட்டன. இதற்கு இரண்டு ஆதாரங்களை முன் வைக்க விரும்புகிறேன். ஒன்று - உளவு நிறுவனத்தின் நம்பிக்கைக்குரிய ஆய்வாளர் நாராயணசாமி, விடுதலைப்புலிகளுக்கு எதிராக எழுதி, உளவுத் துறையால் போற்றப்படுகிற, அவரது நூலிலேயே இந்தக் கொலையில் டெலோ கண்டனத்துக்கு உள்ளானது என்று கூறுகிறார். ஆனால் உளவு நிறுவனங்கள் விடுதலைப் புலிகளையே குற்றம் சாட்டியதாக குறிப்பிடுகிறார். சுட்டுக் கொல்லப்பட்ட தர்மலிங்கத்தின் மகன் 'புளோட்' என்ற போராளிகள் குழுவில் சேர்ந்திருந்தார். அவரும் விடுதலைப் புலிகள் தான் இதைச் செய்தார்கள் என்று கூறவில்லை. அப்போது 'எல்.டி.டி.ஈ - டெலோ - ஈரோஸ் - ஈ.பி.ஆர்.எஃப்.' அமைப்புகள் ஒன்று சேர்ந்து ஈழ தேசிய விடுதலை முன்னணி என்ற அமைப்பை உருவாக்கியிருந்தன. இந்த அமைப்பில் இடம் பெற்றுள்ள ஏதோ ஓர் அமைப்பே தனது தந்தையை கொலை செய்ததாகவே கூறினார். ஆனால் உண்மையில் இந்தக் கொலையை செய்ய உத்தரவிட்டவர், இந்திய உளவு நிறுவனத்தின் உத்தரவுகளை ஏற்று செயல்பட்டு வந்த 'டெலோ' அமைப்பின் தலைவர் சிறீசபாரத்தினம் தான். இதற்கு சான்று விடுதலைப் புலிகளை கடுமையாக எதிர்த்து எழுதப்பட்ட நூலான 'முறிந்த பனை' என்பதாகும்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தைச் சார்ந்த ராஜன் ஹூல் உள்ளிட்ட 4 பேராசிரியர்கள் எழுதிய இந்த நூல் விடுதலைப் புலிகளுக்கு எதிராக எழுதப்பட்ட நூலாகும். அந்த நூலே தர்மலிங்கம், ஆலால சுந்தரம் படுகொலைகளைச் செய்தவர்களை பற்றி இவ்வாறு எழுதியுள்ளது:

> "தமிழர் அய்க்கிய விடுதலைக் கூட்டணி, நாடாளுமன்ற உறுப்பினர்களுள் திரு வாளர்கள் தர்மலிங்கமும், ஆலால சுந்தரமும், யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து வசித்து வந்தவர்கள். இந்தியாவில் வாழ்ந்து வந்த டெலோ, இயக்கத்தினருடன் பேசிய அநேகரின் சான்றாதாரங்களின்படி, இக் கொலைகள் பின் வருமாறு நடந்தனவென்று தெரிய வந்தது. விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரான பிரபாகரன், தமிழர் அய்க்கிய விடுதலைக் கூட்டணியைக் கடுமையாக மிரட்டி உரையாற்றியபின், பிரபாகரன் இக் கொலைகள் தொடர்பாக குற்றஞ்சாட்டப் பட்டு, மதிப்பிழக்கப்படுவார் என எதிர்பார்த்த டெலோ தலைவர் சிறீசபாரத்தினம், இந்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கொலை செய்யுமாறு தனது ஆட்களுக்கு இரகசியமாக ஆணையிட்டார். எதிர் பார்த்ததுபோல், விடுதலைப் புலிகளே பெரும்பாலும் இக் கொலைகளுக்கு குற்றஞ்சாட்டப்பட்டனர். திரு.தர்மலிங்கத்தின் வீட்டுக்கு அண்மையில் காவல் நின்ற ஒரு புளோட் உறுப்பினர் கொலையாளிகள் வந்த வாகனம் 'டெலோ' வுக்குச் சொந்தமானதென இனங் கண்டார்."
>
> - "முறிந்த பனை", பக்.82

இதுதான் புலிகள் எதிர்ப்பாளர்களே தங்களது நூலில் எழுதியுள்ள உண்மை.

இந்தியாவின் போராளிகளுக்கு பயிற்சி தரப்பட்ட காலகட்டங்களிலும் சரி, அதைத் தொடர்ந்து, ஈழத்தில் கொலைகள் நடந்த காலத்திலும், அவற்றில் இந்திய உளவு நிறுவனங்களின் பங்கு உண்டு என்பதற்கு, மற்றொரு முக்கிய தகவலை நாம் மக்கள் மன்றத்தில் சொல்லியாக வேண்டும். தமிழ்நாட்டில் பல்வேறு போராளிகள் குழுக்களோடு தொடர்பு கொண்டு அவர்களுக்கு ராணுவப் பயிற்சிகளுக்கு ஏற்பாடு செய்த தரவேண்டிய பொறுப்பு 'ரா' உளவு நிறுவனத்தின் கள அதிகாரியாக டி.அய்.ஜி. நிலையில் பணியாற்றிய உன்னிகிருஷ்ணன் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த உன்னி கிருஷ்ணன்தான் பயிற்சிக்கு முதல் அணியாக 'டெலோ'வை தேர்ந் தெடுத்தார். இந்த உன்னி கிருஷ்ணனின் பின்னணி என்ன என்பதையும் நாம் சொல்லியாக வேண்டும்.

> "1981 இல் உன்னிகிருஷ்ணன் கொழும்பில் 'ரா'வுக்காக வேலை செய்த போது – அமெரிக்க தூதரக அதிகாரி ஒருவருடன் நட்பு கொண்டார். இருவரும் நெருக்கமாகி, பல 'ஒழுக்கக் கேடான' செயல்களில் ஈடுபட்டனர். பல பெண்களுடன், பாலியல் உறவுகளை வைத்திருந்தனர். அப்போது – அமெரிக்க தூதரக அதிகாரி வழியாக – இந்திய உளவுத் துறையின் செய்திகளை அமெரிக்க உளவு நிறுவனமான 'சி.அய்.ஏ.'க்கு அனுப்பி வந்தார். 1983 களில் தமிழ்ப் போராளிக் குழுக்களுடன் – நேரடி தொடர்பு கொண்டிருந்த காலத்தில், உன்னிகிருஷ்ணன், 'ரா'வின் அதிகாரி மட்டுமல்ல; 'சி.அய்.ஏ.'வுக்கும் உளவாளி! தமிழ்ப் போராளிக் குழுக்களின் செயல்பாடு களுக்கு பொறுப்பு ஏற்ற பிறகு, அவர் – சிறீலங்கா உளவுத் துறைக்கும் நெருக்க மானார். கொழும்பில் – அவருக்கு பல பெண்களுடன் இருந்த உறவை சிறீலங்கா உளவுத் துறைப் பயன்படுத்திக் கொண்டு, மிரட்டி, உன்னிகிருஷ்ணனை தனது வலையில் சிக்க வைத்தது. ஒரே கட்டத்தில் 'ரா' – 'சி.அய்.ஏ.' – சிறீலங்கா உளவுத் துறைகளுடன், ரகசியமாக செயல்பட்டுக் கொண்டும், அதே காலத்தில் ஈழத் தமிழ்ப் போராளிக் குழுக் களுடனும் நேரடி தொடர்பு கொண்டும் உன்னிகிருஷ்ணன் செயல்பட்டுள்ளார். 1985 இல் சென்னையில். இவர் தமிழ் ஈழப் போராளிக் குழுக்களுடன் தொடர்பு கொண் டிருந்தபோது – பம்பாயில் – அமெரிக்காவின் 'பான் விமான சேவை'யில் வேலை செய்த ஒரு அமெரிக்கப் பெண்ணுடன் தொடர்பு ஏற்பட்டது. இந்தத் தொடர்பை ஏற்படுத்தித் தந்தவரும் உன்னி கிருஷ்ணனின் நண்பரான கொழும்பில் இருந்த அமெரிக்க தூதரக அதே அதிகாரிதான். சென்னையிலிருந்து – பம்பாய்க்குப் பறந்து கொண்டு, விமானப் பணிப் பெண்ணுடன், அடிக்கடி சிங்கப்பூருக்குப் போய், உல்லாசமாக இருந்தார், உன்னி கிருஷ்ணன். ஆனால் எப்படியோ இவர்கள் இருவரும் 'இணைந்த நிலையில்' இருந்த படங்கள் ரகசியமாக எடுக்கப்பட்டன. ஈழத் தமிழர்ப் பிரச்சினையில் இந்தியா மேற்

4 ஆம் பக்கம்

# சென்னை கருத்தரங்கில் விளக்கம்

# ஈழ விடுதலை - தெற்கு சூடான் ஒற்றுமைகள்

தெற்கு சூடான் நாட்டின் விடுதலைக்கும் தமிழ் ஈழ விடுதலைக்கும் உள்ள ஒற்றுமைகளை சென்னையில், நாடு கடந்த தமிழீழ அரசாங்க தோழமை மய்யம் கடந்த 16.7.2011 அன்று நடத்திய கருத்தரங்கில் உரையாற்றிய பலரும் சுட்டிக் காட்டினர். சூடான் நாட்டுக்கும் தெற்கு சூடானுக்கும் இடையே உருவாகியுள்ள போர் நிறுத்த சமரச உடன்பாட்டில் அடங்கியுள்ள அம்சங்கள் ரணில் விக்ரமசிங்கே பிரதமராக இருந்த காலத்தில் விடுதலைப் புலிகள் தயாரித்து வழங்கிய தன்னாட்சி சபைக்கான உடன்பாடுகளைப் போலவே இருப்பதை தோழர் தியாகு சுட்டிக்காட்டினார். சூடான் நாட்டைப் போல் அப்போதே, இலங்கை அரசும், இந்த உடன்படிக்கையை ஏற்றிருக்குமானால் இவ்வளவு கொடூரமான முள்ளி வாய்க்கால் இனப்படுகொலையை தவிர்த்திருக்க முடியும் என்றார் அவர்.

தெற்கு சூடான் மக்கள் மீது சூடான் நடத்திய இனப்படுகொலைகள் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்ததுபோல் தமிழ் ஈழத்தில் நடந்த இனப் படுகொலைகளுக்கு பதில் சொல்லும் காலம் வந்தே தீரும். இனப்படுகொலைக்கான பதில் தமிழ் ஈழ விடுதலையாகவே இருக்க முடியும். இதே கருத்தைத்தான் அமெரிக்காவில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அமர்வில் பங்கேற்றுப் பேசிய சூடான் விடுதலை இயக்க அமெரிக்கப் பிரதிநிதியும் பேசினார். தெற்கு சூடான் விடுதலைக்கு அந்நாட்டிலுள்ள எண்ணெய் வளம் மட்டுமே ஒரே காரணம் என்று கூற முடியாது. அதுவும் ஒரு காரணியாக இருக்கலாம். தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டமாகவே அதைப் பார்க்க வேண்டும். ஈழ விடுதலையை இந்தியா பெற்றுத்தரும் என்று, நாம் ஒரு போதும் நம்பக் கூடாது. ஈழத் தமிழர்களின் தேசிய சுய நிர்ணய உரிமைக்கான போராட்டத்தை சர்வதேச அரங்கில் நகர்த்த வேண்டும்.

சூடானில் நடந்ததைப் போல வடக்கு கிழக்கு வாழ் தமிழர்களிடையேயும் வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை நாம் வலியுறுத்துவோம். நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களுக்கு தற்போது வழங்கி வரும் அடையாள அட்டைகள் அத்தகைய வாக்கெடுப்புக்கு பயன்படும். ஒரு தேசத்துக்கான விடுதலைப் போராட்டம் சர்வதேச அரங்கில் இடதுசாரிகள் ஆதரவு பெற்றுள்ளதா? அல்லது முதலாளித்துவ அரசுகளின் ஆதரவு பெற்றுள்ளதா என்பதைப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. விடுதலை பெற்ற பல தென் அமெரிக்க நாடுகள், சோஷலிச நாடுகளின் ஆதரவோடுதான் விடுதலை பெற்றன என்று கூறிட முடியாது என்ற கருத்துகளை தோழர் தியாகு முன் வைத்தார்.

இனப்படுகொலைகளை நடத்திய இராஜபக்சேயை போர்க் குற்றவாளியாக தண்டிக்க வேண்டும் என்ற முழக்கம், ஈழ விடுதலையை திசை திருப்புவதாகிவிடும் என்றும், எனவே இராஜபக்சேவை தண்டிக்க வேண்டும் என்ற முழக்கத்துக்கு பதிலாக ஈழ விடுதலையையே முன்னிறுத்த வேண்டும் என்று மே 17 இயக்கத்தைச் சார்ந்த திருமுருகன் கூறினார். இராஜபக்சே இனப் படுகொலை செய்தவர் என்ற கருத்தை ஆயுதமாக்கித்தான் தமிழ் ஈழ விடுதலையை முன்னெடுக்க முடியும் என்று திருமுருகன் முன் வைத்த கருத்துக்கு பதிலளித்து, அகில இந்திய பாரம்பரிய மீனவர் சங்கத்தைச் சார்ந்த மகேசு, ஊடகவியலாளர் டி.எஸ்.எஸ். மணி உள்ளிட்டோர் பேசினர்.



'யாழினி' திரைப்படத்தில் ஒரு காட்சி

சென்னை பல்கலைக்கழக பேராசிரியர் மணிவண்ணன் பேசுகையில்: ஈழத்தில் கலாச்சாரம், பொருளாதாரம், அரசியல் என்ற மூன்று அழித்தொழிப்புகள் நடந்துள்ளன. தமிழர்களின் கலாச்சார நகரமான யாழ்ப்பணமும், கிளிநொச்சியும் அழிக்கப்பட்டது. கலாச்சாரப் படுகொலையாகும். தமிழர்களின் அடையாளத் தோடு கட்டமைக்கப்பட்ட நகரமான கிளிநொச்சி இன்று அடையாளமிழந்து கிடக்கிறது. அமைதி வழியில் போரில்லாமல் கிடைக்கும் சுதந்திரத்தைத்தான் காந்தியைப்போல் நாமும் விரும்புகிறோம். நேர்மையான அமைதியான சுதந்திரத்தின் குரலை ராணுவத்தால் அடக்கும்போதுதான், அங்கே அமைதி விடை பெறுகிறது. ஈழத் தமிழர்களுக்கான இறையாண்மையை தமிழ்நாட்டுத் தமிழர்களாகிய நாம் முதலில் அங்கீகரிக்க வேண்டும். அதற்கான மக்கள் கருத்தை உருவாக்க வேண்டும். மக்கள் கருத்துக்கு முன் எந்த அரசியல் கட்சியும் பணிந்தாக வேண்டும். தமிழகத்தில் கடந்த ஆட்சி தேர்தலில் சந்தித்த தோல்வியும், இந்த ஆட்சி சட்டமன்றத்தில் இலங்கையில் பொருளாதாரத் தடையை வலியுறுத்தி நிறைவேற்றிய தீர்மானமும் மக்கள் சக்திக்குக் கிடைத்த வெற்றிதான் என்று குறிப்பிட்டார்.

கருத்தரங்கில் மனித நேய மக்கள் கட்சியைச் சார்ந்த அஸ்லம் பாஷா, தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை ஒருங்கிணைப்பாளர் உ. தனியரசு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த ந. நஞ்சப்பன், புதிய தமிழகம் தலைவர் மருத்துவர் க. கிருட்டிணசாமி ஆகிய நான்கு சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்று, தமிழக சட்டமன்றத்தில் முதல்வர் ஜெயலலிதா முன்மொழிந்து நிறைவேற்றிய தீர்மானத்தை சட்டமன்றத் தீர்மானமாக நின்றுவிடாமல், அதை தமிழக மக்கள்

6 ஆம் பக்கம்

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

*கொண்ட நடவடிக்கைகள்; இந்தியாவின் வெளியுறவுத் துறை முடிவுகள்; 'ரா'வின் திட்டங்கள் பற்றிய அனைத்துத் தகவல்களும் - உன்னிகிருஷ்ணன் வழியாக - சிறீலங்கா அரசுக்குக் கிடைத்து வந்தன.*

கொழும்பில் இந்திய தூதராகவிருந்த ஜே.என்.தீட்சித் இதை ஒப்புக் கொண்டு தனது நூலில் பதிவு செய்துள்ளார். தீட்சித் எழுதியிருப்பதைப் படிக்கிறேன்.

*"1986 ஆம் ஆண்டுகளில் - முதல் 6 மாதங்களில் - நான் லலித் அதுலத் முதலியுடன் (இவர் இலங்கையில் செல்வாக்குள்ள அமைச்சர்) நடத்திய உரையாடல்களில் - அவர் தெரிவித்த கருத்துக்கள் - என்னை வியப்பில் ஆழ்த்தின. இந்தியாவின் வெளி நாட்டுத் துறை அதிகாரிகள்; உளவு நிறுவன அதிகாரிகள்; இவர்களின் செயல்பாடுகள் பற்றி, ஏராளமான தகவல்களை அவர் பகிர்ந்து கொண்டது. என்னை வியப்பில் ஆழ்த்தி விட்டது. உடனே நான், இதுபற்றி டெல்லிக்கு தகவல் கொடுத்தேன்"*

- என்று எழுதியுள்ளார். (நூல்: Assignment Colombo) இப்படி - இந்திய உளவுத்துறை ரகசியங்களை சிறிலங்காவுக்கு கொடுத்தது யார் என்பதையும் - ஜே.என்.தீட்சித் குறிப்பிடுகிறார்.

*"சிறீலங்காவுக்கு, இந்தத் தகவல்களைத் தந்தது, எங்களது உளவு அமைப்பில் பணிபுரிந்த அதிகாரி உன்னி கிருஷ்ணன்தான் அவர். அமெரிக்க விமானப்பணிப்பெண் ஒருவர் மூலமாக, அமெரிக்கர் வலையில் வீழ்ந்து விட்டார். அவரது '**எதிர்மறையான**' நடவடிக்கைகள் 1986 மத்தியில் தெரிய வந்தது. தொடர்ந்து - அவர் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டது. உன்னிகிருஷ்ணன் "**அமைதியாக்கப்பட்ட**" பிறகு, சிறீலங்காவுக்கு இந்தியா பற்றி கிடைத்து வந்த தகவல்கள் கடுமையாகக் குறைந்துவிட்டன. சிறீலங்கா வுக்கு உன்னி கிருஷ்ணன்தான் ரகசியத் தகவல்களைத் தந்தார் என்பது இதன் மூலம் உறுதியானது"*

- என்று மேலோட்டமாக - விரிவாக உண்மைகளை வெளியிடாமல், ஆனால் உண்மைகளை ஒப்புக் கொண்டு எழுதியுள்ளார், ஜே.என். தீட்சித்.

"The Sri Lanka source of information was a senior operative of our own intelligence agency, Unnikrishnan, who had been subverted most probably by the Americans through a foreign lady working for Pan-American Airlines. His **negative activities** were discovered sometime towards the middle of 1986, which was followed by appropriate procedural action against him. The fact that the Sri Lankan Government's advance knowledge about Indian policies and intentions clearly diminished after Unnikrishnan was neutralized proved that he was a major source of information to the Sri Lankans. (Assignment Colombo-(1998) pg. 61)"

*உண்மைகளை மறைக்க முடியாமல் - மென்மையான வடிவில் ஜே.என்.தீட்சித் தந்துள்ளார் என்றாலும், கே.வி.உன்னி கிருஷ்ணனின் நடவடிக்கைகளை அவரால் மறைக்க முடியவில்லை."*

- ஆக அமெரிக்கா, இந்தியா, இலங்கை என்று மூன்று நாடுகளுக்கும் ஒரே நேரத்தில் உளவு வேலை பார்த்த ஒரு 'ஒழுக்கசீலரிடம்' தான், போராளி குழுக்களுக்கு பயிற்சி தரும் பொறுப்புகள் தரப்பட்டன. இந்த 'தர்மபுத்திரர்களுக்கு' தலைமையேற்று சென்னையில் செயல்பட்டவர் பார்த்தசாரதி என்ற வெளியுறவுத் துறையைச் சார்ந்த பார்ப்பன அதிகாரி! இந்திய ராணுவம் ஈழத்தில் தமிழ் மக்களைக் கொன்று குவித்த காலத்தில், இவர், உளவுத் துறையினருடன் இணைந்து ஒவ்வொரு நாளும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான பொய்யான தகவல்களை ஊடகங்களுக்கு தந்து வந்தார். அரசு கட்டுப்பாட்டிலிருந்த தொலைக்காட்சி மற்றும் வானொலி ஒவ்வொரு நாளும் புலிகளுக்கு எதிரான செய்திகளைப் பரப்பி வந்தன. (குறிப்பு : இந்த பார்த்தசாரதி என்ற பார்ப்பன அதிகாரி இப்போது ஓய்வு பெற்று விட்டார். கடந்த வாரம் 'சேனல் 4' தொலைக்காட்சி சிங்கள ராணுவத்தின் இனப்படுகொலை காட்சிகளை ஒட்டி 'ஹெட்லைன்ஸ் டுடே' நடத்திய விவாதத்தில் பங்கேற்றுப் பேசியபோது, 'பிரபாகரன் கோழை; அவர், மக்களை மனிதக் கேடயமாக பயன்படுத்தியதால் தான், இலங்கை ராணுவத் தாக்குதலில் மக்கள் பலியாக நேர்ந்தது' என்று இறுமாப்போடு கூறி இலங்கை ராணுவத்தை நியாயப்படுத்தி பேசினார்.)

இப்படிப்பட்ட 'உன்னிகிருஷ்ணன்களைக்' கொண்ட நயவஞ்சக இந்திய உளவு நிறுவனத்தின் பார்ப்பன முகத்தை ராஜீவ் சர்மா தனது நூலில் எழுதாமல் எல்லா கொலைகளுக்குமான பழியையும் விடுதலைப் புலிகள் மீதே போடுவது என்ன நியாயம்? எது எவரின் குரல்?

- தர்மலிங்கம், ஆலாலசுந்தரம் என்ற மக்கள் செல்வாக்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை வஞ்சகமாகக் கொன்று பழியை புலிகள் மீது போட்டது - 'டெலோ' என்ற அமைப்பு.
- புலிகளை எதிர்ப்பவர்களே இந்த உண்மைகளை பதிவு செய்து விட்டனர்.
- அந்த 'டெலோ' உளவுத் துறையின் முழுமையான கட்டுப்பாட்டில் இயங்கிய அமைப்பு.
- இந்தியா, இலங்கை அமெரிக்கா என்று ஒரே நேரத்தில் 3 நாடுகளின் உளவாளியாகவும், அதே நேரத்தில் பல்வேறு போராளி குழுக்களுடனும் நெருக்கமாக உறவாடி, விடுதலைப் புலிகளுக்கு எதிராக திட்டங்களை வகுத்த உன்னி கிருஷ்ணன் தான் கொலைகளின் பின்னணியாக செயல்பட்டிருக்கிறார்.

- தொடரும்

### காணாமல் போன ‘சமூக சீர்திருத்தக் குழு’

கடந்த தி.மு.க. ஆட்சியில் மூடநம்பிக்கைகள், சமூகக் கொடுமைகளான தீண்டாமைகள் போன்றவற்றை ஆராய பகுத்தறிவுப் பேராசிரியர் டாக்டர் நன்னன், தி.க. பொதுச் செயலாளர் கலி.பூங்குன்றன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் ஜி.இராமகிருட்டிணன் உள்ளிட்ட தோழர்களைக் கொண்ட சமூக சீர்திருத்தக் குழு ஒன்றை தி.மு.க. முதல்வர் கலைஞர் கருணாநிதி நியமித்தார். இந்தக் குழு “நான்கைந்து முறை கூடி பேசியதோடு சரி; பிறகு இந்தக் குழு என்னவானதென்றே தெரியவில்லை. அதே போன்று செயல்படக்கூடிய ஒரு குழுவை இந்த ஆட்சி அமைக்க வேண்டும்” என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் ஜி.இராமகிருட்டிணன் வலியுறுத்தியுள்ளார்.

### தமிழகக் கல்வி நிலை

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 74.04 சதவீதம். அய்ந்தாண்டு கல்விக்கு முன்பே 30 சதவீத குழந்தைகள் பள்ளியை விட்டு ஒதுங்கி விடுகிறார்கள். எட்டு ஆண்டுகள் வரை படித்து விட்டு ஒதுங்கி விடும் குழந்தைகள் 50 சதவீதம். தமிழ்நாட்டில் 1951 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் 20 புள்ளி 86 சதவீதம். இப்போது - 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 80.3 சதவீதம். அகில இந்திய சராசரியைவிட தமிழ்நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் அதிகம்.

### ‘கார்ப்பரேட்’ கொள்ளை

இந்தியாவில் அரசுகள் ‘கார்ப்பரேட் நிறுவனங்கள்’ நலனுக்காகவே செயல்பட்டு வருகின்றன. மக்களைப் பற்றி கவலைப்படுவதில்லை. இந்தியாவில் ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையும், இவர்களுக்காகவே தயாரிக்கப்படுகின்றன. இந்தியாவின் 6 நிதிநிலை அறிக்கைகளில் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு தரப்பட்ட வரிச் சலுகைகள் ரூ.21 லட்சம் கோடி. நாட்டின் வளங்களை இந்த நிறுவனங்கள் தாராளமாக சுரண்டி வருகின்றன. ஒரு தேர்தலில் போட்டியிட கோடிக்கணக்கில் பணம் செலவிட வேண்டியிருக்கிறது. கடந்த மே மாதம் நடந்த நான்கு மாநில சட்டசபை தேர்தல்களில் 825 சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இவர்கள் அறிவித்த சொத்துகளின் மதிப்பு ரூ.2,128 கோடி. இதில் 231 பேர், இரண்டாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். 2006-2011 ஆம் ஆண்டில் முதல் தடவை காட்டிய மதிப்பைவிட சராசரியாக இவர்களுக்கு 169 சதவீதம் சொத்து மதிப்பு அதிகரித்துள்ளது. 825 சட்டமன்ற உறுப்பினர்களின் இந்த சொத்துக்களை 825 நிலமற்ற ஏழைகள் அடைய வேண்டுமானால், கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தில் அவர்கள் 2000 ஆண்டுகாலம் வேலை செய்தால்தான் இந்த 825 சட்டமன்ற உறுப்பினர்களின் சொத்துகள் அளவுக்கு எட்ட முடியும். ‘இந்து’ ஏட்டில் சாய்நாத் எழுதிய கட்டுரையில் (ஜூலை 8) இந்த புள்ளி விவரங்களைத் தெரிவித்துள்ளார்.

### ராணுவச் சட்டங்கள்: உள்துறை செயலாளரே குமுறுகிறார்!

வடகிழக்கு மாநிலங்களில் மக்களை மூர்க்கமாக ஒடுக்கி வரும் ராணுவ சிறப்பு அதிகார சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்று அண்மையில் மத்திய உள்துறை செயலாளர் பதவியிலிருந்து ஓய்வுப் பெற்றுள்ள ஜி.கே. பிள்ளை ‘டெக்கான் கிரானிக்கல்’ நாளேட்டுக்கு (ஜூலை 3) அளித்த பேட்டியில் கூறியுள்ளார். இந்த சட்டத்தை நீக்கிட வேண்டும் என்று அரசே நியமித்த நீதிபதி ஜீவன்ரெட்டி தலைமையிலான குழுவின் பரிந்துரையை தாம் முழுமையாக ஆதரிப்பதாக அவர் கூறியுள்ளார். மத்திய அரசின் சில துறைகள் இந்த சட்டத்தை நீக்குவதை விரும்பாததால் இதில் குழப்பம் நீடிக்கிறது என்கிறார் ஜி.கே. பிள்ளை.

வடகிழக்கு மாநிலங்கள் மோசமாக புறக்கணிக்கப்படுவதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். வடகிழக்கு மாநில மக்களின் பிரச்சினைகளை ஊடகங்கள் எழுதுவது இல்லை. மணிப்பூர் மாநிலத்து மக்களுக்கு ரயில் இணைப்பு தருவதாக 1970 ஆம் ஆண்டு ரயில்வே அமைச்சர் அறிவித்து, 41 ஆண்டுகளில் ஒரு கிலோ மீட்டர் ரயில் பாதை மட்டுமே அவர்களுக்கு கிடைத்திருக்கிறது. திரிபுராவில் குமாரசாத் என்ற ஊரில் மட்டும் ரயில் நிலையம் வந்தது. 2010 ஆம் ஆண்டில்தான் தலைநகரான ‘அகர்தலா’வுக்கே மற்றொரு ரயில் நிலையம் வந்திருக்கிறது. சுதந்திரம் பெற்றபோது வடகிழக்கு மாநிலங்களில் 26 விமான நிலையங்கள் இருந்தன. இப்போது அவை 12 ஆக குறைந்து போய்விட்டன.

இந்த நிலையில் ராணுவத்துக்கு விசாரணையில்லாமலே சுட்டுத் தள்ளும் சிறப்பு அதிகாரத்தை வழங்கி ராணுவ ஆட்சியை ‘இந்தியா’ நடத்திக் கொண்டிருப்பதை உள்துறை செயலாளராக இருந்த ஒருவரே வேதனையோடு சுட்டிக்காட்டுகிறார்.

# இனப்படுகொலைக்கு ஏராள சான்றுகள்!

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரும்ப திரும்ப வீசினார்கள் என்று எழுதுகிறார்கள். கடைசியாக மே மாதம் முழுவதும் மருத்துவமனைகள் திறந்த வெளியில் இயங்கி வந்துள்ளன. மரத்தடியில் நடைபெற்ற மருத்துவமனைகள்கூட, இட நெருக்கடியாக இருந்திருக்கிறது. மருத்துவரின் மேசைக்கு கீழே மூன்று நோயாளிகள் படுத்துக் கிடப்பார்கள். கழிப்பறைக்கு செல்லும் வழிகளில் எல்லாம் படுத்துக் கிடப்பார்கள். அவர்களை தாண்டித் தாண்டித்தான் செல்ல வேண்டும் என்று எழுதுகிறார்கள். அதைவிட கொடுமை இந்த மருத்துவமனைகளுக்கு, அரசு மருந்துகளை அனுமதிக்கவில்லை. பிப்ரவரி மாதத்தில் இருந்து, ‘பெனடால்’ என்ற மாத்திரைகளை தவிர வேறு எந்த மருந்தும் அனுமதிக்கவில்லை.

வரதராசன், சத்தியமூர்த்தி, சண்முகராஜா ஆகிய மூன்று மருத்துவர்கள், மே மாதம் 14 ஆம் தேதி வரை அங்கு இருந்திருக்கிறார்கள். மயக்க மருந்து, அறுவை சிகிச்சைக்கான கத்தி முதலியவைகள் வேண்டும் என்று கடிதம் எழுதுகிறார்கள். அவர்களுக்கு அவைகள் எல்லாம் கொடுக்கப்படவே இல்லை. உறுப்பு இழந்த ஐந்தாயிரம் பேருக்கு ஆபரேசன் செய்திருக்கிறார்கள். அதில் மூன்று ஆயிரம் பேருக்கு எப்படி ஆபரேசன் செய்யப்பட்டது என்று அந்த அறிக்கையில் சொல்கிறார்கள்.... “மயக்க மருந்துகள் கொடுக்காமல்தான் உறுப்புகள் அகற்றப்பட்டன. அறுவை சிகிச்சைக்கான கத்திகளை அங்கு அனுமதிக்காத காரணத்தால், பலருக்கு கசாப்பு கத்திகளை பயன்படுத்தித்தான் உறுப்புகள் அகற்றப்பட்டன. இவர்களுக்கு பழைய புடவைகளை வாங்கி கிழித்து கட்டுப் போடப்பட்டன. நரகத்திற்கு ஒத்ததாக அந்த நிலை இருந்தது”...... என்று எழுதுகிறார்கள்.

“இந்தியாவின் கடற்படை உளவுகள் சொல்லியும், பல நேரங்களில் தாக்குதல்கள் நடத்தியும், புலிகளின் ஆயுத வரவைத் தடுத்தது”... என்று எழுதுகிறார்கள்.

அந்த நாட்டில் பனை அபிவிருத்தித் துறை என்று ஒன்று உள்ளது. மக்கள் தங்கள் சொத்தாக பயன்படுத்திய ஐம்பது லட்சம் பனை மரங்களை வெட்டி அழித்திருக்கிறார்கள். போருக்கு பின்னால் முகாம்களில் இருந்த மக்களின் நிலைப் பற்றி சொல்கிறார்கள்....“ஒரு குடும்பத்திற்கு ஒரு நாளைக்கு ஐந்து லிட்டர் தண்ணீர் மட்டுமே வழங்கப்பட்டது. பெண்கள் குளிப்பதற்கு பாதுகாப்போ, தடுப்புகளோ இல்லை. இன்றைக்கு வரைக்கும் அங்கு அதே நிலைதான். பெரிய முகாம்களில் இருந்து சிறிய முகாம்களுக்கு சென்றிருக்கிறார்கள். பெரும்பாலான வீடுகள் இடிக்கப்பட்டிருப்பதாலும், இடியாமல் இருக்கும் வீடுகளில் சிங்கள இராணுவமும், சிங்கள மக்களும் குடியிருப்பதாலும், தமிழர்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்பாமல் இருக்கிறார்கள்”... என்று சொல்லியிருக்கிறார்கள்.

இவைகள்தான் போர்க் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் நடந்திருக்கின்றன என்று சொல்லி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்கிறோம். தமிழக முதல்வர்கூட சொன்னார். இராஜபக்சேவை குற்றவாளி கூண்டில் நிறுத்த வேண்டும். இலங்கைக்கு பொருளாதாரத் தடை கொண்டு வருவோம் என்றெல்லாம் சொன்னார்கள். குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டால் மட்டும் போதுமா? ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் நல்வாழ்வு கிடைத்து விடுமா? பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்னதான் தீர்வு? எனவே அறிக்கையில், “தமிழர்களின் அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றப்பட வேண்டும்” என்று பரிந்துரைத்திருக்கிறார்கள்.

எனவேதான் நாம் சொல்கிறோம், இராசபக்சே மட்டும் போர்க் குற்றவாளி என்று விட்டுவிடாதீர்கள். 1948 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை, ஆறு பெரும் இனக் கலவரங்கள் நடந்திருப்பதாக அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு கலவரத்தின் போதும் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். கோடிக்கணக்கான சொத்துக்கள் சூறையாடப்பட்டிருக்கின்றன என்று எழுதியிருக்கிறார்கள். டப்ளின் அறிக்கையில் இனப்படுகொலை பற்றி இருந்தது. ஆனால் ஐ.நா. அறிக்கையிலோ அது இல்லை. ஆனால் ஒன்று மட்டும் எழுதுகிறார்கள்... “இலங்கை படை முழுவதும் சிங்களவர்கள் மட்டுமேஇருந்தார்கள். இறந்து போனவர்கள் அனைவரும் தமிழ் மக்கள் மட்டுமே”... என்று எழுதுகிறார்கள்.

குறிப்பிட்ட பகுதியில் வாழ்ந்தவர்கள், ஒரே மொழி பேசுபவர்கள், ஒரே இனத்தைச் சார்ந்தவர்கள் தான் இறந்திருக்கிறார்கள். ஆனால், ஐ.நா. அறிக்கையில் இனப்படுகொலை என்று எழுதவில்லை. ஆனால் நாம் வற்புறுத்துகிறோம். அந்த நாட்டையே “இனப்படுகொலை நாடு” என்று உலக நாடுகள் அறிவிக்க வேண்டும். சந்திரிகா, ரணில் விக்ரமசிங்கே உள்ளிட்ட, உயிரோடு இருக்கிற அனைத்து அரச தலைவர்களும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டும். அதுமட்டும் போதாது, உலகில் இது போன்ற குற்றங்கள் நடைபெற்ற போதெல்லாம் ஐ.நா. மன்றம் தலையிட்டிருக்கிறது.

இந்தோனேசியாவில் அங்கிருக்கும் கிழக்கு திமோர் மக்கள் தொடர்ச்சியாக தாக்கப்படுவதாக, ஆயுதம் தாங்கி போராடினார்கள். ஐ.நா. மன்றம் தலையிட்டு, வாக்கெடுப்பு நடத்தியது. 78.5 சதவீத மக்கள் பிரிந்து செல்ல விரும்பினார்கள். அந்த நாட்டைத் தனி நாடாக பிரித்து கொடுத்துவிட்டது ஐ.நா. மன்றம். மாண்டி நிக்ரோ மக்கள், நைஜீரியாவில் இருந்து பிரிந்து செல்ல போராடினார்கள். ஐ.நா. மன்றம் தலையிட்டு வாக்கெடுப்பு நடத்தியது. 55.5 விழுக்காடு மக்கள் பிரிந்து செல்கிறோம் என்று வாக்களித்தார்கள், தனி நாடு அமைத்து கொடுக்கப்பட்டுவிட்டது.

மால்டோவா, தெற்கு சூடான் போன்ற பல நாடுகள் இதேபோல பிரித்து கொடுக்கப்பட்டு விட்டது. ஒவ்வொரு தேசிய இனத்திற்கும், தங்களுக்கான அரசை அமைத்துக் கொள்ள உரிமை உண்டு. எல்லா தேசிய இனங்களுக்கும் சுய நிர்ணய உரிமை உண்டு என்பதுதான், ஐ.நா. மன்றத்தின் மனித உரிமை ஒப்பந்த அறிக்கையில் முதல் வரி. எனவே பாதிக்கப்பட்ட மக்கள் இருக்கும் பகுதிகளுக்கும் சென்று வாக்கெடுப்பு நடத்தும் உரிமை ஐ.நா. மன்றத்திற்கு உண்டு. அதுபோன்ற ஒரு வாக்கெடுப்பை ஈழத் தமிழர்கள் மத்தியிலும் ஒரு பொது வாக்கெடுப்பை நடத்தி, அவர்கள் விரும்பினால் தனி நாடு அமைத்து தர வேண்டும். அதுதான் அவர்கள் உரிமையோடும் பாதுகாப்போடும் சுயமரியாதையோடும் வாழ உதவும்.

மார்டின் நிர்மோலர் என்ற ஜெர்மன் நாட்டு கவிஞர், சிறையில் இருந்து வெளியே வந்து 1946 ஆம் ஆண்டில் ஒரு கவிதை எழுதினார்...“நாஜிப் படையினர் வந்தனர். கம்யூனிஸ்டுகளை பிடிப்பதற்கு, நான் கம்யூனிஸ்ட் இல்லை. எனவே கவலைப்படவில்லை. யூதர்களை கைது செய்தார்கள். நான் கவலைப்படவில்லை. ஏனென்றால் நான் யூதன் இல்லை. தொழில் சங்கவாதிகளை கைது செய்தார்கள். நான் கவலைப்படவில்லை. ஏனென்றால் நான் தொழில் சங்கவாதி இல்லை. இறுதியில் நாஜிகள் என்னை கைது செய்ய வந்தார்கள். எனக்காக பேச யாரும் இல்லை”... என்பதுதான் அந்த உலகப் புகழ்பெற்ற கவிதை.

ஈழத்தில் இப்படிப்பட்ட கொடுமைகள் நடந்திருக்கிறது. அது பக்கத்து நாடு என்று கருதி இருக்காதீர்கள். அப்படிப்பட்ட கொடுமைகள் தமிழ்நாட்டு தமிழர்களுக்கும் வரலாம். காவிரி நீருக்கு, முல்லைப் பெரியாறுக்கு, மத்திய அரசு நமக்காக பேசவில்லை. நமக்காக பேசாத மத்திய அரசு, நமக்கு ஏதேனும் குந்தகம் வந்தாலும் பேசாமல் இருக்கும் நிலைதான் ஏற்படும் என்பதை மனதில் வைத்துக் கொண்டு, நம் மொழி பேசும் இனம் அழிவதை தடுக்கத் தவறிவிட்டோம். மீண்டும் எழுந்து நிற்பதற்காகவாவது கை கொடுப்போம். கை கொடுப்பவர்களுக்கு ஆதரவாக நிற்போம் என்று தன் உரைகளில் குறிப்பிட்டார்.

**தொகுப்பு: கோகுல கண்ணன்**

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# கோடிகளில் புழங்கும் பலே 'கேடி'கள்!

புட்டபர்த்தி சாய்பாபா ஆசிரமப் பொறுப்பை யார் ஏற்றுக் கொள்வது என்ற கேள்விக்கு இன்னும் முழு விடை கிடைக்கவில்லை. ஆனால் சாமிகளின் ஆசிரமத்தில் கோடி, கோடியாகப் பணம் (12 கோடி ரூபாய்), கட்டி, கட்டியாகத் தங்கம் (22 கோடி ரூபாய்), வெள்ளி (1.64 கோடி ரூபாய்) என்று தாராளமாகக் கொட்டிக் கிடக்கிறது. புட்டபர்த்தியிலிருந்து கொண்டு செல்லப்பட்ட பணம் இரண்டு இடங்களில் பிடிபட்டிருக்கிறது. வோல்வோ பேருந்தில் கொண்டு செல்லப்பட்ட 5 கோடி ரூபாய் மற்றும் மற்றொரு வாகனத்தில் 35 லட்சம் ரூபாய் ஆகியவை ரொக்கமாகக் கைப்பற்றப்பட்டுள்ளன. இங்கு மட்டுமல்ல, பெரிய, பெரிய சாமியார்களின் சொத்து விவரங்களைப் (அதிகாரப்பூர்வ) பார்த்தால் மலைப்பூட்டும்.

### மாதா அமிர்தானந்தமயி

இவர் தான் இந்தியாவிலேயே பணக்கார சாமியாரினியாக இருப்பார். மிகவும் குறைவாக மதிப்பிட்டால்கூட அவரது அமிர்தானந்தமயி டிரஸ்டின் சொத்து மதிப்புஆயிரம் கோடி ரூபாயைத் தாண்டும். தனது பதின் பருவ வயதிலேயே சாமியாரினியாக மாறிவிட்ட அமிர்தானந்தமயியின் சொந்த ஊரான வள்ளிக்காவு என்ற தீவில் அவரது ஆசிரமம் அமைக்கப்பட்டிருக்கிறது. அது ஐந்து அடுக்குமாடிக் கட்டிடமாகும். அவரது பக்த கோடிகளிடமிருந்து வரும் நன்கொடைகள் ஒருபுறம். கல்வி நிறுவனங்கள் மூலம் கொள்ளை லாபம். சந்தையிலுள்ள கட்டணங்களையே அவர்களும் வசூலிக்கிறார்கள். இதோடு ஒரு மருத்துவமனை, தொலைக்காட்சி நிறுவனம் என்று பணம் கொட்டுகிறது.

சொத்துகள் : அம்ரிதா விஸ்வ வித்யாபீடக் கல்லூரிகள், அம்ரிதா மருத்துவக் கல்லூரி (கொச்சி), அம்ரிதா பள்ளிகள், தொலைக்காட்சி நிறுவனம்.

### ஆஷாராம் பாபு

இந்திய சாமியார்களில் அதிகமான அளவு சர்ச்சைகளில் அடிபட்டவர் இந்த ஆஷாராம் பாபு. ஏராளமான நில ஆக்கிரமிப்பு புகார்கள் இவரின் ஆசிரமங்கள் மீது உள்ளன. 2009 ம் ஆண்டில், இவருடைய ஆசிரமங்கள் கிட்டத்தட்ட 667 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவிலான நிலங்களை ஆக்கிரமித்துள்ளன என்று நரேந்திர மோடி அரசு சட்டமன்றத்திலேயே அறிவித்தது. ஆனால் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் 350-க்கும் மேற்பட்ட ஆசிரமங்களை ஆஷாராம் பாபு அமைத்துள்ளார். அமெரிக்காவில் நியூஜெர்சி உள்ளிட்ட பல இடங்களில் இந்த ஆசிரமங்கள் உள்ளன.

### ஓஷோ

மத்தியப் பிரதேசத்தின் குச்வாடா என்ற இடத்தில் டிசம்பர் 11,1931 அன்று பிறந்த ஓசோவின் இயற்பெயர் சந்திர மோகன் ஜெயின். சோசலிசத்திற்கு எதிரான கருத்துகளைத் தெரிவித்தவர். அமெரிக்காவின் ஓரேகான் மாகாணத்தில் ரஜ்னீஷ்புரம் என்ற இடத்தை அவர் அமைத்தார். ஆனால் நான்கு ஆண்டுகள் கழித்து அவர் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டார். 1990 ஆம் ஆண்டில் அவர் மறைந்தார். கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பிலான சொத்து அவரது அமைப்பிற்கு இருந்தது.

### ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்

151 நாடுகளில் 30 கோடி பக்தர்கள் அவருக்கு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பொதுவாக, சாமியார்கள் காவி உடுத்துவதை வாடிக்கையாகக் கொள்வார்கள். இவர் மட்டும் வெள்ளை உடையை உடுத்துகிறார். 1980 களின் துவக்கம் வரை அவர் யார் என்றே தெரியாது. கடந்த முப்பது ஆண்டுகளில் பெரும் வளர்ச்சி கண்டுள்ளார். ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் மதிப்பில் அவரது சொத்து இருக்கும் என்று கூறப்படுகிறது.

தமிழகத்தின் பாபநாசத்தில் அவர் பிறந்தார். பெங்களூருவில் வாழும் கலை மையத்தை அவர் அமைத்தார். அவரது மையம் சுற்றுலாத் தளங்களில் ஒன்றாக உருவானது. பெங்களூரு - திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் 15 ஏக்கர் நிலத்தை ரவிசங்கரின் ஆசிரமம் கபளீகரம் செய்ததாக வெளிநாடு வாழ் இந்தியரான பால் குற்றம் சாட்டினார். ஆனால் அந்த சர்ச்சை மறைக்கப்பட்டது.

சொத்துகள்: பெங்களூருவில் உள்ள வாழும் கலை மையம், ஸ்ரீஸ்ரீ சங்கர வித்யா மந்திர் டிரஸ்டு, பி.யு. கல்லூரி (பெங்களூரு), ஸ்ரீஸ்ரீ ஊடகக் கல்வி மையம் (பெங்களூர்), ஸ்ரீஸ்ரீ பல்கலைக்கழகம், வாழ்க்கைக் கலை சுகாதார மற்றும் கல்வி டிரஸ்டு (அமெரிக்கா) மற்றும் இதர சொத்துக்கள்.

### பாபா ராம்தேவ்

ராம் கிருஷ்ண யாதவ் என்ற இயற் பெயரைக் கொண்ட ராம்தேவின் சொத்து மதிப்பு 1,100 கோடி ரூபாய் என்று சொல்லப்படுகிறது. 15 ஆண்டுகளுக்கு முன்பாக ஹரித்துவாரின் தெருக்களில் அலைந்து திரிந்து கொண்டிருந்த இவர், ஏழாம் வகுப்பு வரைதான் பள்ளிக்கூடத்தில் பயின்றார். பின்னர் சமஸ்கிருதம் மற்றும் யோகா பயின்றார். பின்னர், உலக வாழ்க்கையைத் துறந்து சந்நியாசம் மேற்கொள்வதாக அறிவித்தார். பின்னர், திவ்யா யோக மந்திர் டிரஸ்டு ஒன்றைத் துவங்கினார்.

சொத்துக்கள்: 36க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் டிரஸ்டுக்கு சொந்தமாக உள்ளன. இவையெல்லாம் வெறும் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்ட சொத்துக் கணக்குகளாகும்.

### மகரிஷி மகேஷ் யோகி

1970களில் மிகவும் பிரபலமான இவர் மத்தியப் பிரதேச மாநிலம் ஜபல்பூரில் பிறந்தவர். மகேஷ் பிரசாத் வர்மா என்பது அவரது இயற்பெயராகும். உலகின் முக்கியமான நபர்கள் பலருக்கு அவர் ஆன்மீக ஆலோசகராக இருந்தார். 2008 ஆம் ஆண்டில் அவர் இறந்தபோது அவரது சொத்து மதிப்பு பத்தாயிரம் கோடி ரூபாயிலிருந்து 25 ஆயிரம் கோடி ரூபாய் வரையிருக்கும் என்று மதிப்பிடப்பட்டது. ஏராளமான நிலங்கள் அவரது அமைப்பின் வசம் இருந்தன.

**'தீக்கதிர்' 22.6.2011**

### வானொலி நிலையம் பெயரில் தமிழ் இல்லையா? கோவையில் கழகம் போராட்டம்

கோவையில் இயங்கும் அகில இந்திய வானொலி, தமிழ்நாட்டில் தமிழ் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வந்தாலும் அதன் பெயர்ப் பலகையில் தமிழ் இல்லை. ஆங்கிலம், இந்தி மொழியில் மட்டுமே இருக்கிறது. இதை எதிர்த்து தமிழில் பெயரை எழுதுமாறு வலியுறுத்தி கோவை மாவட்ட பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தலைமையில் போராட்டம் நடைபெறுகிறது.

### இரா. வடிவேல் – மா. ஃபிளாரன்ஸ் இல்லத் திறப்பு விழா



ஈரோடு மாவட்டம் அம்மாபேட்டை பெரியார் திராவிடர் கழகத் தோழர் இரா. வடிவேல் - மா. ஃபிளாரன்ஸ் இணையர் புதிதாக கட்டியுள்ள 'ராசி இல்ல'த்தை 17.7.2011 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்தார். விழா மகிழ்வாக 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழுக்கு ரூ.2000 வழங்கினார்.

சேலம் நகரக் கழகத் தோழர் இரா.வீரமணி, தனது தாயார் சாரதா அம்மையாரின் 11 ஆம் ஆண்டு நினைவு நாள் 8.7.2011 நினைவாக கழக ஏட்டிற்கு ரூ.1000/- வழங்கினார்.

சேலம் மாவட்டம் நங்கவள்ளி கழகத் தோழர் பொ.கிருட்டிணன் - லலிதா ஆகியோரது மகள் தமிழ்ச் செல்வியின் 11 ஆவது பிறந்த நாள் 12.7.2011 மகிழ்வாக கழக ஏட்டிற்கு ரூ.500 வழங்கினர்.

(நன்றியுடன் பெற்றுக் கொண் டோம் - ஆர்)

4 ஆம் பக்கத் தொடர்ச்சி

குரலாக மாற்ற வேண்டும் என்று வலியுறுத்தினர். தமிழ்நாட்டில் ஈழத் தமிழர் விடுதலைக்கான இயக்கத்தை முன்னெடுப்பதில் காவல்துறையின் தடைகள் இருக்காது என்ற கருத்தையும் முன் வைத்தனர். நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தோழமை மய்யத்தின் அமைப்பாளர் பேராசிரியர் சரசுவதி தலைமையேற்று உரையாற்றி, கருத்தரங்க நிகழ்வுகளை ஒருங்கிணைத்தார். வழக்கறிஞர் பாண்டிமாதேவி வரவேற்புரையாற்ற, பெரியார் திராவிடர் கழக தென்சென்னை மாவட்ட தலைவர் தபசி குமரன் நன்றி கூறினார். பாவாணர் நூலக அரங்கம் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது.


கருத்தரங்கின் தொடக்கத்தில் ஈழப் போரில் கணவர்களை இழந்த பெண்களின் அவலங்களை விளக்கும் 'யாழினி என்ற 30 நிமிடப் படம் திரையிடப்பட்டது. ஆஸ்திரேலிய வாழ் தமிழர் ராஜ் தயாரித்து ஆனந்த் இயக்கியுள்ள இந்தப் படம் கண்களை ஈரமாக்கியது. உலகப் போரில் இட்லர் நடத்திய படுகொலைகளை விளக்கும் ஏராளமான படங்கள் இப்போது வரை வந்து கொண்டே இருப்பதுபோல் தமிழர் இனப் படுகொலைகளை பல்வேறு கோணங்களில் சித்தரிக்கும் ஏராளமான படங்கள் வரவேண்டும் என்று படத் தயாரிப்பாளரும், இயக்குநரும் தங்களது அறிமுக உரையில் குறிப்பிட்டனர்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 21st July 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | ஜூலை 28, 2011 | புரட்சி 10 | முழக்கம் 28 | விலை: ரூ.2.50


## ‘தமிழ்நாடு மாணவர் கழக’த்தின் பரப்புரை இயக்கம்

# வெற்றி நடைபோடுகிறது

பெரியார் திராவிடர் கழகத்தின் மாணவர் பிரிவான ‘தமிழ்நாடு மாணவர் கழகம்’ தமிழகம் முழுதும் பள்ளி கல்லூரி வாயில்களில் கல்வி உரிமைகளுக்கான கோரிக்கைகளை வலியுறுத்தியும், மந்திரமா தந்திரமா நிகழ்ச்சிகள் வழியாக மூடநம்பிக்கைகளை எதிர்த்தும் பரப்புரை இயக்கத்தை தொடங்கி நடத்தி வருகிறது. மாணவர்கள் பெரும் திரளாகத் திரண்டு, கருத்துகளைக் கேட்டு வருகிறார்கள். கழக வெளியீடு களும் விற்பனை செய்யப்படுகின்றன. எழுச்சி நடைபோட்டு வரும் பரப்புரை இயக்கத்தின் முதல் கட்டப் பயணம் பற்றிய செய்தித் தொகுப்பு:

18.07.2011 பகல் 12 மணி அளவில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் துவங்கியது. சமச்சீர் கல்விக்கு ஆதரவாக தீர்ப்பு வந்த செய்தியை பேராசிரியர்கள், மாணவர்கள் தோழர்களுடன் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டனர். பெருந்திரளாக மாணவர் களும், பேராசிரியர்களும் கலந்து கொண்டனர்.

மாலை 4 மணியளவில் தில்லை நந்தனார் மேல் நிலைப் பள்ளி வாயிலில் பரப்புரை நடைபெற்றது. மாணவர்களும் பொது மக்களும் திரளாக கலந்து கொண்டனர். இரண்டு இடங்களிலும் காவை. இளவரசன், புதியவன் உரையாற்றினர். 17 ஆம் தேதி இரவு, தோழர்கள் தங்குவதற்கும், 18 ஆம் தேதி காலை உணவும் முதுபெரும் சுயமரியாதை வீரர் சிதம்பரம் கு. கிருட்டிணசாமி பேரன் சித்தார்த்தன் ஏற்பாடு செய்தார். மதிய உணவு சீர்காழி நகர செயலாளர் பிரபாகரன் ஏற்பாடு செய்திருந்தார். சிதம்பரம் பயணம் முடிந்து இரவு மயிலாடுதுறையில் கழகத் தோழர் விஜியின் புத்தக சோலையில் தங்கினர்.

19.07.2011 மதியம் 12 மணியளவில் பூம்புகார் அரசு கலைக் கல்லூரியில் பரப்புரை நடைபெற்றது. மாணவர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

பகல் 1.30 மணியளவில் ஏ.வி.சி. கலைக் கல்லூரியில் பரப்புரை நடைபெற்றது. மாணவர்கள் இயக்கத்தில் சேர்ந்து பணியாற்ற மாணவர்கள் முகவரிகளை பதிவு செய்தனர்.



மயிலாடுதுறை நகராட்சி மேனிலைப் பள்ளி முன்

மாலை 4.30 மணியளவில் மயிலாடுதுறை நகராட்சி மேனிலைப் பள்ளியில் நிகழ்ச்சி நடைபெற்றது. மாணவர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் என 500-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். பயண செலவுக்காக தோழர்கள் உண்டியல் ஏந்தி மக்களிடையே சென்றபோது தமிழகத்தில் பெரியார் திராவிடர் கழகம் தான் சிறப்பாக செயல்படுகிற அமைப்பு என்று பாராட் டினர். இரண்டு நாள் நிகழ்ச்சியில் மயிலாடுதுறை தோழர்கள் மகேஷ் (மாவட்ட செயலாளர்), இளையராசா (மாவட்ட அமைப்பாளர்), ரமேஷ் (மாவட்ட இணை செயலாளர்), அன்பரசன், சங்கர் (நகரசெயலாளர்), பிரபாகரன் (சீர்காழி நகரத் தலைவர்), தமிழ்நாடு மாணவர் கழகத்தைச் சேர்ந்த செயராஜ், நரசிம்மன் ஆகியோர் கலந்து கொண்டனர். மயிலாடுதுறை தோழர்கள் உணவு மற்றும் தங்குமிட ஏற்பாடுகளை சிறப்பாக செய்தனர்.

### குடந்தை - தஞ்சையில்

20.07.2011 காலை 8.30 மணியளவில் குடந்தை அரசு கலைக் கல்லூரியில் நிகழ்ச்சி நடைபெற்றது. மாணவர்களும், பொது மக்களும் திரளாக கலந்து கொண்டனர். சில மாணவர்கள் அமைப்பில் சேர விருப்பம் தெரிவித்தனர். கழக நூல்கள் விற்பனை யாயின. கழக ஆதரவாளர் வினோத் ரூ.900 நன்கொடை வழங்கினார். தஞ்சை மாவட்ட அமைப்பாளர் சோலை மாரியப்பன் கலந்து கொண்டார்.

பகல் 1 மணியளவில் மன்னர் சரபோஜி கலைக் கல்லூரி வாயிலில் நடைபெற்ற கூட்டத்திற்கு மாணவர்கள், பேராசிரியர்கள் திரளாக கலந்து கொண்டனர். மாலை 4.30 மணியளவில் கரந்தை உமாமகேசுவரனார் தமிழ் கல்லூரி வாயிலில் பள்ளி மாணவர்களுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும் தனித் தனியாக மாலை 6.30 மணி வரை நிகழ்ச்சி நடைபெற்றது. பள்ளி, கல்லூரி மாணவர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர். தஞ்சை நகரத்தில் நடைபெற்ற இரண்டு நிகழ்விலும் தமிழ்நாடு மாணவர் கழகத்தைச் சேர்ந்த ராமர், ஆனந்தகுமார் மற்றும் தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டனர். சோலை. மாரியப்பன், மே.க. கிட்டு ஆகியோர் பங்கேற்றனர்.

### திருச்சியில்

21.07.2011 காலை 8 மணியளவில் திருச்சி அண்ணா பல்கலைக்கழகம் முன்பு தோழர்கள் பரப்புரை பயணத்தின் நோக்கத்தை விளக்கிய துண்டறிக்கை களை வழங்கினர். 10 மணியளவில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் வாயிலில் நடைபெற்ற பரப்புரை கூட்டத்தில் மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமை கட்சியின் மாநில பொறுப்பாளர் துரை. சித்தார்த்தன் வாழ்த்துரை வழங்கினார். பொது

4 ஆம் பக்கம்

## மாணவர் கழக கோரிக்கைகள்

- சமச்சீர் கல்வியை நடப்பு ஆண்டிலிருந்தே அமுல்படுத்து.
- 6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தை (RTE 2009) உடனடியாக முழுமையாக அமுல்படுத்து!
- தேசிய உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி ஆணையத்தை (NCHER) இழுத்து மூடு!
- பொறியியல், மருத்துவம், வணிக மேலாண்மை படிப்புகளுக்கு அகில இந்திய அளவிலோ மாநில அளவிலோ பொது நுழைவுத் தேர்வுகளை நடத்தாதே!
- சட்டக் கல்லூரி மாணவர்களுக்கான தேசிய அளவிலான தகுதித் தேர்வை ரத்து செய்!
- மேல்நிலைக் கல்வியில் இந்தியத் துணைக் கண்டம் முழுவதுமான பொதுப் பாடத் திட்டம் என்ற பெயரில் இந்தி - பார்ப்பனர் - வடவர் ஆதிக்கங்களை நிலைநிறுத்தத் திட்டமிடாதே!
- தாய்மொழி வழிக் கல்வியை வலியுறுத்தும் பொதுப்பள்ளி முறையை (Common School System) அமுல்படுத்து! அதற்கு முன்னோடியாக சமச்சீர் கல்வித் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்து!
- மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டு உரிமை பெறுவதைத் தடை செய்யும் க்ரீமிலேயர் முறையை ரத்து செய்!
- பொதுப் போட்டியில் வென்று வரும் SC, ST, MBC, OBC மாணவர்களின் எண்ணிக்கையை இடஒதுக்கீட்டுக் கணக்கில் சேர்க்காதே!
- கல்வி அமைப்புகளை மதத்திலிருந்து விடுவித்து மதச் சார்பற்ற சூழலில் இயங்கச் செய்!

– இக்கோரிக்கைகள் அடங்கிய விரிவான துண்டறிக்கையை கழக மாணவர்கள் - பள்ளி, கல்லூரி மாணவர்களிடம் வழங்கி வருகின்றனர்.

## தமிழக மீனவர்களைக் கொல்ல தமிழகத்திலேயே பயிற்சியா?

# குன்னூரிலிருந்து சிங்கள ராணுவம் ஓட்டம்!

தமிழக மீனவர்களைக் கொன்று குவிக்கும் இராஜபக்சேவின் ராணுவத்துக்கு இந்தியா ராணுவப் பயிற்சி அளித்து வருகிறது. குன்னூர் வெலிங்டனில் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ராணுவப் பயிற்சி முகாமுக்கு பயிற்சி பெற சிங்கள ராணுவம் 22 ஆம் தேதி வர இருக்கும் சேதி, 21 ஆம் தேதி கிடைத்தவுடன் கோவை மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் 22 ஆம் தேதி சிங்கள ராணுவத்தை திருப்பி அனுப்பக் கோரி முற்றுகைப் போராட்டத்தை அறிவித்தது. நாம் தமிழர், விடுதலை சிறுத்தை கட்சியினரும் போராட்ட அறிவிப்பை வெளியிட்டனர். அதனைத் தொடர்ந்து ராணுவப் பயிற்சியகம் செல்லும் வழிகளை மறித்து, போலீசார், ஆயுதப் படையினர் குவிக்கப்பட்டனர். ராணுவ பயிற்சியகத்துக்கு செல்லும் வழிகள் அனைத்திலும் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

போலீசார், கெடுபிடிகளை மீறி கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தலைமையில் பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் குன்னூர் லெவல் கிராசிங் பகுதியில் மறியலில் ஈடுபட்டனர். அதே பகுதியில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் சகாதேவன் தலைமையில் அக்கட்சியினர் மறியலில் ஈடுபட்டனர். குன்னூர்-ஊட்டி சாலையிலுள்ள 'பிளாக் பிரிட்ஜ்' பகுதியில் கோவை, திருப்பூர், நீலகிரி மாவட்ட நாம் தமிழர் கட்சியினர் மறியலில் ஈடுபட்டனர். அனைவரும் கைது செய்யப்பட்டனர். கழகத் தோழர்கள் 125 பேர் கைதானார்கள்.

'தமிழக மீனவர்களை கொன்று குவிக்க சிங்கள ராணுவத்துக்கு தமிழ்நாட்டில் பயிற்சியா?' என்ற முழக்கத்தை முன் வைத்து, மறியல் போராட்டம் நடந்தது. போராட்டம் வலுத்ததைத் தொடர்ந்து சிங்கள ராணுவத்தினர் 25 பேரும் பயிற்சிகளை நிறுத்திக் கொண்டு சத்திய மங்கலம், தாளவாடி வழியாக, மைசூருக்குப் புறப்பட்டனர். இப்போது இந்தியப் பார்ப்பன ஆட்சி, மைசூரில் சிங்களர்களுக்கு பயிற்சி அளிக்கிறது.



கழகப் போராட்டத்தில் ஈரோடு இரத்தினசாமி, கோவை கழகப் பொறுப்பாளர்கள் கோபால், கலங்கல் வேலு, இராமசாமி, சண்முகசுந்தரம், நாகராசு, இரஞ்சித், வழக்கறிஞர் பன்னீர்செல்வம், திருப்பூர் கழகப் பொறுப்பாளர்கள் முகில்ராசு, அகிலன், ஈரோடு சதீஷ், திருச்செங்கோடு வைரவன், அன்னூர் தோழர்கள் ஈசுவரன், ஜோதிராம், மேட்டுப்பாளையம் சந்திரசேகர் உள்ளிட்ட கழகத்தினர் மற்றும் அரசு கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர்.

## ஆர்.எஸ்.எஸ். படைத்த நகைச்சுவை விருந்து

சிங்கள ராணுவப் பயிற்சிக்கு எதிராக பேராட்டம் நடத்திய பெரியார் திராவிடர் கழகத் தோழர்களை கைது செய்து, குன்னூர் காவல் துறையினர் அருகே உள்ள விநாயகர் கோயில் மண்டபத்தில் வைத்தனர். உடனே அப்பகுதி ஆர்.எஸ்.எஸ்.காரர்கள், கடவுள் மறுப்பாளர்களை கோயில் மண்டபத்தில் வைக்கக் கூடாது என்றும், உடனே வெளியேற்ற வேண்டும் என்றும் மண்டபத்துக்கு எதிரே ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்.எஸ்.எஸ்.காரர்களின் இந்தப் போராட்டம் கழகத்தினருக்கு நகைச்சுவை விருந்தாக இருந்தது.

எங்களை வெளியேற்றக் கோரி விநாயகனிடம் கோரிக்கை வைக்காமல், காவல்துறையிடம் கோரிக்கை வைக்கிறார்களே; விநாயகன் சக்தி மீது அவர்களுக்கே நம்பிக்கை இல்லையா? என்று தோழர்கள் கேட்டனர். ஆர்.எஸ்.எஸ். போராட்டத்தால் கழகத் தோழர்கள் 8 மணிக்கே முன் கூட்டியே விடுதலை செய்யப்பட்டுவிட்டனர். இதுவே ஆர்.எஸ்.எஸ். போராட்டத்துக்கு கிடைத்த 'பயன்'.

## தமிழ்நாடு மாணவர் கழக 2 ஆம் கட்ட பரப்புரை இயக்கம்: பொள்ளாச்சியில் தொடங்கியது

தமிழ்நாடு மாணவர் கழகத்தின் இரண்டாம் கட்ட பரப்புரை இயக்கம் ஜூலை 25 ஆம் தேதி பொள்ளாச்சியில் தொடங்கியது. பயணத்துக்கு தமிழ்நாடு மாணவர் கழகத்தின் மாநில அமைப்பாளர் ந.பன்னீர்செல்வம் தலைமை தாங்குகிறார். மடத்துக்குளம் மோகன் - மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி நடத்துகிறார். தோழர்கள் கா.சு. நாகராசு, வெள்ளமடை நாகராசு கல்வி உரிமை கோரிக்ககளை வலியுறுத்தி பேசுகிறார்கள்.

**பயணத் திட்டம்:**

**25.07.2011 – திங்கள்**

பொள்ளாச்சி - தொடக்கம்
ஆனைமலை
ந.மூ. சுங்கம்
பொள்ளாச்சி - தங்கல்

**26.07.11 – செவ்வாய்**

உடுமலை - தொடக்கம்
மடத்துக்குளம்
காரத்தொழுவு, தாராபுரம்
திருப்பூர் - தங்கல்

**27.07.11 புதன்**

திருப்பூர் - தொடக்கம்
காங்கயம்
பொங்கலூர்
பல்லடம் - தங்கல்

**28.07.11 – வியாழன்**

பல்லடம் - தொடக்கம்
சூலூர்
கோவை தங்கல்

**29.07.11 வெள்ளி**

கோவை - தொடக்கம்
கோவை - தங்கல்

**01.08.11 – திங்கள்**

கோவை - தொடக்கம்
துடியலூர்,
பெரியநாயக்கம்பாளையம்
மேட்டுப்பாளையம் -தங்கல்

**02.08.11 – செவ்வாய்**

மேட்டுப்பாளையம் -தொடக்கம்
அன்னூர், அவனாசி
கோபி - தங்கல்

**03.08.11 – புதன்**

கோபி - தொடக்கம்
அத்தாணி, அந்தியூர்
மேட்டூர் - தங்கல்

**04.08.11 – வியாழன்**

மேட்டூர் - தொடக்கம்
அம்மாபேட்டை,
பவானி
ஈரோடு - தங்கல்

**05.08.11 – வெள்ளி**

ஈரோடு - தொடக்கம்
பெருந்துறை, சித்தோடு
திருச்செங்கோடு - தங்கல்

**06.08.11 – சனி**

நாமக்கல் -தொடக்கம்
ராசிபுரம், சேலம் -முடிவு.

## சென்னையில் சுவரெழுத்து சுப்பையா நூல் அறிமுகக் கூட்டம்

'சுவரெழுத்து சுப்பையா சிந்தனைப் பொறிகள் நூல்' அறிமுகக் கூட்டம் 5.8.2011 மாலை 5 மணியளவில் சென்னை தியாகராயர் நகர் செ.தெய்வ நாயகம் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெறுகிறது. இனமான நடிகர் சத்தியராசு நூல் அறிமுக உரையாற்றுகிறார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் கு.இராமகிருட்டிணன், இயக்குநர் மணிவண்ணன், ஆனூர் ஜெகதீசன், வழக்கறிஞர்கள் செ. துரைசாமி, இளங்கோவன், குமாரதேவன் உரையாற்றுகிறார்கள். தலைமை: விடுதலை இராசேந்திரன்.

## ஆக.6-ல் சேலத்தில் கல்வி உரிமை மீட்பு மாநாடு

தமிழ்நாடு மாணவர் கழகத்தின் பரப்புரை இயக்கம் சேலத்தில் நிறைவு பெறுகிறது. 6.8.2011 அன்று தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் சேலம் விஜயராகவாச்சாரியார் அரங்கில் கல்வி உரிமை மீட்பு மாநாடு நடைபெறுகிறது. காலை 10 மணிக்கு மாநாட்டை பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தொடங்கி வைக்கிறார். மாணவ மாணவிகள் பல்வேறு தலைப்புகளில் உரை நிகழ்த்த, பிரபா கல்விமணி சிறப்புரையாற்றுகிறார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நிறைவுரையாற்றுகிறார்.

பிற்பகல் 2 மணியளவில் மாநில அமைப்பாளர் பன்னீர்செல்வம் தலைமையில் மாணவர் மாணவிகள் உரையாற்றுகிறார்கள். ஹென்றி டிபன் (மக்கள் கண்காணிப்பகம்) சிறப்புரையாற்ற, கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றுகிறார்.

# பிரேமதாசா கொலையில் மறைந்து நிற்கும் கரங்கள்! [7]

**ராஜீவ் சர்மாவின் ‘புலிகளுக்கு அப்பால்....’ நூலுக்கு மறுப்பு தெரிவித்து, சென்னை (ஜூன் 4) வெளியீட்டு விழாவில் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரையின் விரிவாக்கம்**

இந்திய ராணுவம் ஈழப் பிரதேசத்திலிருந்து வெளியேறுவதற்கு இலங்கை அதிபர் பிரேமதாசா கெடு விதித்ததால் ஆத்திரத்தின் எல்லைக்குச் சென்ற ராஜீவ் காந்தி - பிரேமதாசாவுக்கு எதிராக உளவுத் துறை வழியாகமேற்கொண்ட முயற்சிகள் ஏராளம். விடுதலைப் புலிகள் இயக்கத்திடமே பிரேமதாசாவை எதிர்க்க சமரசத் தூது அனுப்பியதை முரசொலி மாறன் தந்த பேட்டியிலிருந்தே எடுத்துக் காட்டினோம். பிரேமதாசாவுக்கு எதிரான அரசியல் நெருக்கடிகளையும் உளவு நிறுவனம் உருவாக்கியது. பிரேமதாசாவின் எதிர்கட்சியான இலங்கை சுதந்திரக் கட்சியைப் பயன்படுத்தி பிரேமதாசா ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சிகளை இந்திய உளவு நிறுவனம் மேற்கொண்டது. இதை விடுதலைப் புலிகள் இயக்கமே மக்களிடம் கூறி எச்சரித்தது. மக்களுக்காக ‘புலிகளின் குரல்’ என்ற வானொலி சேவையை விடுதலைப் புலிகள் நடத்தி வந்தனர். இதைக்கூட புலிகளின் ‘ரகசிய வானொலி’ என்கிறார் ராஜீவ் சர்மா. அது தமிழீழ மக்களுக்காக நடத்திய வெளிப்படையான வானொலி சேவை. அந்த வானொலியில் விடுதலைப் புலிகள் அரசியல் பிரிவு பொறுப்பாளர் யோகரத்தினம் என்ற யோகி, இயக்க சார்பாக நாட்டு மக்களுக்கு ஒரு அறிவிப்பை வெளியிட்டார்.

*“பிரேமதாசா அரசாங்கத்தை தூக்கி எறிவதற்காக, இந்திய அரசாங்கம் இலங்கை சுதந்திரக் கட்சியுடன் கைகோர்த்துக் கொண்டுள்ளது. காமினி திச நாயகே மற்றும் அவரது குழுவினரைப் பயன்படுத்தி, பிரேமதாசா ஆட்சியைக் கவிழ்க்க திட்டம் தீட்டினர். ஆனால், அதில் தோல்வி அடைந்து விட்டனர். இப்போது விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே நடக்கும் பேச்சு வார்த்தையை குலைக்கும் சதியில் இறங்கியுள்ளனர். இதற்கு, இந்தியாவில் விடுதலைப் புலிகள் மீது கொண்டு வந்துள்ள தடையைக் காட்டி, பேச்சு வார்த்தையை குலைக்க முயற்சிக்கிறார்கள்”* - என்று 1992 ஆம் ஆண்டு மே 24 ஆம் தேதி புலிகளின் வானொலி, நாட்டு மக்களுக்கு அறிவித்தது. இந்தத் தகவலை ராஜீவ் சர்மாவும் தனது நூலில் பதிவு செய்துள்ளார்.

அதே வேளையில், பிரேமதாசா கட்சியிலிருந்தே அவரது ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக இந்திய உளவுத் துறை ஆட்களை தயாரித்தது! பிரேமதாசா ஆட்சியில் ராணுவ அமைச்சராக இருந்தவர் ரஞ்சன் விஜயரத்னே. பிரேமதாசாவின் அய்க்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருந்தவர். ஆனால் பிரேமதாசாவுக்கு அரசியல் எதிரி. அதிபர் பதவிக்கு அவர் குறி வைத்துக் கொண்டிருந்தார். பிரேமதாசா அமைச்சரவையில் ராணுவ அமைச்சராக இருந்தார். எனவே, ராணுவம் விஜயரத்னே கட்டுப்பாட்டில் இருந்தது. அதைப் பயன்படுத்தி பிரேமதாசாவுக்கு எதிராக ராணுவப் புரட்சி ஒன்றை நடத்தி, பிரேமதாசாவை வீழ்த்த உளவுத் துறை திட்டங்களை தயாரித்தது. விஜயரத்னேவுக்கு அதிபர் பதவிக்கு முடிசூட்ட வலைவிரித்தார்கள். அந்த திட்டத் தின் அடிப்படையில் அதிபர் பிரேமதாசாவுக்கு தெரியாமலேயே ரகசியமாக தரைப்படை, கப்பல் படை மற்றும் விமானப் படை என்ற முப்படை தளபதிகளின் கூட்டத்தை 1991 மார்ச் 1 இல் விஜயரத்னே கூட்டினார்.

இந்த ரகசிய சதித் திட்டம் - பிரேமதாசாவுக்கு தெரிந்து விட்டது. ரகசிய கூட்டம் நடந்து கொண்டிருக்கும் போதே முன்னறிவிப்பின்றி பிரேமதாசா, கூட்டத்துக்குள் திடீர் என்று நுழைந்தார். உள்ளே இருந்த அனைவருக்கும் அதிர்ச்சி. பிரேமதாசா எதுவும் பேசாமல் அமைதியாக, சிறிது நேரம் இருந்துவிட்டு, மவுனத்தையே எச்சரிக்கையாக தந்துவிட்டு வெளியேறினார். கூட்டம் கலைக்கப்பட்டது. அடுத்தநாள் காலையே விஜயரத்னே காரில் அலுவலகம் சென்றபோது அவரது காரில் குண்டு வெடித்தது. அது குண்டு துளைக்காத அரசாங்க கார். ஆனாலும் குண்டு வெடித்தது. விஜயரத்னா கொல்லப்பட்டார். இந்த கொலைக்கும் விடுதலைப் புலிகள் மீதே பழி போடுகிறார், ராஜிவ் சர்மா! நியாயமாக பிரேமதாசா தனக்கு எதிராக திட்டமிட்டிருந்த ராணுவப் புரட்சியை ஒடுக்க, அதற்கு சதி செய்தவரை தீர்த்துக் கட்டினார் என்பது கொழும்பு ஊடகங்களே வெளியிட்ட செய்தி. அதை ஏற்றுக் கொள்வதற்கான நியாயமான காரணங்களும் இருக்கின்றன. ஆனால் பழி, ஆதாரம் இல்லாமல் புலிகள் மீதே போடு வதில் என்ன நியாயம்? விடுதலைப் புலிகள் லண்டன் தலைமை அலுவலகத்திலிருந்து தலைமையக பொறுப்பாளர் கிட்டு, புலிகளுக்கு இதில் தொடர்பில்லை என்று மறுத்து அறிக்கையும் விட்டார்.

இலங்கையில் காவல்துறை உயர் அதிகாரி தலைமையில் அதிகாரம் கொண்ட குழு ஒன்று செயல்பட்டது. இதன் தலைவராக இருந்தவரின் பெயர் பிரேமதாசா உருகம்பொல என்பதாகும். 34 ஆண்டு அனுபவம் பெற்ற காவல்துறையின் உயர் அதிகாரி. இவர், இந்திய உளவு நிறுவனத்துக்கு ஆதரவாக பிரேமதாசாவுக்கு எதிராக களமிறக்கப்பட்டார். இந்தியாவிலிருந்து வெளிவரும் ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேட்டை இந்திய உளவுத் துறைப் பயன்படுத்தி, பிரேமதாசா வுக்கு எதிரான பேட்டி ஒன்றை அவரிடமிருந்து பெற்று பிரேமதாசாவுக்கு நெருக்கடியை உருவாக் கினார்கள். ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ சார்பில் பேட்டி கண்டவர் - ஏதோ அப்பத்திரிகையின் செய்தியாளரோ, உதவி ஆசிரியரோ அல்ல. அந்த ஏட்டின் நிர்வாக இயக்குனராக இருந்த நலபம் என்பவரே பேட்டி எடுத்தார். விடுதலைப் புலிகளுடன் பிரேம தாசா பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது என்றும், ராணுவ அமைச்சர் விஜயரத்னே கொலைக்கு விசாரணை ஆணையம் நியமிக்க வேண்டும் என்றும் பிரேமதாசாவுக்கு எதிராக இந்தியாவிலிருந்து வெளிவரும் அந்த ஏட்டுக்கு அவர் பேட்டி அளித்தார்.

இந்த அதிகாரி, இந்திய உளவு நிறுவனததின் சதி வலையில் வீழ்ந்ததைத் தெரிந்து கொண்ட பிரேமதாசா, அவரை உடனே பதவியிலிருந்து நீக்கினார். தலைமறைவாகிவிட்ட அவர் ரகசிய இடத்திலிருந்து இந்தப் பேட்டியை தந்தார். அவர் ரகசியமாக தங்கியிருந்த இடம் இந்தியாவின் ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேட்டுக்கு எப்படி தெரிந்திருக்க முடியும்? இந்திய உளவு நிறுவனத்தின் தொடர்பின்றி அவர், ரகசிய இடத்திற்குப் போய் பேட்டி எடுத்திருக்க முடியுமா?

பிரேமதாசா விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தையை முறித்துக் கொண்டு பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று இந்திய அரசு பிரேமதாவிடம் நிர்ப்பந்தம் தந்தது. பிரேமதாசாவோ அதை ஏற்கவில்லை. ஈழத் தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்ற உண்மையான கவலை ராஜீவ் காந்திக்கு இருந்திருந்தால், பேச்சு வார்த்தை முயற்சிகளை நியாயமாக ஆதரித்திருக்க வேண்டாமா? இப்படி சீர்குலைப்பது நியாயம் தானா? இந்திய பார்ப்பன ஆட்சியின் யோக்கியதையை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆனாலும், விடுதலைப் புலிகளுக்கும் பிரேமதாசா ஆட்சிக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தை தொடர்ந்து முன்னேற்றப் பாதையிலேயே சென்றுக் கொண்டிருந்தது. முதல் கட்டமாக இந்திய ராணுவம் இலங்கையை விட்டு வெளியேற வேண்டும் என்பதில் ஒருமித்த கருத்து உருவானது. அதனடிப்படையில் இந்திய ராணுவம் படிப்படியாக வெளியேற இந்தியா ஒப்புக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உருவானது. அதே நேரத்தில் வடக்கு கிழக்கு மாநிலத்தில் இந்தியா, ‘மாகாண சபை’ என்ற ஒரு பொம்மை ஆட்சியை உருவாக்கி, வரதராசப் பெருமாள் என்ற தனது ‘எடுபிடி’யை முதல்வராக நியமித்திருந்தது. அந்த ஆட்சிக்கு அதரவாக ‘தமிழ் தேசிய ராணுவம்’ என்ற ஒரு அமைப்பையும் இந்தியா உருவாக்கி வைத்திருந்தது. இந்த அமைப்பில் இடம் பெற்றிருந்த பெரும்பாலானவர்கள் சிறுவர்கள். அதேபோல் அம்பாறை மாவட்டத்தில் ‘குடிமக்கள் தொண்டர் படைகள்’ என்ற தனக்கு ஆதரவான அமைப்பை உருவாக்கி, அந்த அமைப்புக்கு ஆயுதங்களை இந்தியா வழங்கியிருந்தது. இந்திய ராணுவம் வெளியேறினாலும் இந்தியா உருவாக்கிய ‘விபிஷணப் படை’ ஈழத்தில் நிலை கொண்டிருந்த நிலையில் அந்தப் படைகளையும் கலைக்க வேண்டும் என்ற இலக்கை நோக்கி, பிரேமதாசா விடுதலைப் புலிகளின் மூன்றாம் கட்ட பேச்சு வார்த்தை முன்னேறியது. பிரேமதாசாவுக்கும் விடுலைப்புலிகளுக்குமிடையே நடந்த பேச்சுவார்த்தை வெற்றிப் பாதையில் விரைந்து செல்வதைக் கண்டு அதிர்ச்சியடைந்த இந்திய உளவுத் துறை அது பற்றி ரகசிய அறிக்கை ஒன்றை விரிவாகத் தயாரித்தது. (ectt (R&AW)UO No.1/17-A/89-SLM-346-6959)

அதே காலகட்டத்தில் இலங்கையின் முன்னாள் அமைச்சர் லலித் அதுலத் முதலி மற்றும் காமினி திச நாயகே இருவரும் விடுதலைப் புலிகளுடன் சமரசப் பேச்சுவார்த்தையை நிறுத்த வேண்டும் என்று சிங்களர்களிடையே தீவிரப் பிரச்சாரத்தைத் தொடங்கினர். கடும் நெருக்கடிக் குள்ளான பிரேமதாசா, ஒரு கட்டத்தில் வெளிப் படையாகப் பேசத் தொடங்கினார். இந்தியாவை வெளிநாட்டு சக்திகள் என்று குறிப்பிட்ட அவர், “வெளிநாட்டு சக்திகள், நாட்டின் நிலையான தன்மையைக் குலைக்க (Stability) திட்டமிடுகின்றன. அவர்கள் அரசியல் கொலைகளை நடத்த முயற்சிக் கிறார்கள்” என்று பிரேமதாசா பேசத் தொடங் கினார். 1991 அக்டோபர் 19 ஆம் தேதி இலங்கையின் கோவில் நகரமான கண்டியில் தன்னை பதவியி லிருந்து அகற்றிட மேற்கொண்ட சதித் திட்டங்களை வெற்றிகரமாக முறியடித்ததற்காக மாபெரும் பேரணி ஒன்றை பிரேமதாசா நடத்தினார். ‘ஜனநாயகத்தின் வெற்றி’ என்று அந்தப் பேரணிக்கு பெயர் சூட்டப்பட்டிருந்தது.

அதில் பேசிய பிரேமதாசா, *“எனக்கு எதிராக* ***அயல்நாட்டு சக்திகள்,*** *சதித் திட்டத்தில் இறங்கியுள்ளன. என்னுடைய அரசியல் எதிரிகளுக்கு இந்த சக்திகள் ஏராளமானப் பணம் தந்து எனக்கு எதிராக அணி வகுப்புகளை நடத்தச் சொல்கின்றன. அதற்கு பெரும் பணம் வாரி இறைக்கப்படுகிறது. அவர்களுக்கு எங்கிருந்து இவ்வளவு பெரிய தொகை வருகிறது? என்னை பதவியிலிருந்து நீக்க அவர்கள் போட்ட சதித் திட்டம் தோற்றுவிட்டதால், நாடாளுமன்ற அவைத் தலைவருக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அதுவும் தோற்கடிக்கப்பட்டது. இந்த அயல்நாட்டு சக்திகள் மூலம் எனக்கு எந்த நேரத்திலும் ஆபத்து ஏற்படலாம்.* ***நான் அரசியல் ரீதியாகப் படுகொலை செய்யப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை”*** - என்று பிரேமதாசா பேசினார். இந்திய தேசபக்தி பெருமை பேசுவோரையும், ராஜீவ் காந்தி உண்மையிலேயே ஈழத் தமிழர் பிரச்சினைகளை தீர்க்க முயற்சித்தார். அவரை கொன்று விட்டார்களே என்று பழித் தூற்றுவோரையும் கேட்கிறோம். இதுதான் இந்தியாவின் உண்மையான முயற்சியா? இதுதான் ஈழத் தமிழர் பிரச்சினையில் ராஜீவ் காந்தி காட்டிய கவலையா?

ஈழத் தமிழர் பிரச்சினையில் குழப்பங்களை உருவாக்கிய பார்ப்பன இந்தியாவின் இந்த படுபாதகங்களை மன்னிக்க முடியுமா?

பிரேமதாசா கொன்னதுதான் நடந்தது! 1993 ஆம் ஆண்டு பிரேமதாசா மே நாள் பேரணியில் பங்கேற்றபோது மனித வெடிகுண்டுக்கு பலியானார். பிரேமதாசா மே தின அணி வகுப்பில் வந்தபோது அவரது உதவியாளர் மிதிவண்டியை ஓட்டிக் கொண்டு வந்தார். அவர் பிரேமதாசாவின் வீட்டில் வேலை செய்யும் பணியாள். எனவே பாதுகாவலர்கள் பேரணிக்கு உள்ளே செல்ல அனுமதித்தனர். பிரேமதாசாவின் சமையல்காரர் பரிந்துரையில் இந்த பணியாள் வேலைக்கு சேர்க்கப்பட்டவர். பிரேமதாசாவை நெருங்கியவுடன் தனது இடுப்பில் மறைத்து வைத்திருந்த வெடிகுண்டை அவர் வெடிக்கச் செய்தார். இந்தத் தகவல்களை எல்லாம் ராஜீவ் சர்மாவே தனது நூலில் எழுதியிருக்கிறார். இவ்வளவையும் எழுதிவிட்டு, பிரேமதாசாவைக் கொன்றது விடுதலைப் புலிகள் என்று பழிபோட்டு விடுகிறார். *“குண்டு வெடிக்கச் செய்த நபர் தான் ஒரு எல்.டி.டி.ஈ. உளவாளி என்பதை நிரூபித்தார்”* என்கிறார் ராஜீவ் சர்மா. இறந்து போனவர் எப்படி தன்னை எல்.டி.டி.ஈ. உளவாளி என்று நிரூபிக்க

4 ஆம் பக்கம்

# பிரபாகரனை "தீர்த்துக்கட்ட" சோனியா பிறப்பித்த ரகசிய உத்தரவு?

ஈழத் தமிழர் பிரச்சினையில் அரசியல் தீர்வுக்கான முயற்சிகளை சீர்குலைத்து, ராணுவ மோதலுக்கு ஊக்கப்படுத்தியது இந்தியாவும் - சோனியாவும் தான் என்ற அதிர்ச்சியான தகவல்கள் வெளிவந்துள்ளன. தமிழ்நாட்டைச் சார்ந்த ஓய்வு பெற்ற அதிகாரிகள் குழு, ராஜபக்சேவுடன் மேற்கொண்ட பேச்சு வார்த்தைகளை இந்தியாவும் சோனியாவும் தடுத்து நிறுத்தியுள்ளனர். இதுபற்றி பேச்சு வார்த்தை முயற்சிகளில் ஈடுபட்ட ஓய்வு பெற்ற அய்.ஏ.எஸ். அதிகாரி எம்.ஜி.தேவசகாயம் மற்றும் 'ஸ்டேட்ஸ்மென்' ஆங்கில நாளேட்டின் மூத்த செய்தியாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற சாம் ராஜப்பா ஆகியோர் தனித்தனியாக எழுதிய கட்டுரைகள் - இணையதளங்களில் இடம் பெற்றுள்ளன.

குழுவில் இடம் பெற்றிருந்தவரும் ஓய்வு பெற்ற அய்.ஏ.எஸ். அதிகாரியுமான எம்.ஜி.தேவசகாயம் எழுதிய கட்டுரை:

அண்மையில் உலக நாடுகளையே அதிர்ச்சியடையச் செய்துள்ளது 'சேனல் 4' தொலைக்காட்சி வெளியிட்ட காட்சிகள். ஈழத் தமிழர்களை நிர்வாணமாக்கி, கண்களைக் கட்டி, சிங்கள ராணுவம் சுட்டுக் கொல்வதும், பெண்களை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்குவதும் இதில் இடம் பெற்றுள்ளது. அண்மையில் இலங்கை சென்று திரும்பிய பிரிட்டிஷ் முன்னாள் வெளியுறவு அமைச்சர் டேவிட் மில்லி பாண்ட், பிரான்சு முன்னாள் வெளியுறவு அமைச்சர் பெர்னார்டு கவுச்னார் ஆகியோர், "யுத்தம் முடிந்த பிறகு, தமிழர்கள் நான்காம் தர, அய்ந்தாம் தர குடிமக்களாகவே நடத்தப்படுகிறார்கள். வெளிநாட்டுக் கொள்கை என்று ஏதேனும் ஒன்று இருக்குமானால், உடனடியாக இந்த மோசமான மனித விரோத நடவடிக்கைகள் தடுக்கப்பட வேண்டும்" என்று எழுதியிருந்தனர். இந்த கொடூரமான மனித அவலங்களுக்குப் பின்னால், இந்தியாவின் பங்கு உண்டு என்பது, வெளிவராத உண்மை.

2005 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் இந்தியாவின் விருப்பத்துக்கு மாறாக ரணில் விக்ரமசிங்கே தோற்று, ராஜபக்சே வெற்றிப் பெற்றார். ராஜபக்சேவின் வெற்றியை விரும்பாத புதுடில்லி, அவரை அங்கீகரிக்காமல், ஓரம் கட்டி, ராஜபக்சேவை ஒதுக்கி வைத்துவிட்டது. இந்த நிலையில் தந்திரக்காரரான ராஜபக்சே, தன்னை நேர்மையாகக் காட்டிக் கொள்ளவும், இந்தியாவின் ஆதரவைப் பெறவும் விரும்பினார். அதற்காக ஈழத் தமிழர்களின் அரசியல் தீர்வுக்கான முயற்சிகளை மேற்கொள்ள முயன்றார். தமிழ்நாட்டைச் சார்ந்த தமிழின உணர்வு கொண்ட மூத்த அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு ஈழத் தமிழர் அரசியல் தீர்வுக்காக இந்தியா - இலங்கை நாடுகளுக்கிடையே உறவுப் பாலமாக செயல்படுமாறு கேட்டுக் கொண்டார். கொழும்பிலிருந்து வந்த இந்த வேண்டுகோளை ஏற்று, தமிழ் நாட்டில் ஓய்வு பெற்ற அய்.ஏ.எஸ். அதிகாரிகள், மூத்த பத்திரிகையாளர்கள், ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக் குழுவில் நானும் (எம்.ஜி. தேவசகாயம்) இடம் பெற்றிருந்தேன். குழுவின் முதல் கூட்டம் 2007 மே மாதம் 10 ஆம் தேதி சென்னையில் நடந்தது. ராஜபக்சேவின் மூத்த ஆலோசகர் கலந்து கொண்டார். இருதரப்பினரும் ஏற்கக்கூடிய அரசியல் தீர்வுக்கான திட்டம் ஒன்றை தயாரிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, தமிழக அதிகாரிகள் குழு கொழும்பு சென்று 2007 ஜூலை 17 அன்று ராஜபக்சேயையும் கொழும்பு உயர் மட்ட அதிகாரிகள் குழுவையும் சந்தித்தது. ராஜபக்சே விரிவாக பேசினார். அவரது பேச்சு மிகவும் ஈடுபாட்டுடனும், ஆக்கபூர்வமாகவும் இருந்தது. தமிழக குழுவின் கருத்துகளை ராஜபக்சே முழுமையாக ஒப்புக் கொண்டார். பிரச்னைகளுக்கான தீர்வு முதலில் அந்த நாட்டு மக்களிடமிருந்தே உருவாக வேண்டும் என்றும், அந்தத் தீர்வுத் திட்டங்கள் சர்வதேச கருத்துகளோடு, குறிப்பாக, இந்தியாவின் கருத்தைப் பெற்று திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்றும் நாங்கள் கூறினோம். ராஜபக்சேயும் ஏற்றுக் கொண்டார். இந்த சந்திப்புக்குப் பிறகு, தமிழர்கள் வாழும் வடக்கு - கிழக்குப் பகுதிகளை ஒன்றாக இணைத்து, சுயாட்சி வழங்கும் திட்டத்தை ராஜபக்சே அறிக்கையாகவே வெளியிட்டார். இதைத் தொடர்ந்து தமிழகக் குழு, ராஜபக்சே அமைச்சரவையில் இடம் பெற்ற அமைச்சர்களையும், உயர் அதிகாரிகளையும் தொடர்ந்து பலமுறை சந்தித்து, தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்க பல முயற்சிகளை மேற்கொண்டது. கடைசியாக, இலங்கை சட்ட அமைச்சர், ஆட்சி மொழி ஆணையத்தின் தலைவர் உள்ளிட்ட முக்கிய உயர் அதிகாரிகளை சந்தித்துப் பேசிய பிறகு ராஜபக்சேவுடன் முக்கியமான சந்திப்பு 2008 மார்ச் 25 இல் நடந்தது. அப்போது அரசியல் தீர்வு திட்டம் ஒன்று இறுதியாக்கப்பட்டது.

உடனே, கொழும்பிலிருந்த இந்திய தூதரகம் இதை அறிந்து ஆத்திரமடைந்தது. அதன் துணை ஆணையர் ஏ.மாணிக்கம், என்னை சந்திக்க நேரம் கேட்டார். நான் தங்கியிருந்த ஓட்டலுக்கு மாலை 5 மணிக்கு வரச் சொன்னேன். ஆனால், அந்த அதிகாரி வரவில்லை. அதற்கு பதிலாக எங்களுடன் பேசிக் கொண்டிருந்த கொழும்பு அதிகாரிகள் குழுவிடம், அங்கீகாரம் இல்லாத நபர்களிடம் எப்படி பேசலாம் என்று இந்திய தூதரகம் கடும் கண்டனம் தெரிவித்தது. பிறகு நான், நாங்கள் மேற்கொண்ட முயற்சிகளை விளக்கி, பிரதமரின் முதன்மைச் செயலாளர் டி.கே.எ. நாயருக்கு 2008 ஏப்ரல் முதல் தேதி விரிவான கடிதம் எழுதினேன். அவர், என்னுடன் பணியாற்றிய அதிகாரி நீண்ட காலப் பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வு உருவாகியுள்ள இந்த நல்ல வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு நான் கேட்டிருந்தேன். ஆனால், எந்த பதிலும் வரவில்லை" என்று அய்.ஏ.எஸ். அதிகாரி தேவசகாயம் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இது பற்றி மேலும் பல விவரங்களை 'ஸ்டேட்ஸ்மென்' ஏட்டின் ஓய்வு பெற்ற மூத்த செய்தியாளர் சாம் ராஜப்பா, தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

"தமிழக குழுவினர் அரசியல் தீர்வுத் திட்டத்தை உருவாக்குவதில் வெற்றிப் பெற்ற நிலையில், இந்தியா தனது போக்கை மாற்றிக் கொண்டு, விடுதலைப் புலிகளுக்கு எதிராக முழு ராணுவத் தாக்குதலைத் தொடங்குமாறு, ராஜபக்சேவுக்கு பச்சைக் கொடி காட்டியது. பிரபாகரன், உளவு பிரிவு தலைவர் பொட்டு அம்மன் ஆகியோரின் தலையை வெட்ட வேண்டும் என்றும், இதற்காக எந்த ராணுவ உதவியையும் இந்தியா வழங்கும் என்றும் சோனியா கூறினார் என்று கொழும்பு தகவல்கள் தெரிவித்தன. பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், வெளியுறவு செயலாளர் சிவசங்கரமேனன், பிரதமர் அலுவலகத்தில் செல்வாக்குள்ள அதிகாரிகள் குழு ஒன்றாக இணைந்து, நாட்டின் நலனைவிட சோனியாவின் விருப்பமே முக்கியம் என்று செயல்பட்டன. அதன் பிறகு, கொடூரமான இனப் படுகொலைகளை ராணுவம் நடத்தியது. அதுதான் 'சேனல் 4' வெளியிட்ட படுகொலை காட்சிகள். இலங்கையே இந்தப் புதைகுழியை வெட்டிக் கொண்டுவிட்டது. 'சேனல் 4' ஆவணங்களைப் பார்த்து உலக நாடுகள் எல்லாம் கண்டிக்கும்போது, இந்தியா மட்டும் எதுவுமே தெரியாதது போல் கள்ள மவுனம் சாதிப்பதற்கு காரணம் இதுதான். ஹேக் நகரிலுள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் ராஜபக்சேவும் அவரது பரிவாரங்களும் போர்க்குற்றவாளியாக நிறுத்தப்படும்போது, புதுடில்லியும், இந்தக் குற்றத்துக்கு உடந்தையாக இருந்ததிலிருந்து தப்பிவிட முடியாது. அதற்கான மணி ஒலிக்கத் தொடங்கி விட்டது" - என்று சாம் ராஜப்பா எழுதியுள்ளார்.

---

*முதல் பக்கத் தொடர்ச்சி*

மக்களும் பல்கலைக்கழக ஊழியர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

பகல் 1 மணிக்கு பெரியார் ஈ.வெ.ரா. கலைக் கல்லூரி முன்பு பரப்புரை கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சட்டக் கல்லூரி வாயிலில் நின்று துண்டறிக்கை வழங்கினர். மாலை 5 மணியளவில் ஜமால் முகமது கலைக் கல்லூரி வாயிலில் பரப்புரை நடைபெற்றது. பொது மக்கள், மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இரவு தோழர் குமார் இல்லத்தில் அனைவருக்கும் உணவு வழங்கினார். அனைத்து நிகழ்வுகளிலும் ஆறுமுகம், குமார் மற்றும் தமிழ்நாடு மாணவர் கழகம் கணிகாசெல்வன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

22.07.2011 காலை 8.30 மணிக்கு திருவரங்கம் அரசு மேனிலைப் பள்ளியில் பரப்புரை விளக்கக் கூட்டம் நடைபெற்றது. மாணவர்கள், பொது மக்கள் என அனைவரும் கலந்து கொண்டனர். திருச்சி மாவட்ட தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.முத்து வாழ்த்துரை வழங்கினார். திருவரங்க நகர செயலாளர் கலந்து கொண்டார். அசோக் அனைவருக்கும் காலை உணவு வழங்கினார்.

பகல் 1 மணியளவில் காட்டூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பரப்புரை நடைபெற்றது. மாணவர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர். திருச்சி மாவட்ட அமைப்பாளர் ஆரோக்கியசாமி அனைவருக்கும் உணவு வழங்கினார். இரண்டு நாள் இரவும் கழக ஆதரவாளர் ரெ.சு. மணியின் லட்சுமி மழையர் பள்ளியில் தோழர்கள் தங்கினர்.

அனைத்து இடங்களிலும் புதியவன் உரையாற்றினார். காவை. இளவரசன் மந்திரமா, தந்திரமா நிகழ்ச்சிகளின் வழியாக உரையாற்றினார்.

கலந்து கொண்ட தோழர்கள்: காவை. இளவரசன், புதியவன், அவினாசி செந்தில், திருச்சி ஆறுமுகம், பல்லடம் பகுதி மாணவர்கள் செந்தில், இராகவன், சரவணன், ஆனந்த், செல்ல முத்து, விஜய பிரசாத், பழனி கார்த்திக், காவை கணிகாசெல்வன்.

---

*3 ஆம் பக்கத் தொடர்ச்சி*

முடியும்? 'பிரேமதாசாவை புலிகள் கச்சிதமாக கொலை செய்தார்கள்' என்று மீண்டும் மீண்டும் இந்த நூல் பல இடங்களில் புலிகளைக் குற்றம் சாட்டுகிறது.

விடுதலைப் புலிகள் மீது கொலைக் குற்றம் சாட்டுகிறவர்கள் எப்படி, எங்கே, எந்த முறையில் கொலை செய்தார்கள் என்று எழுதுகிறார்கள். ஆனால் ஒரு கேள்வியை மட்டும் அவர்கள் தந்திரமாக விட்டுவிடுகிறார்கள். ஏன் கொலை செய்ய வேண்டும் என்பதுதான் அந்தக் கேள்வி!

பிரேமதாசாவிடம் நெருங்கிச் சென்று வெடிகுண்டை வெடிக்கச் செய்தவன் பெயர் பாபு. பிரேமதாசாவிடம் எப்போதும் நெருக்கமாக இருந்து, அவரது உணவு உள்ளிட்ட அன்றாட பணிகளைக் கவனித்துக் கொண்டு, பிரேமதாசாவின் நம்பிக்கைக்குரிய உதவியாளராக இருந்தவர் ஈ.எம்.பி. மொய்தீன். இவர் மது, மங்கை போன்ற பலவீனங்களுக்கு உள்ளானவர். இந்தத் தேவைகளை நிறைவேற்றித் தந்தவன் பாபு. மொய்தீனைப் பயன்படுத்தி பாபு, பிரேமதாசாவை நெருங்கி குண்டை வெடிக்க வைத்தான். இந்த உண்மைகளை ஊடகங்களும் வெளியிட்டன. ('AFP' - செய்தி நிறுவனம். 'ஜப்பான் டைம்ஸ்', ஜூன். 5, 1993)

பிரேமதாசா கொலையில் மறைந்து நிற்பது எவருடைய கரங்கள்?

**– அடுத்த வாரம்**

**"புரட்சிப் பெரியார் முழக்கம்"**

**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**

தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 99416 13535

Tamil Weekly

Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 28th July 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.